மலர் : 51

# சத்தியத்தின் குரல்

THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 51

# ✯ சத்தியத்தின் குரல் ✯


## Editorial Team

Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

**Guest Editors**

Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

**Staff Writers**

Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Abel R. Nayagam
Kingsly rajah

Translation : **B. Benny Martin**

Publishing Consultant

**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from

**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**



# அங்கத்தினராக்கிக் கொள்ளுதல்

*Placing Membership*

**Louis Rushmore**

இது வேதாகம தலைப்புகளோடு ஒத்துப் போனாலும் கூட வேத வாக்கியங்களில் நம்மால் காண முடிவதில்லை. உதாரணமாக, திரித்துவம் என்னும் வார்த்தை வேதாகமத்தில் இடம்பெறாவிட்டாலும் கூட அது அடையாளப்படுத்தும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் பற்றி வேதாகமம் போதிக்கிறது (மத்தேயு 28:19; அப்போஸ்தலர் 2:32-33:1 பேதுரு 1:2). வாலிபர்களுக்கான ஊழியம் என்னும் வாக்கியமும் கூட வேதாகமத்தில் இடம்பெறவில்லை. ஆனால், பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி பல வசனப் பகுதிகள் வாலிபருடைய பொறுப்புகள் பற்றியும், அவர்கள் மீதான பெற்றோருடைய பொறுப்புகள் பற்றியும் காணமுடியும். (உபாகமம் 6:1-9; 1 தீமோத்தேயு 4:12; 2 தீமோத்தேயு 2:22; எபேசியர் 6:4).

அங்கத்தினராக்கிக் கொள்ளுதல் என்னும் சொற்றொடரையும் தேவ ஆவியினால் ஏவப்பட்ட பக்கங்களில் நாம் காணமுடிவதில்லை. இருந்தபோதிலும், ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தங்கள் பிராந்திய சபைக்கு செய்ய வேண்டிய கடமை உண்டு. இதை நாம் பின்னர் பார்ப்போம். சுவிசேஷத்தினால் மனமாற்றமடைந்து ஞானஸ்நானத்திற்கென்று தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள் கர்த்தருடைய சபையிலே புதிய அங்கத்தினர்களாகிறார்கள். ஆனால், ஒரு குறிப்பிட்ட சபையில் அங்கம் வகிக்கும் சிலர் வேலையின் நிமித்தமாகவோ அல்லது வேறு ஏதாவது காரணத்தின் நிமித்தமாகவோ மாறிப்போனால் அவ்விடத்திலே காணப்படும் கர்த்தருடைய சபையோடு தன்னை இணைத்துக் கொள்வதுமில்லை. குறைந்தபட்சம் அப்பகுதியில் கர்த்தருடைய சபை இருக்கிறதா என்று தேடுவதுகூட இல்லை.

நாட்டின் ஒரு பகுதியிலுள்ள சபையில் அங்கம் வகிக்கும் அங்கத்தினர்கள் மற்றொரு பகுதிக்குக் குடிபோகும்போது கூட்டத்தில் தங்களை மறைத்துக் கொள்ள விரும்புவது போல் தெரிகிறது. அதேபோல், மூப்பர்களை ஏற்றுக் கொள்வதில் விருப்பமில்லை என்று தான் தெரிகிறது. அவர்கள் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஏதோ ஒரு சபையின் அங்கத்தினர்களாக இருந்தாலும் கூட புதிதாக வசிக்கும் இடத்தில் தங்களை அவர்கள் அங்கத்தினர்களாக அடையாளப்படுத்தாதபடியால், வேதாகமத்தின் அடிப்படையில் அவர்கள் பாதுகாப்பான இடத்தில் இல்லை. இவ்வகையான கிறிஸ்தவர்கள் சபை

சம்மந்தமான காரியங்களில் எந்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள விரும்புவதில்லை. இத்தகைய கிறிஸ்தவர்களை சகோ Wayne Price "சூட்கேஸ் கிறிஸ்தவர்கள்" என்றழைக்கிறார். அதே நேரத்தில் சகோதரர் Gus Nichols இவர்களை "மிதக்கும் மரக்கட்டைகள்" என்றழைக்கிறார்.

அங்கத்தினராக்கிக் கொள்ளுதல் என்பது ஒருவர் தன்னை பிராந்திய சபையோடு அடையாளப்படுத்திக்கொள்வது என்று பொருள்படும். பரிசுத்த வேதாகமத்தில் இச்சொற்றொடர் நேரடியாக இடம்பெறாவிட்டாலும், மறைமுகமாக இடம்பெற்றிருக்கிறது. பல வருடங்களுக்கு முன்பெல்லாம் அமெரிக்காவில் சபை அங்கத்தினர்கள் வேறொரு இடத்திற்கு மாறிப்போனால் அங்குள்ள சபைகளில் அவர்கள் இணைந்துக் கொள்ளத்தக்கதாக சிபாரிசு கடிதங்களை கொடுத்து அனுப்புவது கிறிஸ்துவின் சபைகளுக்கு வழக்கமாக இருந்தது. அவர்கள் முன்பு அங்கம் வகித்த சபையில் விசாரிப்பதும் வழக்கமாயிருந்தது. அது கிறிஸ்தவர்களை உற்சாகமாக நடைமுறைப்படுத்தியவர்களின் விவேகமான காரியம் மாத்திரமல்ல, அதற்கு வேத வாக்கியங்களின் ஆதரவும், ஆதாரமும் இருந்தது. அந்தக் காரியங்களை இன்றும் நாம் செய்கிறவர்களாயிருக்க வேண்டும்.

எல்லா சபை அங்கத்தினர்களும் இதே கொள்கையை அல்லது நடைமுறையைப் பின்பற்றினால் மூப்பர்கள் தங்கள் ஆடுகளின் ஆவிக்குரிய நலனில் அக்கறை செலுத்த அது எளிதாயிருக்கும். குறைந்தபட்சம் மூப்பர்களுக்கு மந்தையில் எந்தெந்த ஆடுகள் இருக்கின்றன என்பதாவது தெரியும்.



முதல் நூற்றாண்டில், சீஷர்கள் ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்குப் போகும்போது சிபாரிசு கடிதங்களை கொண்டு சென்றிருக்கிறார்கள். அப்போஸ்தலர் (1:8:27) பவுல் சிலருக்கு உபசார நிருபங்கள் அவசியம் என அறிவித்தார் (2 கொரிந்தியர் 3:1-3). அப்போஸ்தலனாகிய பவுல் தான் மனமாற்றமடைந்த பிறகு முதன் முதலாக எருசலேமுக்குச் சென்றபோது, எருசலேம் சபையிலே அவருக்கு சிபாரிசு அவசியப்பட்டது. அப்போது பர்னபா பவுலுக்காக சிபாரிசு செய்ததை நாம் காண முடியும் (அப்போஸ்தலர் 9:26,27).

அப்போஸ்தலனாகிய பவுல் எருசலேமிலிருந்த சபையோடு தன்னை இணைத்துக் கொள்ள முயற்சித்திருக்கிறார். சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே சேர்ந்து கொள்ளப் பார்த்தான். அவர்கள் அவனை சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள். (அப்போஸ்தலர் 9:26) மூல மொழியிலே மத்தேயு 19:5 இல் **இசைந்திருப்பான்** என்னும் வார்த்தைதான் அப்போஸ்தலர் 9:26ல் **சேர்ந்து கொள்ள** என்னும் வார்த்தைக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது. அப்போஸ்தலனாகிய பவுலே பிராந்திய சபையோடு தன்னை இணைத்துக் கொள்ள விரும்பியிருக்கிறாரென்றால் நாமும் அப்படிச்செய்யவேண்டுமா, வேண்டாமா?

இன்னும் கூடுதலாக, அநேக வேதாகம போதனைகள் கிறிஸ்தவர்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் உள்ள சபையோடு தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று போதிப்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

உள்ளூர் சபையைப் பொறுத்தவரை, அங்கத்தினராக இணைத்துக் கொள்ளுதல் என்னும் வெளிப்பாடு என்ன பொருள் கொடுக்கிறது? அந்த வெளிப்பாட்டை நாம் வேதத்தில் காணமுடியாது என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இதன் காரணமாக சிலர், இது வேத வாக்கியங்களுக்கு புறம்பான கருத்து என்று நினைக்கிறார்கள். அப்படியா? ரோமர் 16:1ல், பவுல் கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கேற்றபடி ஏற்றுக்கொண்டு எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்குத் தேவையாயிருக்கிறதோ, அதிலே நீங்கள் அவளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அவளை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன் என்று சொல்கிறார். பெபேயாளின் செயல்பாட்டுப் பகுதி அந்த கெங்கிரேயா சபையாகத்தான் இருந்தது. அவள் உலகளாவிய சபையை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. கெங்கிரேயாவிலிருந்த சபை, கொரிந்து பட்டணத்திலிருந்து மேற்காக 9 மைல்கள் தூரத்தில் அமைந்திருந்த ஒரு துறைமுகப் பட்டணத்தில் கூடிய தேவனுடைய ஜனங்களை உள்ளடக்கிய ஒரு பிராந்திய சபையாகவும், பவுல் பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு நிருபத்தை எழுதும்போது இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும், தீமோத்தேயும் பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும் கண்காணிக்களுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது என்று எழுதுகிறார்.

பரிசுத்தவான்கள் தாங்கள் இருக்க நேரும் பகுதியில் இணைந்து பணி செய்யும் அங்கத்தினர்களாயிருக்கிறார்கள். கண்காணிகள், பிராந்திய

சபையின் மூப்பர்கள் அல்லது மேற்பார்வையாளர்களாக இருக்கிறார்கள் (1 தீமோத்தேயு 3:1-7). உதவிக்காரர்கள் அந்த பிராந்திய சபையில் தகுதி பெற்ற பணியாட்களாக இருக்கிறார்கள் (1 தீமோத்தேயு 3:8-10). கிறிஸ்துவின் சபையின் பணிகளை மேற்பார்வை செய்ய மூப்பர்கள் (பன்மையில்) இருக்க வேண்டும் (அப்போஸ்தலர் 1:23; தீத்து 1:5). இந்த கண்காணிகள் தான் மந்தையை மேய்க்க வேண்டும். ஒரு சபையில் மூப்பர்களாக இருப்பவர்களுக்கு வேறொரு பிராந்திய சபையின் மீது அதிகாரம் செலுத்த எந்த உரிமையும் இல்லை (அப்போஸ்தலர் 20:28). ஒரு பிராந்திய சபையில் அங்கத்துவத்தை இணைத்துக் கொள்வது அவசியமானதா? உண்மையாகவே, அவசியமானதுதான்! அது வேத வாக்கியங்களின் அடிப்படையிலானதா? முற்றிலும் அப்படித்தான்! புதிய ஏற்பாடு நாம் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாகி, அங்கே கர்த்தர் நிமித்தம் சபையின் வளர்ச்சிக்காக பாடுபடுகிற மூப்பர்களின் தலைமைத்துவத்துக்கு கீழ்ப்படிய வேண்டுமென்று போதிக்கிறது. அப்போஸ்தலர் 20:28 மூப்பர்கள் தங்களிடையே இருந்த மந்தையை மேய்க்கும்படி கட்டளையிடுகிறது.

✝

---

## ஒன்றுமில்லாமையிலிருந்து மிகப்பெரிய உயர்வுக்கு

1. ***கிறிஸ்துவுக்குள் நமக்கு சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. (எபேசியர் 1:3).***

2. ***தேவன் நம்மை பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே (ரோமர் 6:16,17).***

3. ***நம் பெயர்கள் எல்லா புத்தகங்களைக் காட்டிலும் விலையேறப்பெற்ற ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன (லூக்கா 10:20)***



*நிர்வாக ஆசிரியர் உரை*

# யாருக்குத் தெரியும்?

*Yet who knows?*

**E.Z.S. Rajanayagam**

**தே**வன் நமக்கு இந்த ஆண்டை எதற்காகக் கூட்டிக் கொடுத்திருப்பார்? அது யாருக்குத் தெரியும்? மொர்தெகாய் கூட, எஸ்தரிடம் இதற்காகத்தான் இந்த மேன்மை உனக்குக் கிடைத்திருக்கிறதென்று சொல்லவில்லை. மாறாக, “இதற்காக இருக்கலாமே” என்று தான் கூறுகிறார். அதே போன்று, இந்தப் புதிய ஆண்டும், இதற்காகத் தான் நமக்குக் கிடைத்திருக்கிறதென்று நானும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. ஆனால், அது இதற்காக இருக்கலாமே, யாருக்குத் தெரியுமென்று நாம் அநேகக் காரியங்களைக் கூறமுடிந்தாலும், அவையெல்லாவற்றையும் இங்கே பார்க்க முடியாதாகையால், அவசியமான இரண்டை மாத்திரம் இப்பொழுது பார்ப்போம்.

**I) *நீங்கள் உண்மையான உபதேசத்தை அறிந்து கொள்ளும்படியாய் இருக்கலாம்.***

நம்முடைய தலைப்பின் கீழாக, நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல் பாடம், நாம் உண்மையான உபதேசத்தை அறிந்து கொள்ளும்படியாய் காலங்களைத் தன் கையிலே வைத்திருக்கிற தேவன், இப்புதிய ஆண்டை நமக்கு கூட்டிக் கொடுத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்? என்பது.

ஒருவேளை, நீங்கள் நினைக்கலாம், சொல்லுவதற்கு எத்தனையோ காரியங்கள் இருக்கும்போது, **உபதேசம் பற்றி நான் உபதேசம் பண்ணுகிறேனே என்று.** உபதேசம் அவ்வளவு முக்கியமானதா என்று கூட நீங்கள் எண்ணலாம்! ஆனால், தேவனுடைய உபதேசம், அவரை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்களுக்கு மிகவும் முக்கியமானதுதான். சந்தேகமில்லை.

நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்து, தன்னுடைய நாட்களில், தேவனால் கொடுக்கப்பட்ட மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல், மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்த பரிசேயர்களையும், வேதபாரகர்களையும் கடிந்து கொண்டார்.

அத்தோடு அந்த உபதேசங்களைப் பின்பற்றுவது வீண் என்று எடுத்துரைத்தார். (மத்.15:9). மேலும், பவுலடியார் கொரிந்தியருக்குச் சொல்லும்போது, "நான் உங்களுக்கு பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே" என்கிறார் (1. கொரி. 15:2). இந்த வசனங்கள், நமது பக்திக்குண்டான வாழ்வுக்கு, உபதேசமும், பிரசங்கமும் எவ்வளவு அவசியமானதென்பதைக் காட்டுகிறது.

கிறிஸ்துவானவர் இப்பூமியைவிட்டுச் செல்வதற்கு முன்பாகக் கொடுத்த பிரதான கட்டளையில், உபதேசத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். உலகமெங்கும் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று சொன்னவர் அத்தோடு நிற்காமல், "நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்றார். (மத்.28;19,20). ஆம். இயேசு போதித்த யாவற்றையும், இயேசுவானவர் அனுப்பிய தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தின எல்லாவற்றையும், இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். இயேசுவானவர், தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்திலே நிலைத்திருந்தால், மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்று கூறுகிறார். (யோவான் 8:31). அப்படியானால், உபதேசத்திலே நிலைத்திராவிட்டால், அவருடைய உண்மையான சீஷனாயிருக்க முடியாது. இதுதானே, அதன் பொருள். உபதேசம் முக்கியம் என்பதை, இயேசுவைவிட யார் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?

அப்படியானால், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில், நாம் செய்கின்ற அனைத்தும் உபதேசத்தின்படியாக இருக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளவேண்டும். இயேசுவின் நாட்களில், மனுஷருடைய கற்பனைகள் உபதேசங்களாக இருந்தது, இன்றைக்கும் அப்படியே உள்ளது. (மத்.15:2) பவுலின் நாட்களில் வேற்றுமையான உபதேசம் இருந்தது. (கலா. 1:6, 1. தீமோ. 1:3). அது இன்றைக்கும் இருக்கிறது. பேதுருவின் நாட்களில் கள்ளப்போதகர்கள் இருந்தார்கள். (II பேதுரு 2:1) கடைசி அப்போஸ்தலனான யோவானின் நாட்களிலும் கள்ளத் தீர்க்கதரிசிகள் இருந்தார்கள், இன்றைக்கும் இருக்கிறார்கள். கள்ள ஆவிகளும் இருந்தது. (1. யோவான் 4:1). அது அப்படியே நம்முடைய நாட்களிலும் இருக்கிறது. ஆகையால், நாம் அவைகளைச் சோதித்துப் பார்த்து மெய்யானதைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். (1 யோவான் 4:1 1.தெச.5:21).

ஆகையால், அருமையானவர்களே, இப்புதிய ஆண்டிலேயே இயேசுவின் மெய்யான சீஷனாயிருப்பதற்கு, அவரின் உண்மையான

உபதேசத்தைப் பின்பற்றத் தீர்மானிப்போம். அதற்காக, இந்த ஆண்டு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாமே, அது யாருக்குத் தெரியும்?

## II. ***நீங்கள் உண்மையாய் இரட்சிக்கப்படும்படியாய் இருக்கலாம்.***

நம்முடைய தலைப்பு நமக்குக் கற்றுத் தருகின்ற, அடுத்த பாடம், இப்புதிய ஆண்டு நாம் உண்மையாய் இரட்சிக்கப்படும்படியாய் இருக்கலாம், அது யாருக்குத் தெரியும்? என்பது.

உலகத்தில் பிறந்த எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1. தீமோ. 2:4) படைத்தவரின் சித்தம் இதுவாக இருந்தாலும், படைப்பாகிய மனிதன் இதுபற்றி கிஞ்சித்தும் அக்கறை கொள்வதில்லை. தான், இரட்சிக்கப்பட வேண்டுமென்ற உணர்வு இல்லாத ஒரு வாழ்க்கையைத் துணிகரமாய் நடத்திக் கொண்டிருக்கிறான். ஆனால், ஒன்று நிச்சயம், சரீரத்தில் அவனவன் செய்கின்ற காரியங்களுக்கான பலன் ஒரு நாளில் வெளிப்பட்டே ஆகும். (2 கொரி.5:10). அப்பொழுது யாரும் தப்பவே முடியாது.

தொட்டில் முதல் சுடுகாடு வரையிலான வாழ்க்கையில், மனிதன் எண்ணிலடங்காத கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறான். ஆனால், கேட்க வேண்டிய ஒரு கேள்வியாகிய, அவனுடைய நித்தியத்தைத் தீர்மானிக்கக் கூடிய கேள்வியாகிய, **இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?** என்று கேள்வியை மாத்திரம் ஏனோ கேட்கத் தவறி விடுகிறான். ஆனால், இந்தக் கேள்வியை ஒவ்வொருவரும் கேட்டு அதற்குச் சரியான பதிலைப் பெற்று, அதற்கு உண்மையாய்க் கீழ்ப்படிவார்களானால், அவன் வாழ்வு இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

இக்கேள்வியை இப்பூமியின் வாழ்வில் கேட்கின்ற வெகு சிலரும், இக்கேள்விக்கான பதிலை உண்மையாய்ப் பெற்று, அதற்கு முழுமையாகக் கீழ்ப்படிவதில்லை. இரட்சிப்புக்கான வழி இதுதான் என்று ஆளாளுக்கு ஒவ்வொரு விதமாய் போதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒளியின் மூலமாக இரட்சிக்கப்பட்டேன், சத்தத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டேன் என்று கூறுகிற மேதாவிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களை மேதாவிகள் என்பதா அல்லது அப்பாவிகள் என்பதா தெரியவில்லை. ஒருவேளை, ஒருவன் ஒளியின் மூலமும், சத்தத்தின் மூலமும் இரட்சிக்கப்படுவது உண்மையானால், அப்போஸ்தலன் பவுலை, தமஸ்குவின் நெடுஞ்சாலையில் இயேசுவானவர் ஒளியின் மூலமும், சத்தத்தின் மூலமும் சந்தித்தபோது, அவன் ஏன் இரட்சிக்கப்படவில்லை? சொல்லுங்கள். "நீ எழுந்து தமஸ்குவுக்குப் போ; நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும்" (அப்போஸ்தலர். 22:10) என்று ஏன் பவுலுக்கு

சொல்லப்பட்டது? மாத்திரமல்ல, அங்கு, “நீ எழுந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு” (அப். 22:16) என்று ஏன் போதிக்கப்ப்டடது? சிந்திப்போம்.

இரட்சிப்பு தேவன் சம்பந்தப்பட்டது. தேவன் சம்பந்தப்பட்ட யாவும் கிரமமாகவும், நல்லொழுக்கமாகவும் செய்யப்பட வேண்டும் (1 கொரி.14:40) இரட்சிப்பு நம்முடைய நித்தியம் சம்பந்தப்பட்டது. நித்தியம் சம்பந்தப்பட்ட யாவும் பயத்தோடும், பக்தியோடும் செய்யப்பட வேண்டும். (பிலி.2:12). அப்படியானால், நம்முடைய ஆத்தும இரட்சிப்பும், அதற்கான முயற்சியும் இந்தளவில் இருக்கிறதா? சொல்லுங்கள். “நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை” (அப். 4:12). “நாமம்” என்றால் “அதிகாரம்”. இரட்சிக்கப்படுவதற்கான அதிகாரத்தை தமது வசனத்தின் மூலமாகக் கொடுத்துள்ளார். நாம் உண்மையில் இரட்சிப்படைய வேண்டுமானால், அந்த இரட்சிப்பு வசனங்களின் போதனையின்படியாக இருக்க வேண்டும்.

இரட்சிப்படைவதற்கான வசனங்களின் போதனை இதோ, 1. தேவனை விசுவாசிக்க வேண்டும். (எபி.11:6 அப்.89:37). 2. பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். (2 பேதுரு 3:9, அப். 2;38) 3. இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும் (ரோமர்.10:9, 10 அப்.8:37). 4. பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற வேண்டும். (மாற்கு.16:16 அப். 22:16). இதன்படி நாம் செய்தால், நாம் இயேசுவின் நாமத்தினாலே உண்மையாய் இரட்சிக்கப்பட்டவர்களாவோம்.

அருமையானவர்களே, இப்புதிய ஆண்டை தேவன் எதற்காக நமக்குக் கூட்டித் தந்திருக்கிறார் என்று தெரியாது. ஆனால், உண்மையான உபதேசமும், உண்மையான இரட்சிப்பும், இருக்க வேண்டிய அளவுக்கு இல்லாத இந்தக் காலத்தில், நீ உண்மையான உபதேசத்தையும், அதனடிப்படையில் உண்மையான இரட்சிப்பையும் பெற்று கொள்ளும்படியாய் இருக்கலாமே, யாருக்குத் தெரியும். உன்னையும், என்னையும் தேவன் இந்தளவு நேசித்திருக்கும்போது, நாம் ஏன் அவர் சித்தம் செய்ய நம்மை ஒப்புக் கொடுக்கக்கூடாது? ✝

**மார்க்கம்**

**கிறிஸ்தவம் ஜீவ மார்க்கமாக, இரட்சிப்பின் மார்க்கமாக, சேவையின் மார்க்கமாக, நம்பிக்கையின் மார்க்கமாக இருக்கிறது. இம் மார்க்கத்தின் மூலமாகத்தான் நாம் இந்த வாழ்க்கையை அனுபவிக்கிறோம். இனிவரும் உலகில் நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வோம் (1 பேதுரு 3:18; யோவான் 10:10; லூக்கா 19:10; 1 யோவான் 2:25).**



# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| அங்கத்தினராக்கிக் கொள்ளுதல் | - LOUIS RUSHMORE | ... 1 |
| யாருக்குத் தெரியும்? | - EZS RAJANAYAGAM | ... 5 |
| பெற்றோர்களுக்கு ஒரு கடிதம் | - J.C. CHOATE | ... 11 |
| இயேசு உங்களை விட்டுப் போகும்படி.... | - JERRY BATES | ... 15 |
| நன்றி மனப்பான்மை | - P.C. PHILEMON RAJAH | ... 19 |
| தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் | - ARJUNAN | ... 22 |
| தேவ பக்திக்குரிய இரகசியம் | - BENNY MARTIN | ... 26 |


## தேவன் - God


| | | |
|---|---|---|
| தயவா அல்லது கண்டிப்பா? | - ROBERT JOHNSON | ... 29 |
| இயேசு வித்தியாசமானவராக இருந்தார் | - GARY C. HAMPTON | ... 32 |
| அவர் தரிசனமானார் | - CECIL MAY JR | ... 34 |


## சாட்சியங்கள் - Evidence


| | | |
|---|---|---|
| வெளிப்படுத்தப்படுவதற்கு முன்பு | - BETTY BURTON CHOATE | ... 38 |
| முழு சூரிய கிரகணம் தேவனால்... | - DAVID R. KENNEY | ... 42 |


## தேவனுடைய வார்த்தை - The Word of God


| | | |
|---|---|---|
| வேத வசனங்களை மனப்பாடம்... | - WES MC ADAMS | ... 45 |
| விசுவாசத்திற்குரிய வார்த்தைகளில்... | - MARILYN LASTRAPE | ... 47 |


## இரட்சிப்பு - Salvation


| | | |
|---|---|---|
| எது ஒரு பொருளை பொக்கிஷமா... | - CHARLES R. ROSE | ... 51 |
| மீட்டமைத்தல் | - BRAIN R. KENYON | ... 53 |


## சபை - Church


| | | |
|---|---|---|
| சபைக்காக கிறிஸ்துவின் மாதிரி | - PAUL HOLLAND | ... 57 |
| ஆசீர்வாதத்தை பகிர்ந்து கொள்ளுங்கள் | - DEREK BROOME | ... 62 |
| ஒரு வளரும் சபை | - STEVE HIGGINBOTHAM | ... 64 |

## வாழ்வதற்கான உபதேசம் - Doctrine to Live By


| | | |
|---|---|---|
| இரட்சிக்கப்படுவதன் மூலமாக இழந்து.. | - SHANE FISHER | ... 68 |
| பெண்கள் ஏன் சபையில்... | - JACK WILKIE | ... 72 |


## செயலில் கிறிஸ்தவம் - Christianity in Action


| | | |
|---|---|---|
| சிறப்பான ஊழியத்திற்கான ஆறு... | - DALE JEKINS | ... 76 |
| இவைகள் இல்லாதவன் எவனோ | - THERMON HODGE | ... 80 |
| மோசமான கலாச்சாரத்தின் மத்தியில் | - FENTER D. NORTHERN | ... 82 |


## ஆராதனை - Worship


| | | |
|---|---|---|
| II நாளாகமம் 29:25 | - HUGO MCCORD | ... 84 |


## அனுதின கிறிஸ்துவ ஜீவியம் - Daily Christian Living


| | | |
|---|---|---|
| இன்று தீர்மானம் என்னுடையது | - PAUL MOWRER | ... 86 |
| நிறம் மாறாத ரோஜாக்கள் | - RAYMOND ELLIOTT | ... 88 |


## கிறிஸ்தவ இல்லம் - Christian Home


| | | |
|---|---|---|
| தகப்பன்மார் தினத்தில் | - JOHN GIPSON | ... 91 |
| மகிழ்ச்சியாய் இருப்பதற்கான... | - DENNY PETRILLO | ... 93 |
| சிற்பி’ | - NAT EVANS | ... 95 |
| எனவே, உங்கள் பிள்ளைகள்... | - BOB HOWTON | ... 98 |


## வசனப்பகுதி பாடங்கள் - Textual Studies


| | | |
|---|---|---|
| மலைப்பிரசங்கத்திற்கு ஓர் அறிமுகம் | - RONALD D. REEVES | ... 100 |


## வேதாகம கதாபாத்திரங்கள் - Bible Characters


| | | |
|---|---|---|
| சத்திரக்காரன் | - DAY TON KEESEE | ... 104 |
| பர்னபா : ஊக்கப்படுத்துகிறவன் | - JERRY KENDALL | ... 107 |

# பெற்றோர்களுக்கு ஒரு கடிதம்

*A Letter To Parents*

**J.C.Choate**



**பி**ரியமான அப்பா மற்றும் அம்மாவுக்கு,

தேவனுடைய தயவினாலும், இரக்கத்தினாலும் உங்களுக்கு பிள்ளைகள் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் அன்னாள் செய்தது போல செய்யவில்லை; நீங்கள் உங்கள் பிள்ளைகளை தேவனுக்கு கொடுப்பதாக வாக்களிக்கவில்லை, இருந்தபோதிலும், அதுவே உங்கள் இலக்காக இருக்கவேண்டும்.

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்துவது (நீதிமொழிகள் 22:6) உங்கள் பொறுப்பாக இருக்கிறது. இப்போது, அவர்கள் சிறுபிராயத்தில் இருக்கும்போது அவர்கள் வாழ்வின் அடித்தளம் போடப்படுகிறது என்பதை உணர்கிறீர்களா? இப்போது அவர்கள் கற்றுக்கொண்டு விரும்பிச் செய்கின்ற காரியங்களை, பிற்பாடும் அவர்கள் கற்றுக்கொண்டு விரும்பிச் செய்வார்கள். எனவேதான், கிறிஸ்தவ மார்க்க சம்மந்தமான காரியங்களை அவர்கள் வாழ்வின் ஓர் அங்கமாக ஆக்குவது மிக முக்கியமாகும்.

இன்று பல குடும்பங்களில் தாயும், தகப்பனும் வீட்டை விட்டு வெளியே போய் வேலை செய்யும் சூழ்நிலை உள்ளது. உங்கள் வேலை உங்கள் முழு நேரத்தையும் எடுத்துக் கொள்ளுகிறபடியால் தேவனுடைய வார்த்தையை உங்கள் பிள்ளைகளோடு படிக்க நேரம் மீதமில்லை என்று உணர்கிறீர்களா? வேலை முடிந்து வீட்டுக்கு வரும் மாலை வேளையில் சமையல் செய்ய வேண்டியதாயிருக்கிறது. துணி துவைக்க வேண்டியதாயிருக்கிறது. பிள்ளைகளின் வீட்டுப் பாடத்தை மேற்பார்வை செய்ய வேண்டியதாயிருக்கிறது. இன்னும் விளையாட்டு பயிற்சிகள், செயல்பாடுகள் என்று பலபல வேலைகள் வந்து நேரத்தை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. மனம் திறந்து பேசுவதற்கோ அல்லது குடும்ப வேதபாடத்திற்கோ நேரம் எங்கே இருக்கிறது? எது முக்கியமானது? பல வேளைகளில் நாம் வேலைகளைக்கூட பிற்பாடு செய்து கொள்ளலாம். ஆனால், பிள்ளைகளின் வாழ்க்கையில் <u>பிற்பாடு</u> என்பது சரியாகாது. ஏனெனில், அவர்கள் சீக்கிரமாக வளர்ந்து வாழ்க்கையைப் பற்றி தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று உணர்ந்து விடுவார்கள். ஆனால், அவர்களுடைய வாழ்க்கை தேவ அறிவில்லாத, வெறுமையான வாழ்க்கையாகத்தான் இருக்கும். அதன்பின்பு நற்காரியங்கள் குறித்து



உங்கள் தாக்கம் ஒன்றுமில்லாமல் போய்விடும்; மேலும், ஓர் ஆத்துமாவை தேவனுக்காக வளர்க்கும் வாய்ப்பையும் இழந்துவிடுவீர்கள்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும், புதன்கிழமைகளிலும் மட்டும் தேவனுக்கடுத்த காரியங்கள் பேசப்படும் ஒரு வீட்டில் ஒரு குழந்தை வளர்க்கப்படுமானால் பழியை யார் மீது போடுவது அல்லது யாரை குற்றப்படுத்துவது? உங்கள் பிள்ளைகள் வேத பாடவகுப்பில் என்ன கற்றுக் கொண்டார்கள் என்பதைப் பற்றி அவர்களிடம் பேசுகிறீர்களா? அவர்கள் மனப்பாட வசனங்களை, படிப்பதில் அவர்களுக்கு உதவி செய்கிறீர்களா? பள்ளி சம்மந்தமான காரியங்கள், சபைக்கடுத்த காரியங்கள் என்றுவரும்போது எதற்கு முக்கியத்துவம் அல்லது முதலிடம் கொடுக்கிறீர்கள்? உங்கள் பிள்ளைகளிடம் விளையாட்டு அல்லது அவர்கள் விளையாடும் வீடியோ கேம் பற்றி அடிக்கடி பேசுவீர்களா? அப்படிச் செய்வதன் மூலமாக அவர்களுக்கு அவைகள்தான் முதன்மையான காரியங்கள் என்றும், ஆவிக்குரிய காரியங்களில் அவர்களுடைய வளர்ச்சி இரண்டாம் பட்சம்தான் என்று காட்டுகிறீர்களா?

உங்கள் மாதிரியினாலும், உங்கள் பிள்ளைகளோடு மனம் திறந்து பேசுவதினாலும் தேவனிடத்தில் அன்பு கூருவதும், அவருக்கு முதலிடம் கொடுப்பதும் அவர்களுடைய வாழ்வின் கவனமாக இருப்பது மாத்திரமல்ல, அவர்கள் வாழும் அபாயகரமான இவ்வுலகில் பாதுகாப்பானது என்பதையும் அவர்களுக்கு போதிக்கிறீர்களா? சிறு

பிள்ளைகளாக எவ்வித பாவங்களும் செய்யாதபடி பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதன் முக்கியத்துவத்தை அவர்கள் கற்றுக் கொண்டால் சாத்தானின் சோதனை வலையில் விழாமல், அதன் பயங்கரமான விளைவுகளை எதிர்கொள்ளாமல் காப்பாற்றப்படுவார்கள். கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆவிக்குரிய பிரகாரமாக பலமாக தயாராக்கி விட்டால், உலகத் தன்மையினால் அவர்கள் தாக்கப்படாமல், அதை மேற்கொள்வார்கள்.

உங்கள் பிள்ளைகள் மீது தவறான தாக்கத்தை ஏற்படுத்தும் நண்பர்களிடம் சேரவிடாமல் ஒரு பெற்றோர் என்னும் நிலையில் உங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்கிறீர்கள்? நீங்கள் பெற்றோர்களாக, உங்கள் பிள்ளைகள் தங்கள் நண்பர்களை கிறிஸ்தவத்தை அனுபவிக்கவும், அவர்களை வேத பாட வகுப்புக்கும், வேதாகம முகாமுக்கும் அழைத்து வர உதவுகிறீர்களா? சரியான முறையில் பிள்ளைகளை வளர்க்கவில்லையென்றால் அதன் விளைவு நித்திய அழிவாயிருக்கும்.

நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே எப்போதும் வாழ்வில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதையும், கர்த்தருடைய சபையில் உண்மையாக அங்கம் வகிக்கும் ஒருவரை வாழ்க்கைத் துணையாக தெரிந்தெடுப்பதைப் பற்றியும் போதிக்கிறீர்களா? குழந்தைகள் ஆண்களாகவும், பெண்களாகவும் வளர்ந்து, அவிசுவாசிகளை திருமணம் செய்து கடைசியில் தேவனை விட்டும், சபையை விட்டும் கொஞ்சம் கொஞ்சமாக விலகிப் போகும் போது தான் நம் தவறை உணர்கிறோம். ஓ! அப்போது அதிக காலதாமதமாகிவிடும். அப்போது நம் விண்ணப்பங்களும், வருத்தங்களும், கண்ணீர்களும் ஏற்கனவே தீர்மானீக்கப்பட்ட செய்யப்பட்ட நித்திய சேதத்தை ஒன்றுமே செய்ய முடியாது. சில வேளைகளில் கிறிஸ்தவர்களல்லாத துணையை நாம் கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், பெரும்பாலும் எதிர்மறையாகவே நடக்கிறது. ஒரு கிறிஸ்துவன் தேவனிடத்திலிருந்து விழுந்து போகும்போது, அவனுடைய பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் தேவனுடைய குடும்பத்தில் அங்கம் வகிக்க மாட்டார்கள்! பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கர்த்தருக்குள் உண்மையாக இருப்பவர்களை விவாகம் செய்வதின் அதிக முக்கியத்துவத்தை அழுத்தமாக சொல்லாததின் காரணமாக பல தலைமுறைகள் நித்தியநித்தியமாக அழிந்து போய்விட்டா

கிறிஸ்தவ இல்லங்களில்கூட, வீட்டை விட்டு பிள்ளைகள் கல்லூரி போகும்போது எத்தனை சதவீதத்தினர் தேவனை விட்டும், சபையை விட்டும் விலகிச் செல்கிறார்கள்? புள்ளி விவரங்கள் மூன்றில் இரண்டு என்று சொல்கிறது. மிகவும் சிறிய சதவீதத்தினரே திரும்பி வருவார்கள். அவர்கள் தங்கள் வாழ்வில் உண்டான மிகப்பெரிய மாற்றத்திற்கு என்ன காரணங்களை கொடுக்கின்றனர்?

முதலாவது, கிறிஸ்தவம் அவர்களுக்கு மேலோட்டமாகத்தான் புகட்டப்பட்டிருக்கிறது. எனவே, உங்கள் பிள்ளைகள் தேவனுக்கு தங்களை அர்ப்பணிப்பதுதான் வாழ்வில் முக்கியமானது என்பதை கற்றுக்கொள்வதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். இரண்டாவது, பெற்றோர் பள்ளியில் குழந்தைகள் கற்றுக் கொள்ளும் நாத்தீக போதனைகளை எதிர்கொள்ள வேண்டும். பரிணாமக் கொள்கைகளும், அதன் பொய்களும் தேவன் மற்றும் வேதாகமத்தின் மீதான நம்பிக்கையை ஒன்றுமில்லாமல் செய்வதற்கான பதில்களாக இருக்கின்றன. பரிணாம வளர்ச்சி என்பது விஞ்ஞானப் பூர்வமாக ஒரு பெரும் பொய்யாகும். ஆனால், பெற்றோர் தங்கள் குழந்தைகளைப் பாதுகாக்கும்படியாக இப்பாடத்தை தங்கள் பிள்ளைகளோடு சேர்ந்து படிக்க வேண்டும். மூன்றாவது, உலகத்தால் பாலியல் ரீதியான ஒழுக்கக் கேடுகள் பொழுதுபோக்கு அம்சங்களின் ஒவ்வொரு உருவத்திலும் சாதாரணமான ஒன்றாக காட்டப்படுகிறது. இப்பெரும் ஆபத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டியது அவசியமாகவும், அவசரமாகவும் இருக்கிறது. நான்காவது, அவர்களின் நெருக்கமான உறவு சபையில் இல்லாமல் உலகத்தில் இருக்கலாம். அதன் விளைவாக, அவர்கள் உலகத்தோடே சென்று விடுவார்கள்.

பெரும்பாலான நேரங்களில் பிள்ளைகள் கிறிஸ்தவ மார்க்கம் எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்வதில்லை. அவர்கள் சிறுவயதாயிருக்கும்போதே சத்தியம் அவர்கள் மனதில் புகுத்தப் படாவிட்டால், அவர்கள் ஒரு போதும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாக மாறாமலே போகலாம். எனவே, உங்கள் பிள்ளைகளுக்காகவும், உங்களுக்காகவும் உங்கள் இல்ல வாழ்வின் மையப்பகுதியாக தேவன் இருக்கிறார் என்பதைக் காணமாட்டீர்களா? குழந்தைகளின் ஆத்துமாக்கள் ஆபத்தில் இருக்கின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## ஆவிக்குரிய குடும்பம்

**கிறிஸ்வர்கள் ஆவிக்குரிய குடும்பத்தால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள். அன்பு அக்கறை மற்றும் கரிசனை போன்றவைகள் ஆவிக்குரிய குடும்பத்தாரிடமிருந்து கிடைக்கும் விலையேறப்பெற்ற ஆசீர்வாதங்களாகும். ஒரு நாள் பரலோகத்திலே இந்த ஆவிக்குரிய குடும்பம் மறுபடியும் ஒன்றிணைவதை நாம் அனுபவிப்போம். அந்த நாள் வர நாம் ஆயத்தமாயிருக்கிறோமோ?**



# இயேசு உங்களை விட்டுப் போகும்படி கேட்டுக்கொள்வீர்களா?

*Would you ask Jesus to Leave?*

**Jerry Bates**

**நா**ம் லூாக்கா 8:26-39 வசனங்களில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி வாசிக்கிறோம். இயேசுவும், அவருடைய சீஷர்களும் கலிலேயக் கடலில் புயல் காற்று வீசிய அந்த பயம் நிறைந்த இரவை கழித்த பின் படவிலிருந்து இறங்கினார்கள். அந்த இரவில் சீடர்கள் தாங்கள் மரித்துப் போவதாக நினைத்தார்கள். இயேசு காற்றையும், கடல் கொந்தளிப்பையும் அதட்டினார். அங்கே அமைதலுண்டாயிற்று. அவர்கள் கதரேனருடைய நாட்டிற்கு வந்தபோது, அவர்கள் சந்தித்த முதல் நபர் பிசாசுகளால் பிடிக்கப்பட்டிருந்த அந்த மனிதன் தான். இவனுடைய குடியிருப்பு கல்லறைகளில் இருந்திருக்கிறது. இவன் மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தியைப் பெற்றிருந்தது போல் தெரிகிறது. ஏனென்றால், இவன் சங்கிலிகளினாலும், விலங்குகளினாலும் கட்டப்பட்டிருந்தும் அவைகளையெல்லாம் முறித்துப் போட்டிருக்கிறான். இயேசு இந்த மனிதனை சுகப்படுத்தி இவனுக்குள்ளிருந்த அசுத்த ஆவிகள் பன்றி கூட்டத்திற்குள் போகும்படி அனுமதித்தார். உடனே, ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம் கடலில் பாய்ந்து அமிழ்ந்து மாண்டது(மாற்கு5:13).

இப்படி ஒரு சம்பவம் ஏன் நடந்தது என்று நீங்கள் எண்ணலாம் அல்லது யார் இந்த பிசாசுகள் அல்லது வேறு ஏதாவது கேள்விகள் உங்கள் மனதில் இருக்கலாம். ஆனால், நான் அந்த ஜனங்கள் எப்படி பதில் அளித்தார்கள் என்பதைக் குறித்து சிந்திக்குமாறு உங்களை கேட்டுக் கொள்கிறேன். நடந்த சம்பவத்தை பார்த்த பிறகு ஜனங்கள் மிகவும் பயந்து, தங்களை விட்டுப் போகும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள். பிசாசுகள் விட்டுப் போன மனுஷன் வஸ்திரந்தரித்து இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு பயந்தார்கள் என்று வசனம் சொல்கிறது (8:35, 37). அவர்கள் ஆயிரக்கணக்கான பன்றிகளைப் பற்றி பயப்படவில்லை. அவர்கள் கல்லறைகளில் நிர்வாணமாய் வாழ்ந்த பிசாசு பிடித்திருந்த மனுஷனைப் பற்றிப் பயப்படவில்லை. ஆனால், அவர்கள் பிசாசுகள்

விட்டுப்போன மனுஷன் வஸ்திரந்தரித்து இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு பயந்தார்கள் (8:35). அவர்கள் இயேசு தங்களை விட்டுப் போகும்படி வேண்டிக்கொள்ளும் அளவுக்கு பயந்தார்கள். அவர்கள் பிசாசுகளிடமிருந்து விடுதலைப் பெற்ற மனிதன் இப்போது நல்ல நிலையில் இருக்கிறான் என்பதை குறித்து எந்த மகிழ்ச்சியும் அடையவில்லை. அவர்கள் இயேசுவின் வல்லமையைக் குறித்து ஆச்சரியப்பட்டதாக எங்கும் குறிப்பிடவில்லை.

அசுத்த ஆவிகள் மீதான வல்லமையைக் குறித்து இந்த ஜனங்கள் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள் என்று நாம் நினைக்கலாம். அதேபோல் அந்நாட்களில் இந்த மனிதன் மாத்திரம் பிசாசினால் பிடிக்கப்படவில்லை, வேறு சிலரும் இருந்தார்கள். அப்படியே பல்வேறுபட்ட நோய்களினால் பாதிக்கப்பட்ட வேறு சிலரும் இருந்தார்கள். இந்த ஜனங்கள் அப்படிப்பட்டவர்களை சுகம் கிடைப்பதற்காக இயேசுவினிடத்தில் அழைத்து வருவதற்குப் பதிலாக தங்களை விட்டுப் போகும்படியாக இயேசுவை வேண்டிக் கொண்டார்கள் (8:37).

மேற்சொல்லப்பட்ட செயல்பாடுகள் நம்மில் பலருக்கு மிஞ்சின அநியாயமாகத் தோன்றினாலும் கூட, இது நம்மை ஆச்சரியப்படுத்தக் கூடாது. துரதிஷ்டவசமாக மனித இனம் தேவனுக்கும், அவருடைய நீதிக்கும் இவ்விதமாகவே தொன்றுதொட்டே பதில் அளித்துவருகிறது. ஆதியிலே ஏதேன் தோட்டத்தில் ஆதாமும், ஏவாளும் பாவம் செய்யாதவரை தேவனோடு சுதந்திரமாக நடந்தார்கள். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து எந்தப் பாவமும் செய்யாத போதும், யூதத்தலைவர்கள் அவரைக் கொல்ல விரும்பினார்கள். இயேசு அந்த மதத் தலைவர்களின் தவறுகளை சுட்டிக்காட்டினபடியாலும் தேவனுடைய அன்பையும், மன்னிப்பையும் எல்லோருக்கும் எடுத்துரைத்தபடியாலும் அவர்களால் வெறுக்கப்பட்டார்.

நம் நவநாகரீக உலகிலும் அது உண்மையாயிருக்கிறது. நாம் பொல்லாப்போடு இசைந்து வாழப் பழகிவிட்டோம். உலக முழுவதிலுமுள்ள சமுதாயங்கள் வன்முறை, மதுபானம், போதை வஸ்துக்கள், **முறிந்த** வீடுகள் மற்றும் ஒழுக்கக் கேட்டினால் உண்டான வியாதிகள் போன்றவற்றால் நிறைந்திருக்கிறது. நாம் இதைக் குறித்து வெட்கப்படுவதோ, பயப்படுவதோ இல்லை.

இருந்த போதிலும், யாரையோ ஒருவரை இயேசுவின் நாமத்தில் எழுதவோ பேசவோ விட்டு இவ்வுலகில் பாவம்தான் பிரச்சனை, நீதிதான் அதற்கான தீர்வு என்று சுட்டிக்காட்டும்போது சமுதாயம் அந்த நபர் அமைதியாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறது. மேலும், அந்த

எழுத்தாளர் அல்லது பேச்சாளர் அன்பு மற்றும் சகிப்புத்தன்மை இல்லாத காரணங்களுக்காக கடுமையாக விமர்சிக்கப்படுகிறார். இவ்வுலகம் நீதிக்கு பயந்து தேவனுடைய மனிதன் அமைதியாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறது. அதைத் தொடர்ந்து, நாமும் கிறிஸ்தவர்களாக தீமைக்கு எதிராகப் பேச பயப்படுகிறோம்.



இயேசு கிறிஸ்துவால் கதரேனருடைய நாட்டிலேயே தங்கி, அந்த ஜனங்களை வற்புறுத்தி தம்மை அவர்கள் ஏற்றுக்கொள்ள செய்திருக்க முடியும். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் மனமுவந்து அவ்விடத்தை விட்டுச் சென்றார். ஆனாலும், அவர் எவ்விதச் சாட்சியுமின்றி அவ்விடத்தை விட்டுச் செல்லவில்லை. பிசாசுகள் நீங்கின மனுஷன் அவரோடே கூட இருக்கும்படி உத்தரவு கேட்டான். ஆனால், இயேசு அவனை நோக்கி நீ உன் வீட்டுக்கு திரும்பிப்போய், தேவன் உனக்கு செய்தவைகளையெல்லாம் அறிவி என்று கட்டளையிட்டார் (லூக்கா 8:39). சுகமாக்கப்பட்டவன் தெக்கப்போலி முழுவதும் பயணித்து நற்செய்தியைப் பரப்பினான். இதன் காரணமாக இயேசு இப்பகுதிக்கு திரும்பி வந்த போது ஜனங்களெல்லாரும் அவருக்காகக் காத்திருந்தபடியால் அவரைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள் (லூக்கா 8:40).

இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தை விட்டுப் போன நிலையில் நாமும் இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இருக்கிறோம். அவர் எவ்வித ஆதாரமுமின்றி இவ்வுலகத்தை விட்டுச் செல்லவில்லை. நாம் இம்மனிதனைப் போல் ஊர் ஊராகப் போய் இயேசுவைப் பற்றி சாட்சி சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆனால், இயேசு கிறிஸ்து பற்றிய

நற்செய்திகளை சொல்லியே ஆக வேண்டும். நாம் உலகெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் பிரதான கட்டளையைப் பெற்றிருக்கிறோம் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15,16). அவருடைய ஊழியக்காரர்கள் சிலுவையின் செய்தியை அறிவிக்காவிட்டால், பின்னே யார் அறிவிப்பார்கள்?

கிறிஸ்தவர்கள் உலகத்தால் அடிக்கடி அச்சுறுத்தப்படுகிறபடியால் இயேசு தங்கள் வாழ்வில் செய்த காரியங்களை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்ல தயங்குகிறார்கள். இம்மனிதன் எவ்வித சந்தேகமுமின்றி இயேசு கிறிஸ்துவைக் குறித்து உற்சாகத்துடனும், உறுதியுடனும் பேசியிருக்கிறான். இவன் கற்பனை செய்ய முடியாத பாடுகளை அனுபவித்துக் கொண்டிருந்தான். ஆனால், இப்போது இயேசுவின் வல்லமையினால் இவன் முழுமையாய் சுகமடைந்திருக்கிறான். நாம் சரீரப் பிரகாரமாக இவனைப் போல் பாடுகளை அனுபவிக்காமல் இருக்கலாம். ஆனால் பாவப் பாடுகளை சுமந்து கொண்டிருக்கிறோம். இந்த மனிதனுடைய பாடுகளைவிட கொடுமையான பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டதை மற்றவர்களுக்கு அறிவிப்பதில் நாம் ஏன் தயக்கம் காட்டுகிறோம்? மற்றவர்களுக்கு நாம் எடுத்துரைக்கத் தயங்கினால் கல்வாரியின் அர்த்தத்தை உண்மையாக புரிந்து கொள்ளத் தவறிவிட்டோம். இந்த மனிதனை உபத்திரவப்படுத்திய பிசாசுகள் தங்களுக்காக வைக்கப்பட்டிருந்த தண்டனையைக் குறித்து பயந்தன (யாக்கோபு 2:19). கிறிஸ்து இல்லையென்றால் நமக்கும் இதே கதிதான். ஆயினும், கல்வாரி மூலமாக நாம் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். இந்த ஈவைக் குறித்த சரியான புரிந்து கொள்ளுதல் கிறிஸ்து நமக்கு செய்தவைகளைக் குறித்து உலகிற்கு எடுத்துரைக்க நம்மை ஏவ வேண்டும். இம்மனிதன் தனக்கான கட்டளையை நிறைவேற்றியதைப் போல் நாமும் நமக்கான கட்டளையை நிறைவேற்றுவோமாக!

✝

## இயேசுவை பின்பற்ற...

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பதன் பொருள் என்னென்ன செய்யப்பட வேண்டுமோ அதைச் செய்ய இருப்பதாகவும், அது கர்த்தருக்காக மற்றவர்கள் காரியங்களை ஆற்ற அவர்களுக்கு உதவுவதையும் உள்ளடக்கும். கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுவது என்பதன் பொருள் நாம் தேவனுடைய ராஜ்ஜியத்திற்காக வேலை செய்வதாகும்.

# நன்றி மனப்பான்மை

*Attitude of Gratitude*

## P.C. Philemon Rajah

### 1. *கர்த்தருக்கு நன்றி கூறினர்*

ஆதியாகமம் 24:26, 27 "அப்பொழுது இந்த மனிதன் தலைகுனிந்து, கர்த்தரை பணிந்து கொண்டு, என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் தம்முடைய கிருபையையும், தம்முடைய உண்மையையும் என் எஜமானை விட்டு நீக்கவில்லை; நான் பிரயாணம் பண்ணி வருகையில், கர்த்தர் என் எஜமானுடையசகோதரர்வீட்டுக்குஎன்னைஅழைத்துக்கொண்டுவந்தார் என்றான்."

கர்த்தரிடத்தில் தங்கள் நன்றி மனப்பான்மையை வெளிப்படுத்தி, அவருக்கு நன்றி கூறினார். அவருக்கு நன்றி சொல்வதன் மூலம் தங்கள் நன்றியுணர்வினை வெளிப்படுத்தினான்.

நாம் ஒரு காரியத்திற்காக அநேக முறை ஜெபிக்கின்ற பழக்கமுடையவர்களாக இருக்கின்றோம். மிகவும் கண்ணீரோடே, பாரத்தோடே ஜெபிப்போம் அந்த காரியம் வாய்த்த பின்பு எத்தனை முறை அதற்காக கர்த்தரிடத்தில் நன்றி சொல்லி ஜெபித்தோம்? ஒன்று தேவை என்றால் அதற்காக அதிகாலை, நண்பகல், மாலை, இரவு என இடைவிடாமல்ஜெபித்துக்கொண்டே இருக்கிறோம். அவைகளைகர்த்தர் கொடுத்துவிட்டபின்பு இடைவிடாமல்நன்றிகூறுகின்றோமோ?

10 தொழுநோயாளிகள் வந்து குணமாக்கும்படி வேண்டினர்; 10 பேருமே செல்லும் வழியில் குணமாகினர். ஆயினும், ஒருவன் மாத்திரம் தான் மறுபடியும் வந்து நன்றி சொன்னான்; அவனையே ஆண்டவர் இயேசு பாராட்டினார் (லூக்கா 17:11-19). நாம் நம்முடைய தேவைக்காக பரலோக பிதாவை நோக்கி வேண்டிக் கொள்வது போலவே, அவைகளுக்காக அவருக்கு நன்றி சொல்லுகின்றவர்களாக இருக்கின்றோமா? அவ்வாறு செய்கின்றவர்கள் இருந்தால், தொடர்வோம், இல்லாவிட்டால் இன்றிலிருந்து துவக்குவோம். இந்த ஆண்டில் இதுவரை கர்த்தர் நமக்கு செய்தவைகளை நினைத்து, இந்த மாதம் முழுவதும் இடைவிடாது நன்றி சொல்லுவோம். நமதுநன்றிமனப்பான்மையைவெளிப்படுத்துவோம்.

### 2. *கர்த்தரை புகழ்ந்து துதித்தனர்*

யாத்திராகமம் 15:1-3 "அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்து பாடின பாட்டு: கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்; குதிரையையும், குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார். கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர்

எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்; கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்."

கர்த்தரிடத்தில் தங்கள் நன்றி மனப்பான்மை வெளிப்படுத்திட, அவர்கள் துதித்தனர். அவரைப் புகழ்ந்து பாடுவதன் மூலம் தங்கள் நன்றியுணர்வினை வெளிப்படுத்தினர்.

பைபிளில் நிறைய இடங்களில், நிறைய நபர்கள் இவ்வாறு செய்தார்கள் என நாம் வாசிக்க முடியும். பைபிளில் மிக நீண்ட புத்தகமான சங்கீதம், கர்த்தரை புகழ்ந்து அவர்கள் பாடிய பாடல்களே அதிகம் நிறைந்துள்ளதாக இருக்கின்றது. அதிலும் சங்கீதக்காரன் தாவீது, எல்லா சூழலும் அவரை புகழ்ந்து பாடுகின்றவராக இருந்தார். சங்கீதம் 34:1,3 "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக"

நாம் கர்த்தரைப் புகழ்ந்து அவருக்கு புகழ்மாலை சூட்டுகின்றவர்களாக இருக்கின்றோமா? பாடல்களை மனப்பாடமாக பாடுகின்றோமா? மனதிலிருந்து பாடுகின்றோமா? கர்த்தரை வாயினால் தான் துதிக்க வேண்டும் (ரோமர் 15:5). ஆனால், வெறும் வாய் மட்டுமே துதிப்பதாக இருந்தால் அந்தத் துதி கர்த்தருக்கு உகந்ததாக இருக்குமா? இராது என்பது நாம் அறிந்ததே மத்தேயு 15:8 "இந்த ஜனங்கள் தாங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது."

ஆகையால், கர்த்தரை துதிக்கின்ற காரியத்தில் நமது இருதயமும், உதடும் ஒன்றாக இணைந்து செயல்பட்டு, அவரை மகிமைப்படுத்திடச் செய்து, நமது நன்றி மனப்பான்மையை வெளிப்படுத்துவோம்.

### 5. *கர்த்தருக்காக, கடைசிவரை நின்றனர்.*

எபிரேயர் 11:33-38 "விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள். பட்டயக் கருக்குக்குத் தப்பினார்கள். பலவீனத்தில் பலன்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்திரீகள் சாகக் கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்: வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு,

விடுதலைப்பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள்; வேறு சிலர் நிந்தைகளையும், அடிகளையும், கட்டுகளையும், காவலையும் அனுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும், வெள்ளாட்டுத் தோல்களையும், போர்த்திக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள்; உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும், மலைகளிலேயும், குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும்சிதறுண்டு அலைந்தார்கள்."

கர்த்தருக்காக, கர்த்தருடன் கடைசிவரை நிலைநின்று தங்கள் நன்றி மனப்பான்மையை வெளிப்படுத்தினர். எவ்வளவு பெரிய புயல் வீசி அவர்களது வாழ்வை சின்னாபின்னமாக்கினாலும், அத்தனை துன்பங்களையும் மகிழ்வுடன் வரவேற்றனர். நிந்தனைகள் (அவமானங்கள்) அனைத்தையும் தங்கள் சிந்தனையில்கூட சுமக்கவில்லை. அவர்கள் தங்கள் இருதயத்தில் ஏதோ ஒரு மூலையில் கர்த்தருக்கு இடமளிக்காமல், தங்கள் இருதயம் முழுவதையும் அவரையே ஆக்கிரமித்து வைத்திருந்தனர். அதனால் எக்காரணத்தைக் கொண்டும் பின்னிட்டு பார்க்கவில்லை.

உலகத்தின் கவலை அவர்களை அழுத்தவுமில்லை, ஐசுவரியத்தின் மயக்கமும் அவர்களுக்கு ஏற்படவில்லை. காரணம் அவைகளுக்கு, அவர்கள் வாய்ப்புத் தரவில்லை. இந்த உலகத்தின் பின்னே ஓடாமல், இயேசுவின் பின்னே ஓடினர். இன்றைய நாட்களிலும் அநேகர் இவ்வாறு ஓடிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

ஆயினும், நாம் அவ்வாறு ஓடுகின்ற கூட்டத்தில் இருக்கின்றோமா? இல்லை சற்றே ஒதுங்கி நிற்கின்றோமா? எனக்கு மரியாதை தரவில்லை, என்னை வரவேற்கவுமில்லை, நான் சொல்வதை கேட்கவுமில்லை என நம்மையே மையமாக வைத்து வாழ்கின்றோமா? நாம் எதற்காக இயேசுவின் பின்னே போகத் துணிந்தோம் அதனை மறந்துவிட்டோமா? அன்று இயேசுவின் பின்னே வர பாவமன்னிப்பும், பரிசுத்தமும், பரலோகமும், தேவ அன்பும், கிறிஸ்துவின் இரத்தமும் காரணமாக இருந்ததல்லவா? இன்று விலகி நிற்க என்ன காரணம் என சிந்திப்போம். ஆவிக்குரியவர்களாகிய நாம் ஆவிக்குரியவைகளுக்காக ஆண்டவரை பின்பற்றினோமே! இன்று சரீரத்திற்குரியவைகளுக்கும், இவ்வுலகத்திற்குரியவைகளுக்கும் நம்மை இழந்து விட்டோமா? சத்தியத்திற்காகவாழ்கின்றோமா? அல்லது சவுகரியங்களை நோக்கிப் பயணிக்கின்றோமா?

✝

# தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்

*Humble Himself shall be Exalted*

**Arjunan**

**த**ன்னை உயர்வாக கருதுகிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். நம்மை நாமே உயர்வாக கருதுவதற்கு என்ன இருக்கிறது. நம்மால் ஏதாவது ஒன்றை உருவாக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ முடியுமா? ஆதிமுதலாக மனிதன் இந்த உலகத்தை சுற்றிச் சுற்றி வருகிறான். அவனால் செய்ய முடிந்தது அதுவே. வேறொன்றையும் செய்ய முடியாது. இப்படியிருக்கிறபடியால்; இயேசுவானவர் சொல்வதைக் கவனிப்போம்; "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்.23:12). சொல்லப்பட்ட வசனத்தை கவனித்தீர்களா? உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். பார்வோன் என்ற எகிப்தின் அதிபதி தன்னை முழுவதுமாக உயர்த்தினான். அவனை **மனமடிவமையச்** செய்யும்படியாக தேவன் அவனிடத்தில் மோசேயையும், ஆரோனையும் அனுப்பினார்.

"அப்படியே மோசேயும் ஆரோனும் பார்வோனித்தில் வந்து; உன்னைத் தாழ்த்த நீ எதுவரைக்கும் மனதில்லாதிருப்பாய்? என் சமூகத்தில் எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களைப் போகவிடு" என்று சொல்லும்படி தேவன் இவர்களைப் பார்வோனிடத்திற்கு அனுப்பினார் (யாத்.10:3). இதைக் கேட்ட பார்வோன் கொஞ்சமும் அசையவில்லை. எகிப்தின் அதிபதியாகிய அவன் மேட்டிமையுள்ளவனாகவும் இஸ்ரவேலை அற்பமாகவும் எண்ணி அவர்களை கொடுமையாக வேலை வாங்கி அடிமையாக வைத்திருந்தான். இதற்கு ஏற்றாற்போல பார்வோனின் ஜனங்கள் இவர்கள் பலுகிப் பெருகாதபடி ஆலோசனை சொல்லி பல உபாய தந்திரங்களை கையாண்டார்கள். இருந்தபோதிலும், இஸ்ரவேலர் தேவனுடைய ஆசீர்வாதத்தினாலே பலுகிப் பெருகினார்கள். இதைப் பொறுக்க மனதில்லாதிருந்த பார்வோன் இஸ்ரவேலை செங்கல் சூளையில் வேலை வாங்கி கொடுமைப்படுத்தினான். அவர்களோ தேவனை ஆராதிக்கும்படி எங்களை அனுப்பிவிடவேண்டும் என்று சொல்லி பத்துமுறை முறையிட்டார்க்ள. எகிப்திலே அநேக வாதைகளை தேவன் ஏற்படுத்தினார். அவனோ அவர்களை போகவிடாதிருந்தான். கடைசி வாதையில் பார்வோன் பயந்துபோய் அவர்களை அனுப்பிவிட்டான். பின்பு அவர்களை துரத்த ஆரம்பித்தான். செங்கடல் நடுவாக தேவன் பெரிய வெற்றியை இஸ்ரவேலுக்கு கட்டளையிட்டார். "ஜலம் திரும்பி வந்து, இரதங்களையும்

குதிரைவீரரையும், அவர்கள் பின்னாகச் சமுத்திரத்தில் பிரவேசித்திருந்த பார்வோனுடைய இராணுவம் அனைத்தையும் மூடிக்கொண்டது: அவர்களில் ஒருவனாகிலும் தப்பவில்லை" (யாத். 14:28)). தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் என்ற வசனத்தின்படி அவனுடைய ஜனங்களும் தாழ்த்தப்பட்டு அழிந்து போனார்கள்.

புதிய ஏற்பாட்டில் ஏரோதைக் குறித்து படிக்கிறோம், "அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான்" (அப்.12;23). அவன் பேசும்போது ஜனங்கள் இது மனுச சத்தமல்ல, தேவ சத்தம் என்றார்கள். அதை அவன் ஏற்றுக்கொள்ளும்போது அவன் அடிக்கப்பட்டான். மற்றவர்களால் புகழப்படுவதை விரும்பினான். தன்னை தேவனுக்குச் சமமாக ஜனங்கள் பேசுவதை பெருமையாக எண்ணினான். ஆகையால், கர்த்தர் அவனை அடித்தார். மனுஷனுக்கு ஏற்படும் புகழ்ச்சி கண்ணியை வருவிக்கும் என்ற வசனத்தின்படி அவனுக்குச் சம்பவித்தது.

தன்னை ஒருவன் தாழ்த்தும்போது அவனுக்கு வரக்கூடிய ஆசீர்வாதங்கள் அதிகமாயிருக்கும். ஆண்டவர் இயேசு; "தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி.2:6-8). மேலான இடத்திலிருந்து கீழான இடத்திற்கு வருவது கூடாத காரியம் என்று அநேகர் கருதுகின்றனர். இயேசு தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே தாழ்த்தியிருக்கும்போது நாம் எம்மாத்திரம். நம்மையும் தாழ்த்தவேண்டுமல்லவா? நாம் மண்ணாயிருக்கிறோம். அவர் தேவனுடைய சமூகத்திலிருந்து வந்து மாம்சத்திலே நம்மை மீட்கும்படியாக பிறந்தவர். அவர் மரணபரியந்தம் தம்மை தாழ்த்தியிருக்கிறார் எனக் காண்கிறோம். நாமும் இவ்விதமாக இயேசுவை மாதிரியாக கொண்டு நம்முடைய வாழ்க்கையில் நம்மை முழுவதுமாக தேவசமூகத்தில் தாழ்த்துவோம். அப்பொழுது தேவனால் உயர்த்தப்படுவோம். "நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு" என கொலோ.3:12-ல்


வாசிக்கிறோம். நாம் நமக்காக வாழாமல் கர்த்தருக்காக தேவனுடைய சித்தம் நிறைவேறும்படியாக ஒப்புக் கொடுப்போம். நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆகையால், இயேசுவைப்போல இரக்க சிந்தையுடையவர்களாகவும், தாழ்மையுள்ளவர்களாகவும், சாந்தமுள்ளவர்களாகவும், நீடிய பொறுமையுள்ளவர்களாகவும் இருந்து பிதாவாகிய தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து வாழும்போது தேவனால் இயேசுவைப் போல உயர்த்தப்படுவோம். கர்த்தர் நம்மை உயர்த்த வல்லவராயிருக்கிறார். மனிதனுக்காக தாழ்மையாய் நடக்க முற்படாதிருங்கள். அது மாய்மாலமாக இருக்கும். தேவன் நம்மை அறிகிறார் என்ற உணர்வு எப்பொழுதும் நமக்கு இருக்க வேண்டும். “கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள். அப்பொழுது அவர் உங்களைஉயர்த்துவார்”(யாக்4:10).

தாழ்மைக்கு இருவருடைய ஜெபத்தை ஆண்டவர் நமக்கு எடுத்துக்காட்டாக சொல்லுகிறார். “இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள். ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன், பரிசேயன் நின்று: தேவனே! நான் பரிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு; தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த்தன் வீட்டுக்குத்திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில், தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்” (லூாக்.18:10-14). இந்த இரண்டுபேரில் பரிசேயனுடைய ஜெபம் நிராகரிக்கப்பட்டது. அவன் மேட்டிமையாக, தன்னைத் தாழ்த்தாமல் ஜெபித்தான். ஆனால், ஆயக்காரனோ தன்னை முழுவதுமாக தாழ்த்தி தான் ஒரு பாவி என்பதை அறிக்கையிட்டு கிருபையாய் இரங்கும்படி கேட்டுக்கொண்டான். ஆகையால், அவன் நீதிமானாகக்கப்பட்டவனாய் வீடு திரும்பினான். உங்களுடைய ஜெபம் எப்படிப்பட்டதாயிருக்கிறது. நீங்கள் உங்களை தேவ சமூகத்தில் தாழ்த்தும்போது கர்த்தரால் உயர்த்தப்படுவீர்கள். உங்களுடைய ஜெபம் ஆயக்காரனுடைய ஜெபத்தைப்போல இருக்கட்டும்.

தேவன் பெருமையுள்ளவர்களுக்குஎப்படிப்பட்டவராயிருக்கிறார்?

“தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது” (யாக். 4:6). மற்றவர்கள் பெருமையுள்ளவர்களுக்கு எதிராக இருக்கிறார்களோ இல்லையோ தேவன் அப்படிப்பட்டவர்களுக்கு எதிராளியாக இருக்கிறார். அவருடைய சமூகத்திலிருந்து ஓர் ஆசீர்வாதமும் பெருமையுள்ளவர்களுக்கு வந்து சேராது. ஆகையால், உங்களில் பெருமை, அதாவது மேட்டிமை, தன்னைத்தான் உயர்த்துவது போன்ற மோசமான எண்ணங்கள் இருக்குமானால் அவைகளை உங்களை விட்டு அகற்றிப் போடுங்கள். தேவனுக்குப் பிரியமானதைச் செய்யும்படியாக உங்களை அவருடைய சமூகத்திற்கு ஒப்புக்கொடுங்கள். பெருமையோடு வாழ்ந்து மரித்தவர்களுடைய நிலைமை என்னவானது என்பதை அறிந்து கொள்ளுங்கள். அப்படி வாழ்ந்து மரித்தவர்களை வேதாகமத்தில் பார்க்கலாம். அவர்களுடைய முன்னிலைமையைக் காட்டிலும் பின்னிலைமை மிகவும் கேடுள்ளதாகப் போயிருக்கும். அந்தவிதமாக போய்விடாதிருக்க பெருமையை உங்களில் உண்டாக்கும் மாம்ச இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும் இடமளிக்காது கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருக்க நாடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். †

## இவைகளில் வளரவேண்டும்



1. **நம்பிக்கையில் வளர வேண்டும்**
2. **பொறுமையில் வளர வேண்டும்**
3. **நன்றியாய் இருப்பதில் வளர வேண்டும்**
4. **சேவை செய்தில் வளர வேண்டும்**
5. **மகிழ்ச்சியாய் இருப்பதில் வளர வேண்டும்**
6. **பிறருக்கு உதவி செய்வதில் வளர வேண்டும்**
7. **தேவனுக்குள் வளர வேண்டும்**



# தேவபக்திக்குரிய இரகசியம்

*The Mystery of Godliness*

**Benny Martin**

**ந**ம் அன்றாட வாழ்வில் யாரோ ஒருவர் ஆரோக்கியத்திற்கான, பொருளாதார வளர்ச்சிக்கான, ஆனந்தத்திற்கான இரகசியத்தை உங்களுக்குச் சொல்லப்போகிறேன் என்று சொன்னால் அந்த இரகசியம் என்னவென்று அறியும் வரை அலைபாயும் மக்கள் மனம். இரகசியம் என்னும் வார்த்தைக்கு தொன்று தொட்டே ஒரு தொடர்பும், ஒரு ஈர்ப்பும் இருக்கத்தான் செய்கிறது. பக்தி என்பது மனிதனுடைய உடலோடும், உள்ளத்தோடும், உணர்வோடும் இரண்டறக் கலந்த ஒன்றாகவே காணப்படுகிறது. ஆனால், தேவ பக்தி அதிலிருந்து வேறுபடுகிறது. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் தேவ பக்தியை விசுவாசத்தோடு வெகுவாக வெளிப்படுத்த கட்டளையிடப்பட்டிருக்கிறோம். ஆனால், வானுலகின் வாரிசுகள் என்று வாயார வாழ்த்திக் கொள்ளும் கிறிஸ்தவர்கள் தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்துத் திரிவது வேதனை அளிக்கிறது.

சரி பிரியமானவர்களே, நாம் தலைப்பில் காணும் தேவ பக்தியின் இரகசியம் என்னும் சொற்றொடர் 1 தீமோத்தேயு 3:16ல் இடம் பெற்றிருக்கிறது. இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் தேவ பக்திக்குரிய இரகசியமானது எவ்வித முரண்பாடுமின்றி, விவாதமுமின்றி எல்லாரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது என்று அறிவிக்கிறார். இங்கே இரகசியம் என்னும் பதம் ஏதோ புரியாத புதிர் என்னும் பொருளைக் கொடுக்காமல் அல்லது மொழிபெயர்க்கப்படாமல் ஒரு காலக்கட்டத்தில் மறைக்கப்பட்டிருக்கிற ஒன்று இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்றுதான் மூலமொழியில் பொருள் கொடுக்கிறது. இவ்வார்த்தை கிறிஸ்து இப்பூமியில் மனித இனத்துக்கு இரட்சிப்பை நல்க வந்ததோடு தொடர்புபடுத்தப்படுகிறது. 1 தீமோத்தேயு 3:16ல் பயன்படுத்தப்பட்டிருக்கிற ஆறு சொற்றொடர்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, தேவ பக்திக்குரிய இரகசியத்தைக் குறித்து நாம் தெளிவடைந்து விடுவோம். இப்போது வேதத்தின் வெளிச்சத்தில் நாம் இவ்வசனத்தைக்காண்போம்.

## I. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்

இது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாம்சத்தையும் இரத்தத்தையும் உடைய மனிதனாக இவ்வுலகத்தில் அவதரித்ததைத்தான் குறிக்கிறது (யோவான் 1:1-3,14). இது

இப்பூமியில் மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்து தேவன் என்று தெளிவுபடுத்துகிறது. ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியான பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார் (எபிரெயர் 2:14 15). உண்மையாகவே, நம்முடைய பாவங்களை தம்முடைய சரீரத்தில் சுமந்து நாம் ஆவிக்குரிய பிரகாரமாக சுகமடைவதற்கும், நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கும் பாவம் அறியாத கிறிஸ்து நமக்கு அனுமதி கொடுத்தார். மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத, விசுவாசியாத இரக்கமற்ற இருதயங்கள் இப்பூமியில் இருக்கத்தான் செய்கின்றன. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல. (1யோவான்4;3).

## II. ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்.

இவ்வசனப் பகுதியில், "நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்" என்பது இயேசு தமக்கு எதிராக வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்தும், பழிகளிலிருந்தும் பரிபூரணமாக விடுவிக்கப்பட்டார் என்றுதான் பொருள்படுகிறது. நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பலவிதங்களில் தவறாக குற்றஞ்சாட்டப்பட்டார் (மத்தேயு 11:19; 1:24), பாவமறியாத அவர் அநியாயமாக அக்கிரமக்காரராலே கொல்லப்பட்டார். (அப்போஸ்தலர் 2:22, 23). இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவராலே எல்லாக்குற்றச்சாட்டுகளிலிருந்தும் குற்றமற்றவராக தீர்க்கப்பட்டார்.

## III. தேவதூதர்களால் காணப்பட்டார்:

தேவ தூதர்கள் இயேசுவின் பிறப்புத் தொடங்கி அவருடைய பூமிக்குரிய வாழ்க்கை முழுவதும் அவருக்குப் பணிவிடை செய்து அவருடைய வாழ்க்கையோடு ஒன்றியிருந்தார்கள் என்று வேத வாக்கியங்களில் நாம் வாசிக்கிறோம் மத்தேயு 4:11; லூக்கா 22:43; மத்தேயு 28:1-8; அப். 1:9-11 தேவ தூதர்கள் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் காணப்பட்டிருக்கிறார்கள். இந்த தேவ தூதர்கள் இயேசு கிறிஸ்துவின் ஜீவன், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் தேவனுடைய குமாரனாக பரமேறுதலில் தேவ பக்திக்குரிய இரகசியம் வெளிப்பட ஆசையாயிருந்திருக்கிறார்கள் (1பேதுரு1:12)

## IV. புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார்:

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் உலகெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டார் (மத்தேயு 28:18, 20) மாற்கு 16:15, 16). அவர்கள் இயேசுவே கிறிஸ்துவென்று முதலில் யூதர்களிடத்தில் பிரசங்கித்தார்கள் (அப்.5:42). அதன் பின்புதான் புறஜாதிகளிடத்தில் இயேசுவைப் பிரசங்கித்தார்கள்.

## V. உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்:

இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய பிரசங்கம் வல்லமையுள்ளதாக இருந்தது (1 கொரி 15:1-4). அச்செய்தி எந்த அளவு வல்லமையுள்ளதாக இருந்ததென்றால் அது உண்மையும், நன்மையுமான இருதயங்களில் விசுவாசத்தை உண்டு பண்ணியது (ரோமர் 10:17; யோவான் 20:30, 31). அந்த முதல் நூற்றாண்டு சுவிசேஷத்திற்கு இன்றும் உண்மையும், நன்மையுமான இருதயங்களில் விசுவாசத்தை உண்டுபண்ணும்வல்லமை உண்டு.

## VI. மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்:

இது தெளிவாகவே இயேசு கிறிஸ்துவின் பரமேறின சம்பவத்தைக் குறிக்கிறது (அப்.1:9-11) அது மட்டுமல்லாமல் இது ஆச்சரியமூட்டும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலு-மாயிருக்கிறது. சங்கீதம் 16:8-11; 24:7-10; தானியேல் 7:13-14), உண்மையாகவே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார், இந்த அழகான சொற்றொடரில் ஈடுபடுத்தப்பட்டிருகிற காரியங்களைக் கவனியுங்கள், கொலோ 2:14, 15 வசனங்களில் கிறிஸ்து சத்துருக்களை முறிடியத்து வெற்றி சிறந்திருக்கிறார். அப். 2:33ல் அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டார் என்று வாசிக்கிறோம். ✝

### தெரிந்து கொள்ளுங்கள்

**யோர்தான் நதி அது தொடங்கும் இடமான வடக்கு பாலஸ்தீனத்திலிருந்து அது வெறுமையாகும் சவக்கடல் வரை 200 மைல் நீளத்தைக் கொண்டுள்ளது. இது சராசரியாக ஒரு மைலுக்கு 22 கன அடி தண்ணீரை வெளியேற்றி உலகிலேயே மிகவும் தாழ்வான நீர் நிலைக்கு தண்ணீரைக் கொடுக்கிறது.**

## தேவன்

# தயவுள்ளவரா அல்லது கண்டிப்புள்ளவரா?

*Kindness or Severity*

**Robert Johnson**

**ப**ழைய ஏற்பாட்டின் தேவன், புதிய ஏற்பாட்டின் தேவனிலிருந்து வேறுபட்டவராகத்தான் இருக்க வேண்டுமென்று நம்புகிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் இப்படி நம்புவதற்கான காரணம், பழைய ஏற்பாட்டில், தேவன் பழிவாங்குகிறவராகவும், உடனே தண்டிக்கிறவராகவும், ஆயிரக்கணக்கான ஜனங்களைக் கொல்பவராகவும் அவர்களுக்குத் தெரிகிறார். ஆனால், புதிய ஏற்பாட்டில் வெளிப்பட்டிருக்கும் தேவன் அன்பும், அக்கறையும், இரக்கமும் உள்ளவராகப் பார்க்கப்படுகிறார். நிச்சயமாகவே, இங்கே உண்மை என்னவென்றால், தேவன் பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி இரக்கமுள்ளவராகவே இருக்கிறார். அதேபோல், ஒவ்வொரு ஏற்பாட்டிலும் பாவத்திற்கு தக்க பலன் அளிக்கிறவராகவே இருக்கிறார்.

உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் எனக்கு விருப்பமான வசனப் பகுதிகளில் ஒன்று அதை பிரதிபலிக்கிறது. “பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனோடும், அவன் குமாரரோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால்: நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது, அவர்களைப் பார்த்துச் சொல்ல வேண்டியதாவது: கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப் பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர், கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்ளையிடக்கடவர் என்பதே. இவ்விதமாய அவர்கள் என் நாமத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் கூறக்கடவர்கள். அப்பொழுது நான் அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல் என்றார்” (எண்ணாகமம் 6:22-27). இங்கே தேவன் அக்கினியையும், கந்தகத்தையும் கக்கவில்லை. மாறாக, அவர் இஸ்ரவேலை தெரிந்துகொண்டதையும், நேசித்ததையும், அவர்களை ஆசீர்வதிக்க விரும்புவதையும் இஸ்ரவேலர்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறார். தேவன் இஸ்ரவேலர்கள் மீது கடுமையாக இருந்த காலத்தில்கூட, அவர்களை ஒழுங்குபடுத்தி, நியாயத்தீர்ப்பை நினைவுபடுத்தி, அவர்கள் பாவத்தை பின்னால் விட்டு முன்பாகக் கடந்து செல்லும்படி அவர்களை உற்சாகப்படுத்தினார். இவை எல்லாவற்றிலும்கூட பாவம் கொண்டுவருகிற ஆக்கினையிலே தேவன் எந்த மகிழ்ச்சியையும்

காணவில்லை. கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாக வேண்டும் என்கிறார் என்று அவர்களோடே சொல்லு.

நிச்சயமாகவே, புதிய ஏற்பாட்டில் தேவனுடைய அன்பு, கிருபை மற்றும் இரக்கம் போன்றவைகளைப் பற்றி பேசும் வசனப் பகுதிகளை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, நம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரித்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக; கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட உட்காரவும் செய்தார்" (எபேசியர்2:4-7).

இருந்தபோதிலும், பாவம் தேவனால் இன்னும் வெறுக்கப்படுகிறது. பாவத்தை தங்கள் வாழ்க்கை முறையாக்க தேவனை நிரகாரித்தவர்கள் அதன் விளைவுகளை சந்திக்க வேண்டும். "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்: குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்" (யோவான் 3:36). "முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்மாவுக்கும் உபத்திரமும், வியாகுலமும் உண்டாகும்" (ரோமர்2:9).

எனவே, தேவனுடைய தன்மையைப் பற்றி உண்டாக்கியிருக்கிற குழப்பத்திற்கு நாம் எப்படி தீர்வு காணமுடியும்? அதற்கான பதில் தேவனிடத்தில் இல்லை. நம்மிடத்தில் தான் இருக்கிறது அவருக்கு முன்பாக நம்மை நாம் தாழ்த்தி, அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுத்தால் அவருடைய அன்பு, தயை, இரக்கம், கிருபை, சகாயம், பெலன் மற்றும் இரட்சிப்பை அனுபவிப்போம். நாம் இவைகளை நிராகரித்தால் ஆக்கினையும், தண்டனையும் நமக்கு உண்டு, தெரிந்து கொள்ளுதல் நம்முடையது . தேவன் தம்முடைய அன்பின் ஆழத்தை தம்முடைய குமாரனை நமக்காக மரிக்க அனுப்பினபடியால் வெளிப்படுத்தியிருக்கிறார். இவ்வுலகம் ஒரு போதும் அறிந்திராத அன்பின் மிகப்பெரிய வெளிப்பாடு இதுதான். இயேசு கிறிஸ்து என்னும் மாபெரும் ஈவை அனுபவித்தால்

தேவனுடைய அன்பு கிடைக்கும் ஒரேவழியை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் (ரோமர் 8:39).

ஆம், ஒருவர் தேவனுடைய அன்பை அனுபவிக்கிறாரா அல்லது நியாயத்தீர்ப்பை எதிர்கொள்கிறாரா என்பது அவருடைய தெரிந்து கொள்ளுதலாயிருக்கிறது. சிலர், இது தேவனுடைய பங்கில் நியாயமற்றது என்று சொல்கிறார்கள், இது முற்றிலும் நியாயமானது தான். தேவனைத் தெரிந்துகொள்ளும் ஒருவர் ஜீவனை கண்டடைகிறார், பாவத்தைத் தெரிந்து கொள்ளுகிறவர் நியாயத்தீர்ப்பை கண்டடைகிறார், பாவத்தைத் தெரிந்து கொள்ளுகிறவர் நியாயத்தீர்ப்பை எதிர்கொள்கிறார். தேவன் பட்சபாதமுள்ளவரல்லவே (ரோமர் 2:1). நம்முடையதவறானதெரிந்து கொள்ளுதலுக்காக நாம் தேவன் மீது பழிபோடக்கூடாது. மாறாக, நாம் தேவனுடைய வார்த்தைகளினால் சொல்லி முடியாத ஈவுக்காக, அவரை நாம் துதிக்க வேண்டும். நீங்கள் எதைத் தெரிந்து கொள்வீர்கள்? உங்கள் தெரிந்துகொள்ளுதல்தான் தேவன் எப்படி பதிலளிப்பார் என்பதை தீர்மானிக்கும்.” ஆகையால், தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்தில் கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய்” (ரோமர் 11:22). ✝

---

**சில வேளைகளில் கர்த்தர்
பெருங்காற்றை
அமைதிப்படுத்துகிறார் :
சில வேளைகளில்
பெருங்காற்றை
கோரதாண்டவமாடச் செய்து
தம்முடைய பிள்ளைகளை
அமைதிப்படுத்துகிறார்.**

தேவன்

# இயேசு வித்தியாசமானவராக இருந்தார்

*Jesus was Different*

**GaryC.Hampton**



எண்ணற்ற மத அமைப்புகள் தங்கள் மத நம்பிக்கைகளை செயல்படுத்தத் துடிப்பும் சுறுசுறுப்புமுள்ள தலைவர்களை அல்லது ஆளுமைகளைப் பார்க்கிறார்கள். ஆனால், எந்த மத அமைப்புகளிலும் இயேசு கிறிஸ்துவைப் போல் துடிப்பும், செயல்படுகிற தலைவரும் இல்லை.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் 100 சதவீதம் தேவனாகவும், 100 சதவீதம் மனிதனாகவும் இருந்தார். தேவதூதன் யோசேப்பிடம் மரியாளுக்குப் பிறக்கப்போகும் குழந்தை, ஏசாயா 7:14 மற்றும் மத்தேயு 1:18-25 போன்ற வசனங்களின் நிறைவேறுதல் என்று சொன்னான். மேலும், அன்பின் அப்போஸ்தலன் யோவான் நம் புரிந்து கொள்ளுதலுக்கு வலுசேர்க்கும் விதமாக ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அவர் ஆதியிலே தேவனோடு இருந்தார். அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம் என்று அறிவித்தார் (யோவான் 1:1-2,14).

நம் ஆண்டவர் பஞ்சபூதங்களை, அதாவது, இயற்கை சக்திகளைக் கட்டுப்படுத்தினார். நம் கர்த்தர் சிருஷ்டிகராயிருந்தபடியால்தான் அவரால் அப்படிச் செய்ய முடிந்திருக்கிறது. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதென்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை

(யோவான் 1:3) அப்போஸ்தலர்கள் கலிலேயாக்கடலில் பெருங்காற்று மத்தியில் நம் கர்த்தரை எழுப்பினார்கள். அவர் எழுந்து காற்றை அதட்டி, கடலைப் பார்த்து: இரையாதே அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்று போய் மிகுந்த அமைதல் உண்டாயிற்று (மாற்கு 4:39).

நம் கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்காக மரிக்க இப்பூமிக்கு வந்தபடியால் சத்துருக்களை சிநேகித்தார் (ரோமர் 5:6-11). இயேசு தம்மை பின்பற்றுபவர்களும் அவ்விதமாகவே செய்ய வேண்டும் என்று கட்ளையிட்டார் (மத்தேயு 5:44). சிலுவைக்கு முன்பாக நம் கர்த்தரை பரிகாசம் செய்த கூட்டம் கூட அவர் பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்று ஜெபித்தார் (லூக்கா 23:34).

இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் நம் ஆண்டவர் பாவமில்லாதவர் என்பதை ஒத்துக் கொண்டான் (மத்யே 27:4). அதேபோல், பிலாத்தும் இயேசுவிவினிடத்தில் எந்தக் குற்றத்தையும் காணவில்லை என்று ஒத்துக்கொண்டார் (லூக்கா 23;14,15). நம் கர்த்தரோடு சிலுவையில் அறையப்பட்ட கள்வன்களுள் ஒருவன் இயேசு அநியாயமாக தண்டிக்கப்படுகிறார் என்று குறிப்பிட்டான் (லூக்கா 23:39-41))

நம் ராஜாவாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் மற்ற மதத் தலைவர்களுக்கும் உள்ள மிகப் பெரிய வித்தியாசம் மனித இனத்தை இரட்சிப்பதற்கான திறமைதான். வெளிப்படுத்தின விசேஷம் இயேசு கிறிஸ்துவை நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களை நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிப்பதாக என்று விவரிக்கிறது (வெளி.1:6). நாம் ஞானஸ்நானத்தில் இயேசுவை தரித்துக் கொள்வதன் மூலமாக நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம் (கலாத்தியர் 3:26,27). கிறிஸ்து நமக்கு நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தத்தை கொடுத்திருக்கிறார் (1யோவான் 2:24,25).

ஆவிக்குரிய பயணத்தில் தங்களைப் பெரியவர்கள் என்று சொல்லிக் கொள்கிற மற்றவர்களை விட இயேசு வித்தியாசமானவர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அந்த வித்தியாசமே நாம் அவரைப் பின்பற்ற நம்மைத் தூண்ட வேண்டும். ✝

# அவர் தரிசனமானார்

*And He Appeared*

**Cecil May Jr.**

I கொரிந்தியர் 15:3-4 வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி சுவிசேஷம் என்பது “கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார் என்னும் உண்மைகளை உள்ளடக்கியதாயிருக்கிறது. இவ்வசனப்பகுதியில் சுவிசேஷத்தின் மூன்று உண்மைகள் என்று சொல்லப்பட்டாலும்கூட, உண்மையில் அது நான்கு உண்மைகளாக இருக்கின்றன. கிறிஸ்து மரித்தார், அடக்கம்



பண்ணப்பட்டார், உயிர்த்தெழுந்தார், தரிசனமானார் என்பவைகள் அந்த நான்கு உண்மைகளாகும். கொரிந்தியர் புத்தகம் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு அவரைக் கண்டவர்களின் பெயர்களையும் பதிவு செய்கிறது. அவர் **தரிசனமானார்** என்னும் மாபெரும் உண்மைதான் பேதுருவை அந்த பெந்தெகொஸ்தே நாளிலே “இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்: இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்” என்று சொல்லவைத்தது. (அப்போஸ்தலர்2:38).

அப்போஸ்தலர் புத்தகத்தை லூக்கா எழுதும்போது இயேசு தம்மை அப்போஸ்தலர்களுக்கு உயிரோடிருக்கிறவராக காண்பித்தார் என்று சொன்னார். அவர் பாடுபட்ட பின்பு நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி அநேகம் தெளிவான திருஷ்டாந்தகளினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார்” (அப்போஸ்தலர் 1:3). இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்கான சாட்சியங்களில் காலியான கல்லறையும், நேரில் கண்ட சாட்சியங்களின் நம்பகத்தன்மையும் உள்ளடக்கம்.

இயேசு உயிர்த்தெழுந்ததை நேரில் கண்ட சாட்சியங்களில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் அவரோடு சுமார் மூன்று வருடங்கள் பயணித்து, உண்டு, உரையாடி, உறங்கிய சீஷர்கள்தான். இவர்கள் பயந்த சுபாவமுள்ளவர்களாயிருந்து, ஆரம்பத்தில் இயேசு தாம் மரித்து, உயிர்த்தெழுவதாக சொன்ன வார்த்தைகளை நம்பாமல் தங்கள் மீது பலரால் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பயந்து ஓடியவர்கள் தான். ஆனால், இவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டபிறகு மனமாறி, தைரியமடைந்தார்கள்.

ஒருவேலைக்காரிக்கு முன்பாக நடுங்கி, தான் இயேசுவை அறிந்ததே இல்லை என்று மறுதலித்த பேதுரு உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டபிறகு, இயேசுவுக்கு மரண தண்டனை கொடுத்த ஆலோசனை சங்கத்துக்கு இவ்விதமாக சவால் விடுத்தார். "தேவனுக்குச் செவி கொடுக்கிறதை பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமல் இருக்கக் கூடாதே", "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது"(அப்போஸ்தலர்5:29).

கிறிஸ்தவர்களை தீவிரமாகத் துன்பப்படுத்திய சவுல் அகாலப் பிறவி போன்ற தனக்கும் உயிர்த்தெழுந்த இயேசுவைக் காணும் வாய்ப்பு கிடைத்த பிறகு அப்போஸ்தலனாகிய பவுலாக மாறி, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைப் பரப்பும் தீவிர சுவிசேஷ பிரசங்கியானார். அடிகள் பல பட்டபோதிலும், பலமுறை கல்லெறியுண்ட போதிலும் ரோம சாம்ராஜ்யம் முழுவதிலும் இயேசுவைப் பற்றி பிரசங்கித்தார். அவர் தெசலோனிக்கேய கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமாக எழுதினார்". உங்களுக்கு தெரிந்திருக்கிறபடி, முன்னே பிலிப்பு பட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடைந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம்"(1தெச.2:2).

இயேசுவோடிருந்தும் பயந்து, சந்தேகப்பட்ட பன்னிரெண்டு அப்போஸ்தலர்களையும், தீவிரமாக கிறிஸ்துவத்தை எதிர்த்து சத்துருவாய் இருந்து வன்முறையில் ஈடுபட்ட பவுலையும், பாடுகளின் மத்தியிலும் தைரியமான, வல்லமையான சுவிசேஷகர்களாக மாற்றியது இயேசுவின் உயிர்த்தெழுதல்தான். இவைகளுக்கெல்லாம் நியாயமான விளக்கம் அவர்கள் எதைக் கண்டோம் என்று சொன்னார்களோ அதை அவர்கள் கண்டார்கள். "இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்கள் எல்லாரும் சாட்சிகளாய் இருக்கிறோம்"(அப்போஸ்தலர் 2:32).

# நங்கூரம்

**Betty Burton Choate**

உணர்வுகள் வளர்கின்றன, தேய்கின்றன
உணர்வுகளால் சில நேரங்களில் நாம்
அருகில் இருப்பதாக நினைக்கிறோம். சில நேரங்களில்
வெகு தூரத்தில் இருப்பதாக நினைக்கிறோம்.

நம் வாழ்க்கையின் நிறைவான நேரங்களில்
மகிழ்ச்சியான தருணங்களில் நாம்
பரிசுகளை பரிமாறிக் கொள்ளும் போது
மகிழ்ச்சியில் நமக்குள் ஆத்துமா நன்றாக இருப்பதாக உணர்கிறது.

சில வேளைகளில் தேவைகளில் உணர்வுகள் கட்டப்படுகிறது
சிலருடைய வார்த்தைகள் நம் இருதயத்தை குத்தும்போது
கண்ணீர் நம் கண்களை குளமாக்கி கவலையில்
கதிகலங்கி நிற்கும் போது நிச்சயமாக ஒன்றும் நன்றாக இராது.

ஆனால், மனதில்
நான் எதை அறிய முடியும்?
நீங்கள் அறிந்திருக்கிறவைகளில், செய்கிறவைகளில்
சாவுக்கேதுவானவைகளால் குருடாக்கப்பட்டிருக்கிற
கண்களைக்கொண்டு நான் எதைப் பார்க்க முடியும்?

மேலுள்ள கேள்விகளுக்கான பதில் என்னிடம் இல்லை
என் ஆத்துமாவுக்கு எதுவும் ஞான ஒளியை ஏற்றவில்லை
எல்லாம் இழந்து போய் விட்டது அல்லது எல்லாமே நன்றாக
உள்ளதென்று உணர்வுகளால் சொல்லவே முடியாது.

**மாற்றுத்திசையில் காற்று வீசும்போது**
**அவைகள் பறந்து போகின்றன**
**இறுதியில் அவை விழுந்து போகின்றன.**

**நான் என்ன செய்வேன்?**
**என் ஆத்துமாவுக்கு ஓர் உறுதியான நங்கூரமும்**
**இளைப்பாற ஓர் அஸ்திபாரமும் அவசியமாயிருக்கிறது.**

**என் உள் உணர்வுகளல்ல**
**உணர்வுகள் பலவீனமானவைகள்**
**என் பார்வையுமல்ல**
**உங்கள் முகத்தை என்னால் பார்க்க முடியாது**

**ஆனால், உன் வார்த்தையில் பொய்யுரையாத**
**தேவனால் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்கள் உண்டு**
**நான் உன் சொந்தம் என்று சொல்லும் நீர்**
**உண்மையாய் எனக்கு உறுதிமொழி அளித்திருக்கிறீர்**

**"பயப்படாதே**
**நான் உன்னுடனே இருக்கிறேன்**
**நான் உன்னைப் பலப்படுத்தி**
**உனக்கு சகாயம் செய்வேன்**
**என் நீதியின் வலக்கரத்தினால்**
**உன்னைத் தாங்குவேன்"**

**உம் வார்த்தை நிச்சயமானது**
**உணர்வு காற்று எத்திசையில் வீசினாலும்**
**நம்பிக்கை மேல் ஏறினாலும்**
**சந்தேகம் கீழ் இறங்கினாலும்**
**உம் வார்த்தை என்றென்றும் நிலைத்திருக்கும்!**

# வெளிப்படுத்தப்படுவதற்கு முன்பு

*Before the Revelation*

**Betty Burton Choate**

“**எ**ல்லோருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறார்”(எபேசியர் 4:6).



அடர்ந்த காட்டின் வழியாய் நடந்து, எங்கள் கால்கள் தரையில் தட்டாத அளவுக்கு அடர்த்தியான காட்டில் பயணித்து, போராடி ஒரு வழியைக் கண்டுபிடித்தோம். மிகப்பெரிய மரங்கள், படர்ந்த கொடிகள், புதர்கள் மற்றும் புல்கள் ஒன்றிணைந்து மழைக்காட்டின் பசுமையான தோற்றத்திற்கு காரணங்களாக அமைந்தன. அந்த அடர்ந்த வனத்தின் வழியாய் கடந்து வந்தபோது, ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் நாங்கள் பிரிக்கப்பட்டது போலவும், நாகரீகத்திலிருந்து யுகயுகமாய் தொலைந்து போனது போலவும் உணர்ந்தோம்.


நாங்கள் திடீரென ஒரு வாசல் கதவினிடத்தில் வந்தோம். அதின் வழியாய்ப் பிரவேசித்தபோது எங்களுக்கு முன்பாக இருந்த காட்சியைப் பார்த்து அசந்து போனோம். நம்பமுடியாத அளவும்,

அழகும் கொண்ட ஒரு பழங்காலப் பட்டணத்தைக் கண்டோம். இப்பட்டணம் உருவாக்கப்பட்டு, கைவிடப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்ட காட்டினால் விழுங்கப்பட்டது.

நாங்கள் அக்கட்டிடத்தைக் கட்டியவர்களின் ஆசையை எண்ணி ஆச்சரியப்பட்டுக் கொண்டும், கற்களில் அவர்கள் செதுக்கிய நுட்பமான வேலைப்பாடுகளை ஆராய்ந்து கொண்டும் பயணித்தோம். அழிந்து போன சிதைவுகளிலிருந்து நாங்கள் கற்றுக்கொண்ட காரியங்கள் எங்களுக்குள் சில கேள்விகளை எழுப்பியது, "யார் அதை உருவாக்கியது? எப்போது உருவாக்கினார்கள்? எப்படி உருவாக்கினார்கள்? அவர்கள் எப்படிப்பட்ட ஜனங்களாக இருந்தார்கள்? அவர்களுடைய வரலாறு என்ன? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? அவர்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்கள் இத்தகைய கெம்பீரமான கட்டிடங்களைக் கட்ட எப்படி கற்றுக் கொண்டார்கள்? செதுக்கப்பட்ட அந்த சிற்பங்களின் கதை என்ன? அக்கட்டிடத்தை கட்டி எழுப்பியவர்களைப் பற்றியும் அப்பட்டணத்தில் குடியிருப்பவர்களைப் பற்றியும் நாம் என்னவெல்லாம் கற்றுக்கொள்ள முடியும்?

## இழந்து போன பட்டணம்

இப்பிரபஞ்சத்தில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றி எந்த முன் அறிவுமில்லாமல் இப்பிரபஞ்சம் முழுவதும் பயணிக்க முடியுமானால், அதேபோல் யாரும் வசிக்காத ஒரு கோளிலிருந்து மற்றொரு கோளிற்கு பயணிக்க முடியுமானால், பிரகாசிக்கும் நட்சத்திரத்திலிருந்து மிகவும் குளிரான சந்திரன் வரை யுகயுகமாய் பயணித்தாலும், மனித உயிர் இருப்பதற்கான எந்த ஆதாரத்தையும் காணவில்லையென்றால் நாம் என்ன நினைப்போம்?



அதன் பின்பு திடீரென பூமியின் மேற் பரப்பெங்கும் மனித உயிர்கள் கூட்டம் கூட்டமாக நடமாடினால் நாம் என்ன நினைப்போம்? மனித உயிர்கள் மாத்திரமல்ல, மிகவும் நுணுக்கமாகவும், விசித்திரமாகவும் மேம்படுத்தப்பட்ட வகையில் உண்டாக்கப்பட்ட லட்சக்கணக்கானஜீவராசிகளைக் கண்டால் எப்படி இருக்கும்?

இவைகளையெல்லாம் யார் உண்டாக்கியது? அவர் எங்கே

இருக்கிறார்? நாம் ஒரு போதும் கனவில்கூட கண்டிராத ஜீவராசிகளையெல்லாம் உண்டாக்கினவர் எப்படிப்பட்டவராக இருப்பார்? இவைகளையெல்லாம் யார் உண்டாக்கியது? ஆம், இக்கேள்வி இவ்விதமாய் எழுப்பப்படும் ஓர் இயல்பான கேள்விதான்.

## யார் இதை உருவாக்கினார்?

ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் இழந்த பட்டணத்தைப் பற்றி என்ன கருதுவாரோ அதேபோல் நாமும் கருத வேண்டும். அதாவது, எவ்வித சந்தேகமுமின்றி நம்மைச் சுற்றிலும் இருக்கிற ஒருவரைவிட விவேகமுள்ள, பலமுள்ள ஒருவரால்தான் இத்தகைய பிரம்மாண்டமான காரியங்களை உருவாக்க முடியும் என்று யூகிக்கும் படியாக நாம் உந்தப்படுவோம்.

ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியாளரால் உடனடியாக புதைந்துபோன பட்டணத்தை உருவாக்கியவர்களின் வரலாற்றையும், அடையாளத்தையும் எப்படி அறிந்து கொள்ள முடியாதோ, அதேபோல் நம்மாலும் வெறுமனே நம் கண்களால் காண்பதினால் மாத்திரம் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரை அடையாளம் காணமுடியாது. இருந்போதிலும், நாம் நேர்மையாக ஆராய்ந்து பார்த்தால் இவை எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் ஒருவர் உண்டு என்பதை நிச்சயமாக மறுக்க முடியாது. இப்போது ஒரு கேள்வி, மனிதன் படைக்கும் ஆற்றல் பெற்றவன் என்னும் உண்மையை உடனே நாம் ஏன் கற்றுக் கொள்கிறோம்?

1. **ஏனென்றால் சாட்சியங்கள் கைகோர்த்து வருகின்றன.**
2. **ஏனென்றால் மனித அறிவாற்றல் மகத்தானது என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உண்டு.**

## உயிர்???

பழங்கால பட்டணத்தின் கெம்பீரமான இடிபாடுகளின் வழியாய் நாங்கள் நடந்துபோனபோது, அங்கே சுவாரஸ்யமான காரியம் என்னவென்றால், எங்குமே ஜீவராசிகள் இல்லை! ஆம், வெளிப்படையாகவே, அறிவுப்பூர்வமான மனிதர்கள்தான் எல்லாவற்றையும் கட்டியிருக்கிறார்கள். வருடக்கணக்கான தீவிர ஆராய்ச்சி இல்லாமல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் யார் இதைச் செய்தது? இந்த நாகரீகத்திற்கு என்ன நடந்தது? போன்ற கேள்விகளுக்கு ஒருபோதும் விடையைப் பெற முடியாது.

ஆனால், நம்மைச் சுற்றிலும் இருக்கும் உலகத்தை நாம்

பார்க்கும்போது, நாம் பார்க்கும் இடங்களிலெல்லாம் உயிர் இருக்கத்தான் செய்கிறது. தாவரங்கள், மிருகங்கள், மனிதர்கள் என்று. அப்படியென்றால் உயிர் எங்கே இருந்து வந்தது, மனிதன் படைப்பாற்றல் உள்ளவனும், அறிவுப்பூர்வமானவனாக இருந்தாலும் எந்த ஒரு மனிதனாலும் உயிரற்ற ஒரு பொருளுக்குள் ஜீவசுவாசத்தை ஊதி, ஜீவனைக் கொண்டுவர முடியவில்லை! ஜீவனின் வல்லமையை யார் பெற்றிருக்கிறார்?

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதியாகம் 1:1). தேவன் ஜீவனாயிருக்கிறார்! தேவன் மனிதனை உண்டாக்கினபோது, ஜீவசுவாசத்தை அவர் நாசியிலே ஊதினபோது மனிதன் ஜீவாத்துமானான் (ஆதியாகமம் 2:7).

நாத்திகர்கள் தேவனுடைய சிருஷ்டிப்பின் விவரத்தை நம்புவதற்குப் பதிலாக பரிணாம வளர்ச்சி என்னும் கதையைப் புனைந்து, சிருஷ்டிகருக்கான அவசியமில்லை என்று போதித்து வருகின்றனர். அவ்வகையில் இவ்வுலகம் தேவன் என்று ஒருவர் இல்லை என்று போதித்து வருகிறது! எல்லாமே ஒன்றுமில்லாமையிலிருந்து தானாகவே உருவாகிவிட்டது என்று சொல்கின்றனர். ஒன்றுமில்லாமையிலிருந்து ஏதோ ஒன்று உருவாகி வந்ததை இதுவரை யாரும் பார்த்திராவிட்டாலும்கூட, உயிரற்ற பொருள் உயிருள்ள, துடிப்புள்ள ஒன்றாக மாறி தனக்குத்தானே சிக்கலான செல்களை உண்டாக்கும் திறன் பெற்றிருப்பதை யாரும் கண்டிராவிட்டாலும், இந்த பரிணாமக் கொள்கையை உலகில் பலர் நம்பத்தான் செய்கிறார்கள்.

நாமெல்லாருக்கும் சிருஷ்டிகர் ஒருவர் இருக்கிறார் என்று உரக்கச் சொல்லும் சிருஷ்டிப்புகளினாலே சூழப்பட்டிருக்கிறோம் (ரோமர் 1:20). ஆனால், நம் பரபரப்பான வாழ்வின் மத்தியில் ஒரு நிமிடம் நின்று தேவனுடைய கையின் கிரியைகளில் நானும் ஒரு பகுதி என்று என்றாவது ஆச்சரியப்பட்டதுண்டா? நாம் வெறும் பகுதி மட்டுமல்ல, நாம் அவருக்கு கீழ்படிந்தால், தேவ சாயலில் உண்டாக்கப்பட்டு அவரோடு என்றென்றுமாய் வாழும்படியான வாக்குத்தத்தத்தை பெற்றிருக்கும் சிருஷ்டிப்பின் உச்சம் என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோமோ?

✝

# முழு சூரிய கிரகணம் தேவனால் வடிவமைக்கப்பட்டிருக்கிறது

*Total Solar Eclipse Designed by God*

**David R. Kenney**

சூரியன், சந்திரன், பூமி ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும்போது கிரகணங்கள் ஏற்படுகிறது. அப்போது சந்திரனின் நிழல் சூரியனை மறைத்தால் அது சூரிய கிரகணம் என அழைக்கப்படுகிறது. ஆண்டுதோறும் சரியாக 2-5 கிரகணங்கள் வரை நிகழ்கிறது. அதன்படி சூரியனை முழுமையாக சந்திரன் மறைத்ததால் அது முழு சூரிய கிரகணம் என்றும், ஒரு பகுதியை மட்டும் மறைத்தால் அது சூரிய கிரகணம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால், பூமியின் சுழற்சி அமைப்பின்படி எல்லா சூரிய கிரகணங்களையும் நாம் கண்களால் காண முடியாது. 2017 ஆகஸ்ட் 21ல் நாம் பார்த்த சூரிய கிரகணம் முழு சூரிய கிரகணம் ஆகும். அமெரிக்காவில் ஒருவரால் முழு சூரிய கிரகணத்தை 1979ல் தான் காண முடிந்தது. அமெரிக்காவில் எல்லோருடைய கண்களாலும் காணக்கூடிய சூரிய கிரகணம் 2024 ஏப்ரல் 8ல் ஏற்படுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. என் கண்கள் ஒளியை பார்த்தால் சற்று கூசக்கூடியதாக இருக்கிறபடியால் சூரிய கிரகணத்தை என் கண்களால் காண முடியவில்லை. ஆனால், இந்த அற்புத நிகழ்வை நேரில் கண்டவர்கள் அதை கொண்டாடும் விதத்தில் சமூக ஊடகங்களில் பதிவு செய்ததை பார்த்து பரவசமடைந்தேன். நிச்சயமாகவே, இது பிரபஞ்சத்தை தேவன் வடிவமைத்ததற்கு சாட்சியாக இருக்கிறது.

சூரியன், பூமி மற்றும் சந்திரன் எல்லாமே ஒரு சுற்றுப்பாதையில் பயணிக்கின்றன. சந்திரன் பூமியைச் சுற்றி மணிக்கு 2,288 மைல்கள் துாரத்தில் பயணித்து சுற்றுப்பாதையை 28 நாட்களில் நிறைவு செய்கிறது. பூமி சூரியனைச் சுற்றி மணிக்கு 67,000 மைல்கள் துாரத்தில் பயணித்து அதன் சுற்றுப்பாதையை 365, 256 நாட்களில் நிறைவு செய்கிறது. அதேபோல் சூரியன் வான்வழிப் பாதையில் மணிக்கு 4,83,000 மைல்கள் துாரத்தில் அதன் சுற்றுப்பாதையை 225 மில்லியன் வருடங்களில் (ஒரு காஸ்மிக் வருடம்) நிறைவு செய்கிறது.

நான் இந்த வேக, நேர, சுற்றுப்பாதை விகிதங்களையெல்லாம் என் கைக்கடிகாரத்தை சரி செய்யும்போது தான் நினைத்தேன். என் கைக்கடிகாரத்தில் சிறிய முள், பெரிய முள் என இரண்டு முட்கள் உண்டு. என் கைக்கடிகாரம் நேரவிகிதத்தின்படி மணி, நிமிடம், நொடி என காட்டுகின்றன. கிரகணத்தின்போது சூரியன், சந்திரன், பூமி

ஆகியவைகள் ஒரே நேர்கோட்டில் வருவதைப் போல என் கைக்கடிகாரத்தில் மணி நேரம் நிமிட மற்றும் நொடி எல்லாமே ஒரே நேர்கோட்டில் இசைந்து இயங்குகின்றன. சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களின் பயணிக்கும் பாதைகள் மிகவும் சிக்கலானவைகளாக இருக்கிறபடியால் அவைகளை ஒருவருடைய கைக்கடிகாரத்தில் படம் பிடிப்பதோ, பதிவு செய்வதோ இயலாத காரியமாக இருந்தாலும்கூட இப்பிரபஞ்சத்தின் சிக்கலான வடிவமைப்பைப் பார்த்துஎப்போதுமேஆச்சரியப்படுகிறேன்.

இது William Paley அவர்களின் இவ்வுலகத்தின் வடிவமைப்பை அடிப்படையாக வைத்து தேவன் இருக்கிறார் என்பதின் பழங்கால விவாதத்தை எனக்கு நினைவுப்படுத்துகிறது. கடிகாரங்கள் கால காலமாக பலரால் ஒன்றோடு ஒப்பிடும்படி பயன்படுத்தப்பட்டாலும்கூட William Paley அவர்கள் புகழ் பெற்ற தேவன் - கைக்கடிகாரத் தயாரிப்பாளர் ஒப்புமைக்கு சொந்தக்காரர் ஆவார். Paley அவர்கள் ஒரு நாள் ஒரு காட்டின் வழியாக நடந்து கொண்டிருந்தபோது, அவருடைய கால்கள் பல கற்களை கடந்தபோதும் அது அவருடைய கவனத்தை ஈர்க்கவில்லை. ஆனால், ஒரு கடிகாரத்தை வழியில் கண்டார். அக்கடிகாரம் பல சிக்கலான உதிரி பாகங்களைக் கொண்டு நுணுக்கமான முறையில் உண்டாக்கப்பட்டிருப்பதைக் கண்டு வியந்து போனார். அக்கடிகாரம் வெவ்வேறு நோக்கங்களுக்காக வெவ்வேறு உலோகங்களைக் கொண்டு உண்டாக்கப்பட்டிருக்கிறது. உள்ளே காண்பதற்கு கண்ணாடி துருப்பிடிக்காமல் இருக்க பித்தளை, உறுதித் தன்மைக்காக எ∴கு போன்றவைகாளல் உண்டாக்கப்பட்டதைக் கண்டு அசந்து போனார். அதன் பின்பு Peley அவர்கள் இவ்விதமாக அறிவித்தார். **நாம் எடுக்கும் முடிவு தவிர்க்க முடியாதது, இந்த கடிகாரம் தானாகவே உருவாகமுடியாது** ஏதோ ஒருகாலக்கட்டத்தில், ஏதாவது ஓரிடத்தில் இக்கடிகாரத்தை நேர்த்தியாக உருவாக்கியவர் அதன் அமைப்பைப் புரிந்து கொண்டு அதன் பயன்பாட்டை வடிவமைத்திருக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக எழுதுகிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய் காணப்படும். ஆதலால், அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது (ரோமர் 1:20,21). அநேகர் வானத்தில் கண்டுகளித்த சூரிய கிரகணம் அதரிசனமான குணாதிசயங்களுக்கு அத்தாட்சியாக

இருக்கிறது. ஆனால், சிலர் தங்கள் கண்களுக்கு முன்பாக ஆதாரங்கள் வைக்கப்பட்டாலும்கூட தொடர்ந்து அவரைக் காண மறுப்பார்கள். **தூங்குபவர்களை எழுப்பலாம்; ஆனால் தூங்குவதைப்போல் நடிப்பவர்களை எழுப்ப முடியாது** என்பது மிகவும் உண்மையாயிருக்கிறது. அமெரிக்காவில் 2017-ல் உண்டான முழு சூரிய கிரகணத்தைப் பார்த்த பலர் பரவசமடைந்தார்கள். தேவனுடைய வடிவமைப்பால், ஏற்பட்ட சூரிய கிரகணத்தை நாம் கண்டு களித்தோம். அது எப்போது ஏற்படும். எத்தனை மணிநேரம் நீடித்திருக்கும் என்பதை நம்மால் அறிய முடிகிறது. வடிவமைப்பு என்று ஒன்றிருந்தால் வடிவமைப்பாளர் ஒருவர் நிச்சயமாக இருப்பார். வடிவமைப்பு அறிவுப்பூர்வமாகவும், நுணுக்கமாகவும் இருக்கும்போது வடிவமைப்பாளர் அதைவிட அறிவாளியாகத்தான் இருக்க வேண்டும்! ஆம், நம் தேவன் மகா பெரியவர்!

†

---

## எபேசியர் 5:16 ன் விளக்கம்




**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் என்று தேவன் சொல்கிறார். நம் எல்லோருக்கும் ஒரே விதமாகத்தான் நேரம் அதாவது 24 மணி நேரம் உலகத்தை உண்டாக்கின தேவனால் தரப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் இவ்வுலகிலுள்ள எல்லோருக்கும் ஒரே மாதிரியாக அல்லது சமமாக கிடைக்கும் ஒன்று இந்த நேரம் மட்டும்தான். அதை தேவனுக்காக பயன்படுத்துவதா அல்லது உலகத்திற்காக பயன்படுத்துவதா? என்பது நம் கையில்தான் இருக்கிறது**

# வேத வசனங்களை மனப்பாடம் செய்வதற்கு நிரூபிக்கப்பட்ட யுக்திகள்

*A Proven Strategy for Memorizing Scripture*

**Wes McAdams**

**ச**மீபத்தில் நான் வேதாகமத்தில் 43 புத்தகங்களை மனப்பாடம் செய்த Andy Davis என்பவருடைய வலையொலி பேட்டியைக் கேட்டேன். வேதாகமத்தில் 43 புத்தகங்களை மனப்பாடம் செய்வதைக் குறித்து கற்பனை செய்து பார்க்க முடியுமா? வேத வாக்கியங்களை மனப்பாடம் செய்வதற்கான அவருடைய யுக்தி சிக்கலானதே அல்ல. அந்த யுக்தியை நாம் கூட பின்பற்ற முடியும். இச்சிறிய கட்டுரையில் வேத வாக்கியங்களை மனப்பாடம் செய்வதற்கான Andy Davis-ன் நிரூபிக்கப்பட்ட யுக்திகளை நான் பகிர்ந்துகொள்வேன்.



Davis அவர்கள் எவ்வித நோக்கமுமின்றி தற்செயலாக வேதாகமத்தில் வசனங்களை மனப்பாடம் செய்யும்படி பரிந்துரைக்கிறார். மேலும், இவர் வேதாகமத்தின் முழு புத்தகங்களையும் மனப்பாடம் செய்யுமாறு பரிந்துரைக்கிறார். அந்த வகையில், வேதாகமத்தின் ஒட்டு மொத்தப் பின்னணியும், பொருளடக்கமும், உங்களுக்கு இதயத்தில் பதிந்துவிடும். அவர் வேத வாக்கியங்களை மனப்பாடம் செய்யும் பழக்கத்தை எபேசியர் புத்தகத்திலிருந்து ஆரம்பிக்கும்படி ஆலோசனை வழங்கினார் (ஏனென்றால் அவர் எபேசியர்புத்தகத்திலிருந்துதான் ஆரம்பித்தார்).

### வேதாகமத்தின் ஒரு புத்தகத்தை மனப்பாடம் செய்வதற்கான தினசரியுக்தி இதோ:

### நாள் ஒன்று:

எபேசியர் 1:1யை சத்தமாக பத்து முறை வாசியுங்கள். ஒவ்வொரு முறை வசனத்தை வாசிக்கும் முன்பு அதிகாரத்தையும், வசனத்தையும், (1:1) என்று சொல்லும்படியாக பரிந்துரைக்கிறார்.

வசனத்தை பத்து முறை வாசித்த பிறகு, அதை பத்து முறை மேற்கோள் காட்டுங்கள். அவசியப்பட்டால் நீங்கள் வேதாகமத்தை அவ்வப்போது பார்த்துக்கொள்ளலாம்.

## நாள் இரண்டு:

இந்த நாளை நேற்றைய தினத்தின் வசனத்தோடு தொடங்குங்கள் (எபேசியர் 1:1) நேற்றைய வசனத்தை பத்து முறை சத்தமாக ஒப்பித்துப் பாருங்கள் (தேவைப்பட்டால் வேதாகமத்தை பார்த்துக்கொள்ளலாம்). நேற்றைய வசனத்தை மனப்பாடம் செய்த பிறகு இன்றைய வசனத்தை (எபேசியர் 1:2)யை சத்தமாக பத்து முறை வாசித்து, பத்து முறை மேற்கோள் காட்டுங்கள்.

## மூன்றாம் நாள்

இரண்டாம் நாளில் மனப்பாடம் செய்த வசனம் (எபேசியர் 1:2)யை சத்தமாக பத்து முறை ஒப்பித்துப் பாருங்கள். அதன்பின்பு நீங்கள் இதுவரை மனப்பாடம் செய்த வசனங்களை (எபேசியர் 1:1-2) ஒப்பித்துப் பாருங்கள். இப்போது உங்கள் மனப்பாடப் பட்டியலில் கூட்டிக்கொள்ள (எபேசியர் 1:3) தயாராகிவிட்டீர்கள். இதை பத்து முறை சத்தமாக வாசித்து பத்து முறை ஒப்பித்துப் பாருங்கள்.

எபேசியர் நிருபத்தில் வெறும் 155 வசனங்களே உள்ளன. இந்த யுக்தியை பயன்படுத்தும்போது இந்த முழு நிருபத்தையும் மனப்பாடம் செய்ய 155 நாட்களே எடுக்கும். அந்த வகையில், ஒரு சில மாதங்களிலேயே ஒட்டுமொத்த எபேசியர் நிருபத்தையும் உங்களால் ஒப்பிக்க முடியும் என்பதை நினைத்துப் பாருங்கள். அல்லது இதைவிட சிறிய புத்தகத்தை எடுத்து மனப்பாடம் செய்து பார்க்கலாம். கீழே சிறிய புதிய ஏற்பாட்டு புத்தகங்களையும், அவைகளில் எத்தனை வசனங்கள் உள்ளன என்பதையும் பதிவு செய்திருக்கிறேன்.

கலாத்தியர்-149
1தீமோத்தேயு -113
யாக்கோபு-108
1யோவான்-105
1பேதுரு-105
பிலிப்பியர்-104
கொலோசெயர்- 95
1தெசலோனிக்கேயர்-89
2தீமோத்தேயு-83
2பேதுரு -61
2தெசலோனிகேயர்-47
தீத்து-46
பிலேமோன்-25
யூதா-25
3 யோவான்-15
2 யோவான்-13

நான் தனிப்பட்ட முறையில் அதிகமாக வசனங்களை மனப்பாடம் செய்யத்தீர்மானித்திருக்கிறேன். நீங்கள் எப்படி? ✝

# விசுவாசத்திற்குரிய வார்த்தைகளில் தேறுதல்

*Nourished in the Words of Faith*

**Marilyn Lastrape**

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது 1 தீமோத்தேயு 4:1-5 வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் சொல்கிறதை பற்றிப் பேசிவிட்டு 6ஆம் வசனத்தில் இவைகளை நீ சகோதரருக்கு போதித்து வந்தால் விசுவாசத்திற்குரிய வார்த்தைகளிலும், நீ அனுசரித்து வந்த நற்போதகத்திலும், தேறினவனாகி இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய் என்று சொல்கிறார்.

இன்றைக்கான சத்தியம் புத்தகத்தின் 1,2 தீமோத்தேயு மற்றும் தீத்து நிருபங்களின் வியாக்கியானங்கள் David L.Roper அவர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. ஆறாம் வசனத்தில், அவர் உற்று நோக்கின காரியங்களை விளக்கங்களாக கொடுத்திருக்கிறார்.

தேவனுடைய வார்த்தையை போஷாக்காக கருதும்போது பல எண்ணங்கள் மனதுக்குள் வருகின்றன. ஆகாரத்தால் போஷிக்கப்படுவது என்பது ஆகாரத்தை பார்ப்பதினாலோ, அதை ஆராய்ச்சி செய்வதினாலோ உண்டாகாது. அதற்கு ஆகாரத்தை மென்று, விழுங்கி ஜீரணிக்கச் செய்ய வேண்டும். அதேபோல், தேவனுடைய வார்த்தையில் நாம் தேறிட வேண்டுமென்றால் அல்லது அதினால் நாம் போஷிக்கப்பட வேண்டுமென்றால், அவ்வப்போது சில வசனங்களை தற்செயலாக வாசித்தால் போதாது. அதற்கு நாம் வேதாகமத்தை வாசிக்க வேண்டும், படிக்க வேண்டும், தியானிக்க வேண்டும். நம் வாழ்வில் அவைகளை அப்பியாசப்படுத்த வேண்டும். இவ்விதத்தில் நாம் விசுவாசத்திற்குரிய வார்த்தைகளை ஜீரணித்து விட்டதாகக்காட்டவேண்டும்.

விசுவாசம் என்பது என்ன? அது எபிரேயர் 11:1ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. விசுவாசம் அவசியமானதா? எபிரேயர் 11:6 பலத்த சத்தத்தோடு ஆம் என்று பதிலளிக்கிறது. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்

தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.

விசுவாசத்திற்குரிய வார்த்தைகளில் தேறுவது அல்லது போஷிக்கப்படுவது என்பதன் பொருள் என்ன? விசுவாசத்திற்குரிய வார்த்தைகளில் போஷிக்கப்படுவது என்பதன் பொருள் வேதாகமம் வாசிக்கப்பட வேண்டும், விசுவாசிக்கப்பட வேண்டும், கீழ்ப்படிதல் உண்டாக வேண்டும். ஆத்துமாவை போஷிக்கின்ற இந்த விசுவாசம் எப்படி வருகிறது? ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:17). விசுவாசம் தேவனுடைய வார்த்தையை கேட்பதினாலே வரும்; பிழையில்லாத வேதாகமம் தான் விசுவாசத்தின் ஆதாரமாயிருக்கிறது.

விசுவாசத்திற்குரிய வார்த்தைகளில் போஷிக்கப்படுவது எப்படி நடக்கிறது? அது வேதாகமத்தை வாசிப்பது, படிப்பது, ஜெபிப்பது, தியானிப்பது மற்றும் அதற்குக் கீழ்ப்படிவது போன்றவைகளின் மூலமாக நடக்கிறது. வேதாகமத்தை முறையாகப் படிக்க விரும்பும் ஒரு வேதாகம மாணவருக்கு வேத வாக்கியங்களை வாசிப்பதும், படிப்பதும் மிகவும் அவசியமாகும். நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் படித்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு (2 தீமோத்தேயு 2:15). தேவனோடு தொடர்பு கொள்வதற்கு ஜெபம் மிகவும் அவசியமானதாகும். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோட கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் (பிலிப்பியர் 4:6). தியானிப்பது என்பது வேதாகம சத்தியங்கள் மீது கவனம் செலுத்தும் மன ரீதியான ஒரு பயிற்சியாகும். உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன் (சங்கீதம் 129:15). நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் தேவனுக்கு கீழ்ப்படிவதுதான் விசுவாசத்திற்குரிய வார்த்தைகளில் போஷிக்கப்படுவதின் நிறைவேறுதலாகும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக கெத்சமனே தோட்டத்தில் என் பிதாவே, இந்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்க கூடாதாகில் உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார் (மத்தேயு26:42).

விசுவாசத்திற்குரிய வார்த்தைகளில் போஷிக்கப்படுவதின் சில வெளிப்பாடுகள் என்ன? “எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை

நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது (2 கொரிந்தியர் 10:4).

கர்த்தருடைய சபை உலகப் பிரகாரமாக எதையும் கைப்பற்றும் படியாக போரில் ஈடுபடவில்லை. மாறாக, உலகில் இருளில் இருப்பவர்களை, வெளிச்சத்திற்குக் கொண்டு வரும்படியாக போரில் ஈடுபடுகிறது.

## தேவனுடைய கற்பனைகளை விட்டு வழி தப்பாமலிருத்தல்:

என் முழு இருதயத்தோடும் உம்மை தேடுகிறேன், என்னை உமது கற்பனைகளை விட்டு வழிதப்ப விடாதேயும் (சங்கீதம் 119:10). கிறிஸ்தவர்கள் தாங்கள் எப்போது தேவ சமூகத்தில் இருக்கிறோம் என்பதை உணர்ந்தவர்களாய் எல்லா சிந்தனைகளையும், வார்த்தைகளையும், செயல்களையும் அதற்கேற்றபடி கட்டுக்குள் கொண்டு வரவேண்டும்.

## தேவனுடைய போதனைக்கும், சிட்சைக்கும் தொடர்ந்து கீழ்ப்படிதல்:

எபிரேயர் 5:8,9. கிறிஸ்துவைப் பற்றி இவ்விதமாகச் சொல்கிறது. அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி... தேவனுடைய போதனையும், சிட்சையும் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தில் வாழ்பவர்களிடத்தில், நன்றாய் வேலை செய்கிறது.

## பாவத்தோடு பொருந்தா வாழ்வை வாழ்தல்:

1 யோவான் 3:8, 9 வசனங்கள் இவ்விதமாகச் சொல்கிறது, பாவஞ் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில், பிசாசானவன் ஆதி முதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்; தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான்; ஏனெனில், அவருடைய வித்து அவனுக்குள் நிலைத்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்ய மாட்டான். கிறிஸ்தவர்கள் இனிமேல் பாவத்தினால் ஆளப்படுவதற்கு அனுமதி கொடுக்காமல் தேவனுடைய மகிமைக்காக நீதியில் நடப்பதைத் தெரிந்து கொள்கிறார்கள்.

**கடினமான அல்லது அதிர்ச்சிகரமான சம்பவங்கள் மூலமாக குணாதிசயம் மற்றும் மனப்பான்மையில் ஆழமாக முதிர்ச்சியடைதல்:**

யாக்கோபு 1:2-4 இவ்விதமாகச் சொல்கிறது. "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும், இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக் கடவது. நம் மகிழ்ச்சி பிரச்சனைகள் இல்லாமலிருப்பதை சார்ந்திராமல்; நம் மகிழ்ச்சி தேவன் நம்மோடிருப்பதைச் சார்ந்திருக்கிறது.

**சரீரத்தின் பாவ செயல்பாடுகளை தொடர்ச்சியாக எதிர்த்தல்:**

"மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செயல்களை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும், எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் "(ரோமர் 8:13, 14). பரிசுத்த ஆவியானவர் பாவ இச்சைகளை, சரீர செயல்களை சாகடிக்க உதவி செய்கிறார். அப்போது நாம் எப்படி இருந்தோமோ அதிலிருந்து முற்றிலுமாக மாறுகிறோம்.

†

## கிறிஸ்தவத்தில் பாடுகளின் அவசியம்

1. நாம் பாடுகளை புதுமையென்று எண்ணக்கூடாது (1 தீமோ.3:12).
2. எவ்வளவு அதிகமாக பாடுபடுகிறோமோ அவ்வளவு அதிகமாக மகிழ்ச்சியையும், மகிமையையும் பெற்றுக் கொள்வோம் (ரோமர் 8:17,18).
3. பாடுகளுக்கு நாம் சரியான முறையில் பதிலளித்தால் பாடுகளே அருமருந்தாகிவிடும் (எபிரெயர் 12:6–11).

# எது ஒரு பொருளை பொக்கிஷமாக்குகிறது?


*What Makes A thing A Treasure?*

## Charles R.Rose

ஒரு சிறு பையனாக, என் நண்பர்களும் நானும் சில வேளைகளில் பொக்கிஷ வேட்டைக்காகப் போவோம். அவ்வேட்டையின் போது பண மதிப்புள்ள பொருள்களை மிக அரிதாகத்தான் கண்டுபிடித்தோம். ஆனால், நாங்கள் உண்மையான பொக்கிஷங்கள் என்று எண்ணிய சில பொருள்களை கண்டடைந்தோம். ஆனால் அப்பொருட்களையெல்லாம் தூக்கி எறிந்து, மறந்து நீண்ட காலமாகிவிட்டது. சிறு பையன்களுக்கு அந்தப் பொருள்களை எது பொக்கிஷமாக்கியது?

ஒரு பொக்கிஷம் என்று வரும்போது அது எங்கேயிருந்து எடுக்கப்படுகிறது. அதன் ஆதாரம் என்ன என்பது மிகவும் முக்கியமாகும். உதாரணமாக, பொக்கிஷமானது ஓர் ஆற்றிலிருந்தோ அல்லது சிற்றாறிலிருந்தோ எடுக்கப்பட்டால், வீட்டில் கண்டெடுக்கும் ஒன்றை விட அதிக மதிப்புள்ளதாயிருக்கும். இரண்டாவது, அதன் மதிப்பு என்ன? என்பதைப் பார்க்க வேண்டும். மூன்றாவது, அது பழங்காலத்தில் அமெரிக்காவில் வாழ்ந்த மக்களால் கழுத்தில் அணியப்பட்ட இந்திய அம்புதலை போன்ற அரிதான புரதானப் பொருளா? கடைசியாக, நாம் கண்டுபிடித்த பொருளுக்கு தேவை இருக்கிறதா? குழந்தைப் பருவத்தில் நாம் கண்டெடுத்த பொக்கிஷங்களுக்கு ஓர் உருவம் கொடுத்து நம் மனக் கண்களுக்கு முன்பாக வைத்திருந்தோம். ஆனால், நாம் முதிர்ச்சியடைந்த பிறகு உண்மையாகவே மதிப்புள்ளது என்று கண்டெடுத்த பொக்கிஷங்களை அவைகளுக்கு இப்போது மதிப்பில்லை என்று அறிந்தபோது தூக்கி எறிந்தோம்.

நிச்சயமாகவே, எல்லாக் காலத்துக்கும் மிகச் சிறந்த பொக்கிஷம் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாக நமக்கு வழங்கப்படும் இரட்சிப்புதான். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் (2 கொரிந்தியர் 4:7).



ஒரு பொருளை பொக்கிஷமாக மாற்றும் நான்கு காரியங்களை நாம் பார்த்தோம். இப்போது அவைகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

## 1. பொக்கிஷத்தின் ஆதாரம்:

இயேசு கிறிஸ்துவே ஆதாரமாயிருக்கிறார்! அவர் பரலோகத்தை விட்டிறங்கி தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார் (எபிரேயர் 2:9). அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் (பிலிப்பியர் 2:7). கிறிஸ்து தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தபோது நம் பொக்கிஷம் நிறைவேற்றப்பட்டது (1 பேதுரு 2:24). இயேசு பிதாவினிடத்தில் பரமேறினபோது அவருடைய அருமையான பொக்கிஷத்தை சுவிசேஷ செய்தி வடிவத்தில் கொடுத்தார். அந்த சுவிசேஷ செய்தியை விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது (ரோமர் 1:16).

இப்பொக்கிஷத்தின் மதிப்பு: மண்பாண்டங்களில் பொக்கிஷமாக வழங்கப்படும் இந்த மீட்பு தான் ஒருவரால் வாங்கப்படும் மிகவும் விலையேறப் பெற்ற பொருளாகும். உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (1பேதுரு 1:18,19).

இப்பொக்கிஷத்தின் அரிதான தன்மை. இது உண்மையாகவே ஓர் அரிய வகை பொக்கிஷம்தான். நாம் மண்பாண்டங்களில் பெற்றிருக்கும் இந்த சுவிசேஷம் எவ்வளவு அரிதானதென்றால், சிலர் உங்களை கலகப்படுத்தி கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல (காலத்தியர் 1:7). இச்சுவிசேஷத்தின் அரிதான தன்மையும், மதிப்பும் எந்த அளவு இருக்கிறதென்றால் வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் (கலாத்தியர் 1:8,9).

அந்தப் பொக்கிஷத்தின் தேவை: எல்லாரும் பாவஞ்செய்திருக்கிற படியாலும் (ரோமர் 3:23) பாவத்தின் சம்பளம் மரணமாயிருக்கிறபடியாலும் (ரோமர் 6:23) மண்பாண்டங்களில் நாம் பெற்றிருக்கிற பொக்கிஷமாகிய சுவிசேஷந்தான் மனித இனத்தை இரட்சிக்க, மனித இனத்துக்கு மிகவும் அவசியமான செய்தியாயிருக்கிறது. இச்செய்தியை கேட்பதன் மூலமாகத்தான் ஒருவருக்கு விசுவாசம் உண்டாகிறது (ரோமர் 10:17). ஆகவே, இந்தச் செய்தி இல்லாமல் தேவனை பிரியப்படுத்துவது கூடாத காரியம் (எபிரேயர் 11:6). இந்த விசுவாசம்தான் ஒருவரை மனந்திரும்புதல் மூலமாகவும் (அப்போஸ்தலர் 17:30), அறிக்கை மூலமாகவும் (ரோமர் 10:9-10). ஞானஸ்நானத்தின் மூலமாகவும் கீழ்ப்படியத் தூண்டுகிறது (ரோமர் 6:3-6).

இந்தப் பொக்கிஷத்தை நீங்கள் கண்டடைந்துவிட்டீர்களா? ✝

இரட்சிப்பு

# மீட்டமைத்தல்

*Restoration*

***Brian R. Kenyon***

**மீ**ட்டமைத்தல் என்னும் வார்த்தையை நாம் கேட்கும்போது என்ன நினைக்கிறோம்? பழைய மரச்சாமான்கள்? பழைய வாகனங்கள்? மிக சுலபமாக சொல்ல வேண்டுமென்றால் மீட்டமைத்தல் என்பது ஏதோ ஒன்றை அதன் பழைய நிலைமைக்கு கொண்டு வருவதாகும்.

ஆவிக்குரிய பிரகாரமாக எப்போதெல்லாம் தேவனுடைய சித்தத்திலிருந்து வழிவிலகுதல் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் மீட்டமைத்தலுக்கு அவசியம் ஏற்படுகிறது. சில வேளைகளில், ஜனங்களை மீட்டமைப்பதற்கு அவசியம் ஏற்படுகிறது. மனித இனமானது தேவனை மகிமைப்படுத்தும்படியாகத்தான் உண்டாக்கப்பட்டது (ஏசாயா 43:7; பிரசங்கி 12:13; 1 கொரிந்தியர் 10:31). ஆனால், எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி என்று பார்க்கிறோம் (ரோமர் 3:23).

ஆதியாகமம் 3:6ல் முதல் பாவத்திலிருந்து கணக்கொப்புவிக்க வேண்டிய எல்லோருக்கும் மீட்டமைத்தல் அவசியமாயிருக்கிறது. இந்த மீட்டமைத்தலின் அவசியத்தின் நிறைவேறுதல் முதல் பாவத்திற்குப் பிறகே அவசியமானது. அது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஸ்தீரியின் வித்தில் இருந்தது (ஆதியாகமம் 3:15).

புதிய ஏற்பாடு மீட்டமைத்தலுக்கான பதிலின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துகிறது. தேவசாயலில் படைக்கப்பட்டிருக்கிற மனிதனுக்கு மீட்டமைக்கும்படியான வழியை உண்டாக்கினமைக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் (ஆதியாகமம் 1;26, 27) (யோவான் 3:16). தம்முடைய இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களை கழுவினவர் இயேசு கிறிஸ்து ஒருவரே (வெளி 1:5). ஆகவே, இயேசு கிறிஸ்து **தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகிறார்** (எபிரேயர் 5:9).

மீட்டமைத்தல் செய்யப்பட வேண்டுமென்றால், தேவனுடைய வார்த்தைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் (2 தீமோத்தேயு 3:16,17). வேதாகமம் சிறந்த முறையில் கற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கு மதிப்பளிக்கப்பட்டு, அது சரியாக பயன்படுத்தப்படும்போது மாத்திரமே மீட்டமைத்தல் உண்டாகும். தேவனுடைய வார்த்தையை சரியாகப் புரிந்து கொள்வதோடு, சரியான மனப்பான்மையும் இருக்கும்போது மீட்டமைத்தல் உண்டாகும். (அப். 8:30, 31:10:33). நாம் எல்லாரும் நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாயிருப்போம் (மத்தேயு 5:6). நாம் நமக்குத் தரப்பட்டுள்ள வாய்ப்புகளை எல்லாம் பயன்படுத்தி தேவனுடைய வார்த்தையைக் கேட்கவேண்டும். நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். மீட்டமைக்கப்படும் அவசியம் நமக்கும் ஏற்படலாம்.

✝

# வசன ஆராய்ச்சி

1 கொரிந்தியர் 13:1-13

## Jerry Bates

1. எது மிகப்பெரிய ஆவிக்குரிய வரம்? (வசனம் 1-3)
2. அன்பில்லாமல், மற்ற ஆவிக்குரிய வரங்கள் எந்த அளவு மதிப்புள்ளவைகள்? (வசனம் 1-2)
3. அன்பில்லாமல், பெரிய அளவில் தான தர்மங்கள் செய்வது எந்த அளவு மதிப்புள்ளது? (வசனம் 3)
4. உண்மையான அன்பு தன்னைப் புகழாது (வசனம் 4) சரியா? தவறா?
5. உண்மையான அன்பு அயோக்கியமானதைச் செய்யாது (வசனம் 5) சரியா? தவறா?
6. அன்பு சகலத்தையும் _______________ சகலத்தையும் ____________

   சகலத்தையும் __________ சகலத்தையும் ____________ (வசனம் 7)
7. அன்பு எப்போது வரை நீடித்திருக்கும்?
8. தீர்க்கதரிசனங்கள், அந்நிய பாஷைகள் மற்றும் அறிவு போன்றவைகளுக்கு என்ன நடக்கும்? (வசனம் 8-9)
9. மேற்சொல்லப்பட்டவைகள் எப்போது நடக்கும்? (வசனம் 10)
10. நாம் முதிர்ச்சியடைந்தவர்களாகும்போது குழந்தைக் கேற்றவைகளை என்ன செய்கிறோம்? (வசனம் 11).
11. நாம் இப்போது எப்படி காண்கிறதாகப் பவுல் சொல்கிறார்? (வசனம் 12)
12. பவுல் இங்கே தனக்கு எப்படிப்பட்ட அறிவு இருப்பதாகச் சொல்கிறார்? (வசனம் 12).
13. விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றில் எது பெரியது? (வசனம் 13)

1 கொரிந்தியர் 13:1, நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்

போலவும் இருப்பேன் 2) நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை 3) எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. 4) அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. 5) அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, 6) அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். 7) சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும் 8) அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களாலும் ஒழிந்துபோம். அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம். அறிவானாலும் ஒழிந்துபோம். 9) நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது 10) நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். 11) நான் குழந்தையாயிருந்போது குழந்தையைப்போல பேசினேன். குழந்தையைப் போலச் சிந்தித்தேன். குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். 12) இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன். 13) இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது இவைகளில் அன்பே பெரியது.

**குறிப்பு:** இவ்வசனப்பகுதி அன்பை விவரிப்பது சம்மந்தமாக இதுவரை எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறவைகளிலேயே மிகச்சிறந்தது. இந்த நவீன உலகில், அன்பைப்பற்றி நாம் அதிகமாக பேசுகிறோம். ஆனால், உண்மையான அன்பை யாரும் புரிந்துகொண்டதாக தெரியவில்லை. இங்கே பவுல் அன்புக்கு “அகாபே” என்கிற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இவ்வகையான அன்பு மனமுவந்து ஒருவரிலொருவர் அன்புகூரத் தெரிந்துகொள்வது என்று பொருள்படுகிறது. இது உணர்வுப்பூர்வமான அன்பு அல்ல. மாறாக, இது தெரிந்துகொள்ளும் அன்பாகும். இது பிரதிபலன் எதுவும் எதிர்பார்க்காமல் கொடுக்கும் அன்பாயிருக்கிறது. இந்த அன்புதான் ஆவிக்குரிய எல்லா

குணாதிசயங்களிலும் மிகப் பெரியதாயிருக்கிறது. இது அன்பு, விசுவாசம் போன்றவைகளை விட முக்கியமானது. ஏனென்றால், இவை இரண்டை விட இது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

பவுல் மிகத் தெளிவாக நிறைவானது வரும்போது குறைவானவைகளாகிய தீர்க்கதரிசனங்கள், அந்நிய பாஷைகள், அறிவு போன்றவைகள் ஒழிந்துபோம் என்று சொல்கிறார். சிலவேத வித்தகர்கள் நிறைவானது என்பது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது என்று சொல்கிறார்கள். கிரேக்க மொழியில் "நிறைவானது" என்னும் சொற்றொடருக்கு முன்பாக "அது" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறபடியால் "**நிறைவானது**" என்பது நிச்சயமாக இயேசுகிறிஸ்துவைக் குறிக்காது. ஏனென்றால், இயேசுகிறிஸ்து ஒரு நபர். இயேசு வேத வாக்கியங்களில் ஆண்பாலில் தான் குறிப்பிடப்பட்டிருக்கிறார். எனவே, இது நிச்சயமாக இயேசுவை குறிக்காது. எனவே, "நிறைவானது" என்பது பூரணமான தேவனுடைய வார்த்தையைத்தான் குறிக்கிறது. ஆகவே, தேவனுடைய வார்த்தை முழுமையாக வெளிப்படுத்தப்படும்போது, அற்புத அடையாளங்கள் ஒழிந்து போகும். இது சபைவரலாற்றோடு ஒத்துப்போகிறது.

அப்போஸ்தலர் 20:28 மூப்பர்கள் தங்களிடையே இருந்த மந்தையை மேய்க்கும்படி அறிவுறுத்துகிறது. ஆனால், ஆடுகள் யார் என்று தெரியாத பட்சத்தில், நிச்சயமில்லாத பட்சத்தில் அவர்கள் எப்படி மந்தையை மேய்க்க முடியும்? ஆடுகளும் மூப்பர்களுக்கு கணக்கு கொடுக்க வேண்டும். எபிரெயர் 13;17; 1 பேதுரு 5:4, சில வேளைகளில் மேய்ப்பர்களுக்கு யார் மந்தையில் இருக்கிறார், யார் மந்தையில் இல்லை என்பதைக் கண்டறிவதற்கே கடினமாகிவிடுகிறது.

மேலும், பிராந்திய சபையில் எந்த ஆடுகள் இருக்கிறது எந்த ஆடுகள் இல்லை என்பதை அடையாளங் கண்டு கொள்வதற்கு ஏதாவது வழி இல்லையென்றால் நாம் எப்படி மூப்பர்களையும், உதவிக்காரர்களையும், போதகர்களையும் நியமிக்க முடியும்? சபையை வழி நடத்துகிறவர்கள், உதவிக்காரர்கள் போன்றோர் சபை அங்கத்தினர்கள் மத்தியிலிருந்துதான் தெரிந்தெடுக்கப்படவேண்டும் (அப்போஸ்தலர் 6:2).

அங்கத்தினர்களை இணைத்துக் கொள்ளுதல் என்னும் குறிப்பிட்ட சொற்றொடர் நேரடியா இடம்பெறாவிட்டாலும் மறைமுகமாக அது வேத வாக்கியங்களில் இடம் பெற்றிருக்கிறது. எந்த ஒரு கிறிஸ்தவரும் கிறிஸ்துவின் சபையில்தான் அங்கத்தினராகாமல் இருந்துவிடக்கூடாது என்பதற்காக அங்கத்தினராகுதல் என்னும் சொற்றொடர் பல்வேறு வார்த்தைகளில் வேதவாக்கியங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

# சபைக்காக கிறிஸ்துவின் மாதிரி


*Christ's blue print for the church*

அப்போஸ்தலர் 2:22-24

**Paul Holland**

இன்று நாம் காண்பவைகளில் முதல் நூற்றாண்டில் ரோமக் கலாச்சாரத்தில் இல்லாத ஒன்று இல்லவே இல்லை. உண்மையில், அமெரிக்க ஐக்கிய தேசத்திலும் மற்றும் உலகெங்கிலும் இன்றைய நாட்களில் அநேகர் தாங்கள் கிறிஸ்தவத்தை பின்பற்றுவதாக சொல்லிக் கொள்கிறார்கள். அதாவது, கி.பி.59,69 மற்றும் 79 காலக்கட்டங்களைவிட இன்றைய நாட்களில் அநேகர் கிறிஸ்தவத்தை பின்பற்றுவதாக சொல்லிக் கொள்கிறார்கள். கிறிஸ்தவம் என்பது தங்கள் இருதயங்களையும், தங்கள் ஜீவியங்களையும் இயேசு கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்த ஜனங்களை உள்ளடக்கிய ஓர் இயக்கமாகும்.

அன்றைய ரோம, கிரேக்க உலகமானது பல கடவுள் வழிபாட்டு முறையை கொண்டதாக இருந்தது. இதைக் குறித்து ஒரு வரலாற்று ஆசிரியர் சொல்லும்போது அன்றைய உலகில் சுமார் 30,000 கடவுள்கள் இருந்ததாக சொல்கிறார். பழங்கால ரோம சாம்ராஜ்யத்தில் இரண்டு பட்டணங்கள் மாத்திரமே மிகப்பெரிய பட்டணங்களாக இருந்திருக்கின்றன. ஒன்று **ரோமாபுரி** மற்றொன்று எகிப்தின் **அலெக்சாந்திரியா** பட்டணம். மேலும், அன்றைய நாட்களில் பல பட்டணங்களில் மக்கள் தொகை 50 ஆயிரத்திற்கும் குறைவாகவே இருந்திருக்கிறது. அன்றைய உலகில் 30,000-க்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்ட பட்டணங்கள் வெறும் 30 மாத்திரமே இருந்திருக்கின்றன.



இருந்தபோதிலும், பெரும்பாலான பட்டணங்களில், Zeus, Athena, Apollos என்று பட்டணங்களில் 15-20 பிரதான கடவுள்களுக்கு கோயில்கள் இருந்திருக்கின்றன. கிறிஸ்தவம் ஆரம்பிக்கப்பட்ட கி.பி. 30-லிருந்து கி.பி. 330 வரையிலான காலகட்டங்களில், நம்முடைய

விசுவாசம் ஒரு சிறிய இயக்கத்தில் இருந்து பெரிதாக வளர்ந்து இலட்சக்கணக்கான மக்களை மனமாற்றம் அடையச் செய்து 300 ஆண்டுகளில் ரோமாபுரியில் பிரதானமான மார்க்கமாக மாறியது. எப்படி இது நடந்தது? ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்தியதால் இந்த மாற்றம் ஏற்படவில்லை. அவைகள் அவர்களிடத்தில் அப்போது இல்லை. ஆராதனையில் அவர்கள் துதி குழுக்களையும் கொண்டிருக்கவில்லை. அவர்கள் ஓரினச் சேர்க்கையை சட்டப்பூர்வமான வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொண்டதினால் அப்படி ஆகவில்லை. அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அவர்கள் பொது ஆராதனையில் கிறிஸ்தவ ஆண்கள் கூடி வரும் போது பெண்களை பிரசங்கிக்கவும், போதிக்கவும், ஜெபிக்கவும் அனுமதித்ததினால் அப்படி ஆகவில்லை. அவர்கள் அப்படிச் செய்யவில்லை. ரோம் நகரின் மற்ற மதங்கள் இவைகளை எல்லாம் போதித்து இவைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டன. இருந்தபோதிலும், கிறிஸ்தவம் ரோம சாம்ராஜ்யத்தில் ஆதிக்கம் செலுத்தியது. ஏனென்றால், அப்போஸ்தலர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் சுவிசேஷ செய்திக்காக என்ன மாதிரியை போதித்தார்களோ அதே மாதிரியைத்தான் கிறிஸ்தவர்களும் பின்பற்றினார்கள். மேற்சொல்லப்பட்ட காரணங்களால் ரோம சாம்ராஜ்யத்தில் கிறிஸ்தவம் வளர்ந்து செழித்தோங்கியது.

இயேசு கிறிஸ்து ஒரு மாபெரும் போதகராக திகழ்ந்தார். அவர் என்ன போதித்தாரோ அதை அப்படியே வாழ்ந்து காட்டினார். அவர் பொது இடங்களிலும் போதித்தார். தனிப்பட்ட ரீதியிலும் போதித்தார். அவர் ஆண்களுக்கும் போதித்தார், பெண்களுக்கும் போதித்தார். அவர் ஏழைகளுக்கும் போதித்தார், பணக்காரர்களுக்கும் போதித்தார். அவர் பக்தி உள்ளவர்களுக்கும் போதித்தார், பக்தி இல்லாதவர்களுக்கும் போதித்தார். ஏன் அவர் அப்படிச் செய்தார்? மனிதனால் அறியாமையில் இரட்சிக்கப்பட முடியாதுஎன்பதற்காக அப்படிச் செய்தார்.

இயேசு கிறிஸ்து பரமேறுவதற்கு முன்பாக தம்முடைய சீஷர்களிடத்தில் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறத்தக்கதாக எருசலேமில் காத்திருக்கும்படியாக கட்டளையிட்டார். மேலும், கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார்" (அப்போஸ்தலர் 1:8). கிறிஸ்துவின் சபை சுவிசேஷ பிரசங்கத்தின் மூலமாக எப்படி ரோம சாம்ராஜ்யத்தை கவிழ்த்துப் போட்டதுஎன்பதைநாம்கருத்தில்கொள்ள வேண்டும்.

## பிரசங்கம் பழைய ஏற்பாட்டிலிருந்தும் இருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் சபை ஆரம்பிக்கப்பட்டபோது பரிசுத்த ஆவியானவர் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், போதிக்கவும் வழி நடத்தினார் (2:14). பேதுரு செய்த முதல் காரியம் பழைய ஏற்பாட்டில் இருந்து வசனங்களை மேற்கோள் காட்டியதாகத்தான் இருந்தது (யோவேல் 2:28-32, சங்கீதம் 16, 2 சாமுவேல் 7). அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் மாத்திரம் பழைய ஏற்பாட்டில் இருந்து 36 வசனங்கள் மேற்கோள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அதிகாரத்திலும், ஒன்றுக்கும் மேற்பட்ட வசனங்கள் மேற்கோள் காட்டப்பட்டிருக்கின்றன. அப்போஸ்தலர்களை பொறுத்தவரை போதனையின் ஆதாரமாகவும், அதிகாரமாகவும் பழைய ஏற்பாடு இருந்திருக்கிறது. அதனால் தான் வசனத்தை கேட்கிறவர்கள் பழைய ஏற்பாட்டு வசனங்களை கேட்க வேண்டும் என்று விரும்பி இருக்கிறார்கள்.

சபைக்கான மாதிரியை அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலிருந்து பின்பற்றும் கிறிஸ்துவின் சபை 39 புத்தகங்களை உள்ளடக்கிய பழைய ஏற்பாட்டை படித்து அதைப் போதிக்கும். நாம் அந்தப் புத்தகங்களை அறிந்து கொள்ள வேண்டும். நாம் அவைகளை ஜாக்கிரதையாகப் படிக்க வேண்டும். நாம் பழைய ஏற்பாட்டை நன்றாகப் படித்துப், புரிந்து கொள்ளவில்லை என்றால், புதிய ஏற்பாட்டை முழுமையாக நாம் புரிந்து கொள்ள வேண்டிய ரீதியிலே புரிந்து கொள்ள முடியாது.

**பிரசங்கமானது கிறிஸ்துவின் வாழ்வு பற்றியதாக இருக்க வேண்டும்.**

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் இரண்டாம் அதிகாரத்தில் பேதுருவின் பிரசங்கத்தில் அவர் இயேசுவின் வாழ்க்கை பற்றிப் போதித்ததை நாம் காண முடியும் (2:22). அங்கே பேதுரு, இயேசு கிறிஸ்து தம்முடைய அற்புத அடையாளங்கள் மூலமாக தம்மைத் தேவனுடைய குமாரனாக நிரூபித்ததைப் புரிந்து கொண்டார் (யோவான் 20:30,31).

அப்போஸ்தலனாகிய பேதுரு முதன் முதலாக புறஜாதிகளிடத்தில் பிரசங்கித்தபோது இயேசு செய்த நற்கிரியைகளையும், அற்புத அடையாளங்களையும் அவர்களுக்குப் பிரசங்கித்தார் (10:38). ஒரு சபைக்கு இயேசுவைப் பற்றிய பிரசங்கம் மிகவும் அவசியமானது. அதனால்தான் பிலிப்பு என்பவர் சமாரியாவில் உள்ள ஒரு பட்டணத்திற்குப் போய் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார் என்று லூக்கா ஆசிரியர் பதிவு செய்கிறார். (அப்போஸ்தலன் 8:5). அப்போஸ்தலனாகிய பவுல் அத்தனே பட்டணத்தில் இருந்த தத்துவ ஞானிகளிடம் பிரசங்கித்தபோது, அவர்களிடம் பழைய ஏற்பாட்டை

மேற்கோள் காட்டவில்லை. ஆனால், அவர் இயேசுவைப் பற்றியும் அவருடையஉயிர்த்தெழுதலின் ஆதாரத்தைப் பற்றியும் பேசினார்(அப். 17:31).

## உலகத்தில்என்னநடந்தாலும் கிறிஸ்தவம்நிலைத்துநிற்கும்.

ரோம் நகரம் விழுந்து போனபோது, கிறிஸ்தவம் நிலைத்து நின்றது. எதிர்காலத்தில் அமெரிக்காவுக்கு என்ன நடக்குமோ எனக்குத் தெரியாது. ஆனால், கிறிஸ்தவம் நிலைத்திருக்கும், நிலைத்திருக்க வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். கிறிஸ்தவம் நிலைத்திருந்து எல்லோருக்கும் ஒளி வீச வேண்டும்.

இயேசு கிறிஸ்து நமக்கு பரிபூரண ஜீவன் தருவதற்காக தான் வந்ததாக சொல்கிறார் (யோவான் 10:10). அந்த பரிபூரண ஜீவன் தைரியத்தை தன்னகத்தே கொண்டதாக இருக்க வேண்டும்.

நாம் உண்மையுள்ளவர்களாகவும், தைரியமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். (வெளி.21:8). நாம் ஜனங்களிடம் போய், தேவன் அவர்களை நேசிக்கிறார் என்று சொல்வது மிகச் சுலபமாகும். அதேபோல் இயேசு அவர்களுக்காக மரித்தார் என்று சொல்வதும் மிக எளிதானதாகும். இதுபோன்ற செய்திகள் தங்களை எரிச்சல் அடையச் செய்வதாக யாரும் உணர்வதில்லை. இஸ்லாமியர்களுக்கு கூட இதுபோன்ற செய்திகள் எரிச்சலை ஏற்படுத்துவதில்லை. தேவனுடைய அன்பைப் பற்றி ஜனங்களிடம் பேசுவதற்கு தைரியம் அவசியம் இல்லை. ஆனால், அவர்களுடைய பாவத்தைப் பற்றி பேசுவதற்கு தான் தைரியம் அவசியமாகிறது. வேதாகமம் பாவத்திற்கு என்ன விளக்கம் கொடுக்கிறதோ அதே விளக்கத்தை நாம் ஜனங்களுக்கு கொடுக்கும்போது அது பிரத்தியேகமானது. அதன் பொருள் ஏதோ ஒரு நடத்தை தவறானது என்றும், அது நிறுத்தப்பட வேண்டும் என்றும் படும். மேலும், அதன் பொருள் ஏதோ சில நம்பிக்கைகள் தவறானது என்றும், அவைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் பொருள்படும்.

நம் எல்லோருடைய நம்பிக்கைகளும் பல வேளைகளில் தகர்ந்து போயிருக்கின்றன. பலர் நமக்கு நம்பிக்கை துரோகம் செய்திருப்பார்கள். நாம் பல ஏமாற்றங்களை சந்தித்து அவைகள் நம் இதயங்களை கசப்பாக்கியிருக்கும். கோழைத்தனம் நம் இருதயங்களை ஊக்குவித்தால் கடினமான வேளைகளில் நாம் போய் ஓடி ஒளிந்து கொள்வோம். தூய சுவிசேஷ செய்தி சிலரை எரிச்சல் அடையச் செய்வதால் நாம் பல சந்தர்ப்பங்களில் சுவிசேஷத்தை புரட்டி ஜனங்களுக்கு தகுந்தவாறு பேசி விடுகிறோம். நாமும் பரிசேயர்களைப் போல தேவனுடைய புகழ்ச்சியை விட மனிதர்களுடைய புகழ்ச்சியை அதிகமாக விரும்பி விடுகிறோம். இருந்தபோதிலும், தைரியம் நம்

இருதயங்களை ஊக்குவித்தால் நாம் தொடர்ந்து அன்புடன் சத்தியத்தை போதிப்போம்.

## தேவன் நாம் தைரியம் உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

உபாகமம் 31:6-ஐ வாசிக்க ஒரு நிமிடத்தை எடுத்துக் கொள்ளுங்கள். **பலங்கொண்டு திடமனதயிருங்கள்** என்னும் சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் பத்து முறை இடம்பெற்றிருக்கிறது. அதுபோல், **பயப்படாதே** என்னும் சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் 30 முறைகள் இடம் பெற்றிருக்கிறது. மோசே ஏன் இஸ்ரவேலர்களை பலம் கொண்டு திட மனதாய் இருக்கும்படி உற்சாகப்படுத்துகிறார்? ஏனென்றால், தேவன் அவர்களோடு இருந்தார், தேவன் அவர்களோடு பயணித்தார். தேவன் அவர்களை விட்டு விலகவுமில்லை, அவர்களைக்கைவிடவுமில்லை.

யோவான் 14:27-ல் சமாதானத்தைப் பற்றி இயேசுவின் வார்த்தைகளை வாசியுங்கள். புதிய ஏற்பாடு **சமாதானம்** என்னும் வார்த்தையை 97 முறைகள் பயன்படுத்தி இருக்கிறது. யோவான் சமாதானம் என்னும் வார்த்தையைப் பத்து முறைகள் பயன்படுத்தியிருக்கிறார். ஆனால், இதே யோவான் பயம் என்னும், வார்த்தையை 20 முறைகள் பயன்படுத்தி இருக்கிறார். ஒட்டுமொத்தமாக **பயம்** என்னும் பதம் புதிய ஏற்பாட்டில் 101 முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் பயப்படுவோம் என்பதை தேவன் அறிந்திருக்கிறார். ஆனால், நாம் அவரோடு நடந்தால், அவருடைய சத்தியத்திற்கு நம்மை அர்ப்பணித்துக் கொண்டால் நாம் பூரண சமாதானத்தை பெற்றுக்கொள்வோம் என்று அவர் நமக்கு நிச்சயப்படுத்துகிறார். எனவே, நாம் தேவன் மீது விசுவாசம் வைத்து அவருடைய சத்தியத்தில் நிலைத்திருந்து பயமில்லாமல் இருப்போம். நாம் தைரியமாக தேவனுடைய செய்தியை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டு அந்தச் செய்தியை வாழ்க்கையாக வாழ்வோம்.

எனக்கு நகைச்சுவை பிடிக்கும். உண்மை சம்பவங்களை உள்ளடக்கிய சிறுகதைகளும் பிடிக்கும். எனக்கு வரலாறும் பிடிக்கும். பல பிரசங்கங்கள் வேத வாக்கியங்களைவிட மேற் சொல்லப்பட்ட அம்சங்களை உள்ளடக்கியதாக காணப்படும். ஆனால், உங்கள் வாழ்க்கையை நீங்கள் அவைகளின் மீது கட்ட முடியாது. 1 கொரிந்தியர் 3:11-ல், பவுல் கொரிந்து பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமாக எழுதுகிறார், “போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது”. நிச்சயமானதும், நிலையானதுமான ஒரே அஸ்திபாரம் இயேசு கிறிஸ்து தான். எனவே தான், நாம் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் படித்து அதை மற்றவர்களுக்கு பிரசங்கிக்கவும், போதிக்கவும் வேண்டும்.

# ஆசீர்வாதத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்

*Share the Blessing*

**Derek Broome**

**ச**பையில் அங்கமாய் இருப்பது கிறிஸ்தவர்களாக நாம் அனுதினம் அனுபவிக்கும் ஆச்சரியமான ஆசீர்வாதமாய் இருக்கிறது. முதலாவதாக, நாம் இரட்சிக்கப்பட்டு கர்த்தரால் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம். அப்போஸ்தலர் நடபடிகள் (2:47). இவ்வுலகில் அநேக ஜனங்கள் நாம் முன்பு எப்படி பாவத்தில் இழந்து போயிருந்தோமோ அதைப்போல அவர்களும் இழந்து போன நிலையில்தான் இருக்கிறார்கள். நம் பாவங்கள் கழுவப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்வது ஓர் அளப்பரிய ஆசீர்வாதமாகும் (1 கொரிந்தியர் 6:11). அதேபோல் நாம் இப்போது தேவனோடு சரியான உறவில் இருப்பதும் ஓர் ஆசீர்வாதமாகும். இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களாக நாம் ஆராதிக்கிறோம், வேலை செய்கிறோம், ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொள்கிறோம். அதேபோல் தேவனோடு ஐக்கியம் கொள்கிறோம். தேவனுடைய குடும்பத்தில் நாம் அங்கமாய் இருப்பது ஓர் ஆச்சரியமான அனுபவமாகும். ஏனென்றால், தேவனுடைய குடும்பத்தில் நாம் கிறிஸ்தவர்களாக இணைந்து பணிபுரியவும், மேம்படவும் முடியும். ஒரு கிறிஸ்தவருடைய வாழ்க்கையில் ஆனந்தம் கொள்வதற்கும், ஆறுதலை அடையவும் கிறிஸ்தவ குடும்பம் என்று ஒன்று இருக்கிறது என்பதை அறிந்து கொள்வது ஓர் ஆச்சரியமான ஆசீர்வாதமாகும். சிலரைப் பொறுத்தவரை அவர்களுக்கு இருக்கும் ஒரே குடும்பம் சபைதான். நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாய் இருப்பதினால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் எப்போதுமே நினைவில் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிப்பது ஓர் மிகப்பெரிய ஆசீர்வாதமாகும். ஆனால், அந்த ஆசீர்வாதத்தை நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? அந்த ஆசீர்வாதத்தை நாம் நமக்குள்ளேயே வைத்துக் கொண்டிருக்கிறோமா? அல்லது அந்த ஆசீர்வாதத்தை உலகத்தோடு பகிர்ந்து கொண்டு வருகிறோமா? (மாற்கு 16:15-16). பாவத்தில் தங்களை இழந்து போய் இருக்கிறவர்கள் உண்மையாகவே இரட்சிக்கப்பட வேண்டும் என்று நாம் விரும்பினால் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியையும் அவருடைய சபையில் அங்கம் வகிப்பதினால் உண்டாகும் ஆசீர்வாதங்களையும் ஒட்டுமொத்த உலகத்திற்கும் பகிர வேண்டும் (1 தீமோத்தேயு 2;4). நம் ஜீவியங்கள்

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை இவ்வுலகத்திற்கு பகிர்ந்து கொடுக்கும் ஆசையினாலும், பொறுப்பினாலும் நிறைந்து இருக்கிறது என்று நான் நம்புகிறேன். நம்மால் பிறருக்கு செய்யும் மிகப்பெரிய நன்மை சிலுவையின் செய்தியையும், நம் ரட்சகர் நம் எல்லோர் மீதும் வைத்திருக்கும் அன்பையும் அவர்களுக்கு பகிர்ந்து கொள்வதாகத்தான் இருக்க முடியும். நாம் கிறிஸ்துவின் சபையில் அங்கமாய் இருப்பதினால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். எனவே, இந்த ஆசீர்வாதத்தை அனுதினமும் மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க நாம் ஒரு தீர்மானம் எடுப்போம்.

✝

**சபையில் அங்கமாய் இருப்பது கிறிஸ்தவர்களாக நாம் அனுதினம் அனுபவிக்கும் ஆச்சரியமான ஆசீர்வாதமாய் இருக்கிறது.**

---

## எருசலேமின் அலங்கங்கள் கட்டப்பட இஸ்ரவேலர் செய்தவைகள்

1) அவர்கள் ஜெபித்தார்கள்

2) அவர்கள் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தினார்கள்

3) அவர்கள் குறை சொல்பவர்களைக் கண்டு கொள்ளவில்லை.

4) அவர்கள் ஒவ்வொருவரையும் வேலையில் ஈடுபடுத்தினார்கள்.

5) அவர்கள் கவனம் சிதறாமல், வேலையில் மாத்திரம் சிந்தை வைத்தார்கள்.

# ஒரு வளரும் சபை

*A Growing Church*

Steve Higginbotham

**நா**ன் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்பாக கீழ்காணும் இரண்டு பதிவுகளை வாசித்தேன். அவைகளை யார் எழுதினார் என்பதுஎனக்குதெரியாது. ஆனால்,அதைப்பற்றியவிமர்சனங்களை நான்சேமித்துவைத்திருக்கிறேன். நீங்கள்இக்கட்டுரையைவாசித்து முடித்த பிறகு, என்னுடைய கருத்துக்களை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

1933-ல் Cled E.wallace என்னும் தேவதாசர் Gospel Advocate என்னும் ஆவிக்குரிய பத்திரிக்கையில் அமெரிக்காவில் உள்ள அர்கான்சாஸ் என்னும் இடத்தில் கூடி வந்த சபையைப் பற்றி ஒரு கட்டுரையை எழுதினார். அந்த சபைக்கு சொந்தமான இடத்தில் எண்ணெய் வளத்தை அவர்கள் கண்டுபிடித்தபடியால் அதன் காரணமாக அவர்களுக்கு பணம் கொழித்தது. அந்தப் பணத்தை எப்படி கையாள வேண்டும் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள். பணத்தை வைத்து என்ன செய்ய வேண்டும் என்பது அவர்களுக்குள்ளே ஒரு பெரும் பிரச்சனையாக மாறியது. கடைசியாக, ஒவ்வொருவருக்கும் லாபப் பங்கை சரிசமமாக பகிர்ந்து கொடுக்கலாம் என்று சபையிலே தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன் அடையாளமாக, ஒரு பெரிய முலாம்பழத்தை வெட்டி அதை ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பெரிய துண்டாக ஒவ்வொருவருக்கும் சரிசமமாகபகிர்ந்து கொடுத்தார்கள்.

ஆம், அந்த சபையார் அப்படித்தான் செய்தார்கள். பெரிய குடும்பங்கள் லாபப் பங்கை பெரிய அளவில் பெற்றுக் கொண்டன. ஆனாலும், அங்கே ஒரு புது பிரச்சனை எழுந்தது. அதாவது அந்தப் பணக்கார சபையில் அங்கம் வகிக்க அநேகர் போட்டி போட்டுக் கொண்டு உள்ளே நுழைய முயற்சித்தார்கள். அதன் காரணமாக அந்த சபையார் புதிதாக சபையில் யாரையும் சேர்க்கக்கூடாது என்று தீர்மானம் எடுத்தார்கள் (இதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா?).

மேற்சொல்லப்பட்ட சம்பவத்தை வாசித்து முடித்த பிறகு, கீழ்க்காணும் காரியங்களை குறித்து நீங்கள் ஆழமாக

ஆலோசிக்கும்படி நான் விரும்புகிறேன். ஓர் ஊழியருக்கு சபையில் எண்ணிக்கை தான் வேண்டுமென்றால், அந்த எண்ணிக்கையை அதிகரிக்க துரித வழி உண்டு. ஜனங்கள் விரும்புகிறதை அவர் கொடுத்தால் எண்ணிக்கை தானாகவே அதிகரித்து விடும். இன்றைய நாட்களில் வேகமாக வளரும் பல சபைகள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு சம்மந்தமே இல்லாத பல உலகப் பிரகாரமான பொருட்களை கொடுத்து, ஜனங்களை தங்களிடத்திலே இழுத்துக் கொள்கிறார்கள். ஜனங்கள் மனம் மாறாத நிலையில் பெரிய சபைகளை வைத்து என்ன பிரயோஜனம்?

இந்தக் கட்டுரையானது சபை வளர்ச்சிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் ஒருவருடைய ஆசையை அணைக்கும்படியாக வெளியிடப்படவில்லை. மாறாக, தேவன் சபை எப்படியாக வளர வேண்டும் என்று விரும்புகிறார் என்பதற்கான ஓர் நினைவூட்டலே. நாம் அனைவருமே சபைகூடும் இடங்களில் அநேக ஜனங்கள் வரவேண்டும் என்று விரும்புவோம். ஆனால், அதைவிட முக்கியமானது ஆத்துமாக்கள் பக்தி விருத்தி அடைந்து தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்வதுதான்.

இந்த வேளையில், தேவனாகிய கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு சொன்ன வார்த்தைகள் என் நினைவுக்கு வருகிறது. எசேக்கியேல் ஒரு தேவதாசராக இருந்தார். அந்த ஒட்டு மொத்த பட்டணமும் அவரைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தது. அவர் தன் வார்த்தைகளினாலே கேட்பவர்களை வசப்படுத்தினார். ஆனால், அவர்களுடைய வளர்ச்சியைப் பற்றி கர்த்தர் என்ன சொன்னார் என்பதைகவனியுங்கள்.

மேலும், மனுபுத்திரனே, உன் ஜனத்தின் புத்திரர் சுவர் ஓரங்களிலும், வீட்டு வாசல்களிலும் உன்னைக் குறித்து பேசி, கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட வார்த்தை என்னவென்று கேட்போம் வாருங்கள் என்று ஒருவரோடொருவரும், சகோதரனோட சகோதரனும் சொல்லி, ஜனங்கள் கூடி வருகிற வழக்கத்தின்படி உன்னிடத்தில் வந்து, உனக்கு முன்பாக என் ஜனங்கள் போல் உட்கார்ந்து, உன் வார்த்தைகளை கேட்கிறார்கள்; ஆனாலும், அவர்கள் அவைகளின்படி செய்கிறதில்லை; அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள்; அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது. இதோ, நீ இனிய குரலும், கீத வாத்தியம் வாசிப்பதில் சாமார்த்தியமுமுடையவன் பாடும் இன்பமான பாட்டுக்கு சமானமாயிருக்கிறாய்; அவர்கள் உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள்; ஆனாலும் அவைகளின்படி செய்யாமற்போகிறார்கள். எசேக்கியல் (33:30-32).

நம் தேவன் எண்ணிக்கையை விட வேறு ஏதோ ஒன்றை எதிர்பார்க்கிறார். அவர் அர்ப்பணிப்பை அதிகமாக எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷம் அதன் தூய நிலையில் பிரசங்கிக்கப்படும் போது, சத்தியத்தை உண்மையாக தேடுபவர் மனமாற்றம் அடைகிறார், கிறிஸ்துவின் சுவிசேஷம் கடின இருதயங்களையும் மாற்றி விடுகிறது. தூய கிறிஸ்துவத்தை பிரசங்கிப்பதும், நடைமுறைப்படுத்துவதும் கர்த்தர் எதிர்பார்க்கிற வளர்ச்சியை நிச்சயமாக கொண்டுவரும். நாமும் சரியான காரணங்களுக்காக இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வோம்.

முதல் நூற்றாண்டு ஜனங்களோடு இயேசு கிறிஸ்து பேசும்போது இவ்விதமாகச் சொன்னார். “அன்றியும், அவர் அவர்களை நோக்கி; இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்ஜியம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்” (மாற்கு 9:11).

இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பவுல் சிலர் தமது அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு உட்படுத்தப்பட்டார்கள் என்று சொன்னார் (கொலோசெயர் 1:13). அவர் சொன்னது சரிதான், முதல் நூற்றாண்டிலேயே ராஜ்ஜியம் இருந்தது. அதற்கு ஜனங்களும் இருந்தார்கள். மேலும், இயேசு கிறிஸ்து தம்முடைய ராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியதல்ல (யோவான் 18:36) தேவனுடைய ராஜ்ஜியம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார் (லூாக்கா 17:21).

✝



**(மத்தேயு 16:18-19) வசனங்களில் இயேசு கிறிஸ்து சபை மற்றும் ராஜ்ஜியம் போன்ற பதங்களை ஒன்றுக்கு மாறாக பயன்படுத்தி இருக்கிறார். சபை என்பது பிற்பாடு எழுந்த யோசனை அல்ல; அது கிறிஸ்துவின் ஆவிக்குரிய ராஜ்ஜியமாய் இருக்கிறது. இயேசு அவர் அதன் ராஜாவாக கடந்த 2000 ஆண்டுகளாக ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்.**

# இது ஒரு கவனிக்கத்தக்க எண்ணம்

## Betty Burton Choate

**தேவன் பார்க்கிற விதமாக நாம் நம் ஜீவியங்களை பார்த்தால், அவர் எதிர்பார்த்த விதமாக இல்லை என்பதற்காகவும், அந்தப் பாதை தேவனால் நமக்குத் தரப்பட்டது என்பதை அடையாளம் காணாதபடினாலும், எத்தனை சிறந்த பாதைகளை நாம் இழந்திருக்கிறோம் அல்லது ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறோம்?**

**இருந்தபோதிலும், தேவன் நம்மோடு இணைந்து செயலாற்ற விருப்பமுள்ளவராய், அவர் பொறுமையுடன் வேறு பாதைகளை நமக்குத் திறந்து அவைகளை நாம் சிறந்த முறையில் பயன்படுத்த நமக்கு உதவி செய்திருக்கிறார். நாம் தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறபடியால் எந்த வழிகளில் எல்லாம் நாம் அவரை அனுமதிக்கிறோமோ அங்கே எல்லாம் அவர் நம்மை எடுத்து பயன்படுத்துவார்.**

**பாதையின் இறுதியில் நம்முடைய விசுவாச குறைச்சலினாலும், தரிசன குறைச்சலினாலும், கீழ்ப்படிதல் இல்லாமையினாலும் நம்மையே நாம் மறுத்திருக்கிறோம் என்பதை தேவனால் மாத்திரமே அறிந்து கொள்ள முடியும்.**

**நமக்குள் இயற்கையாக அமைந்திருக்கும் திறமைகளைத் தாண்டி நாம் எந்த அளவுக்கு வளர்ந்து இருக்கிறோம் என்பது தேவனுக்கு மாத்திரமே தெரியும். ஏனென்றால், நம்மால் பார்க்க முடியாவிட்டாலும் அல்லது புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் நாம் அவருடைய கரங்களை பிடித்து நடக்கிறோம். அவரே நம்மை வழி நடத்தட்டும்.**

## இரட்சிக்கப்படுவதன் மூலமாக இழந்து போதல் / இழந்து போவதன் மூலமாகக் கண்டடைதல்

*Losing through Saving / Finding through Losing*

**Shane Fisher**

பரிசுத்த வேதாகமத்தில் பல இடங்களில் முரண்பாடு உள்ள வாக்கியங்கள் இடம் பெற்றிருக்கின்றன. நாம் இந்தக் கட்டுரையில் ஒருவர் தன்னுடைய சுயநலமான நோக்கங்கள் அல்லது இலக்குகளுக்காக தன்னை இரட்சித்துக் கொண்டு, இறுதியிலே தன்னை இழந்து போவதையும், இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் தன்னை இழந்து போய், இறுதியில் தன்னை கண்டடைவதையும் குறித்து பார்க்கப் போகிறோம். மேற்சொல்லப்பட்ட தலைப்பு ஒரு முரணாகத் தோன்றினாலும், இதிலிருந்து நாம் சில ஆவிக்குரிய உண்மைகளைகற்றுக்கொள்ள முடியும்.

இந்தக் கேள்வியை குறித்து சற்று ஆழ்ந்து யோசியுங்கள். ஒரு சிறு பிள்ளையாக பணத்தை சேமித்து வைக்க வேண்டும் என்று நீங்கள் ஆசைப்பட்டபோது உங்கள் பணத்தை உண்டியல், கண்ணாடிக் குவளை போன்றவைகளில் தானே சேமித்து வைத்திருப்பீர்கள். மேற்சொல்லப்பட்டவைகளில் பணத்தை சேமித்து வைத்தால், நீங்கள் எதையும் இழந்து போகமாட்டீர்கள் என்று அறிந்திருக்கிறீர்கள்.

என்னோடு கூட மற்றுமொரு கேள்வியை குறித்து எண்ணிப் பாருங்கள். உங்கள் பணத்தை நீங்கள் இழந்து விட்டதாக உணரும்போது, அதற்காக தேடும் முயற்சியில் ஈடுபடுவீர்கள் அப்படித்தானே? தான் வைத்திருந்த பத்து வெள்ளிக்காசுகளில் ஒரு வெள்ளிக் காசை இழந்து போன ஒரு ஸ்திரீயைக் குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்ன உவமையை சிந்தித்துப் பாருங்கள். அந்த ஸ்திரீ தான் வைத்திருந்த பத்து வெள்ளிக் காசுகளில் ஒரு வெள்ளிக்காசு இழந்து போனதை அவள் உணர்ந்து கொண்டாள். எனவேதான், அதைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி எடுத்தாள். லூக்கா 15:8, 9 வசனங்களில் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். “அன்றியும், ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாய் இருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணமால் போனால், விளக்கை கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் ஜாக்கிரதையாய் தேடாமல் இருப்பாளோ? கண்டுபிடித்த பின்பு, தன் சிநேகிதிகளையும் அயல்

வீட்டுக்காரிகளையும் கூட வரவழைத்து காணாமல் போன வெள்ளிக்காசை கண்டுபிடித்தேன், என்னோடு கூட சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா?

என்னோடு கூட மூன்றாவது கேள்வியையும் எண்ணிப் பாருங்கள். சாதாரணமாக, நீங்கள் ஏதோ ஒன்றை இழந்து போய் அந்தப் பொருளை தேடாமல் இருந்தால் அது உங்களுக்குக் கிடைக்குமா அல்லது நீங்கள் அதை கண்டுபிடிக்க முடியுமா? நிச்சயமாக இல்லை. இரண்டு வாரங்களுக்கு முன்பாக நான் என் கைப்பேசியை இழந்து விட்டேன். ஞாயிற்றுக்கிழமை அன்று சபை கட்டிடத்தின் பின்னால் பெஞ்சில் நான் அதை விட்டுவிட்டேன். உண்மையில் சொல்லப்போனால் நான் என் கைப்பேசியை இழந்து போகவில்லை, பெஞ்சில் விட்டு விட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். சபை அங்கத்தினர் ஒருவர் என்னை வீட்டு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கைப்பேசியை நான் சபை கட்டிடத்தில் விட்டு வந்ததை தெரிவித்தார். நான் என் கைப்பேசியை இழந்து போனதாக உணராதபடியால் உண்மையாகவே அதைத் தேடும் முயற்சியில் ஈடுபடவில்லை.

முரண்பாடு போல தோன்றும் இயேசுவின் வார்த்தைகளை ஜாக்கிரதையாக கவனியுங்கள். அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என் நிமித்தமாக தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான். மேற்சொல்லப்பட்ட இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளில் முரண்பாடு உள்ளது போல் தோன்றுகிறது. உன் வாழ்க்கையை இரட்சித்துக் கொள்வதுதான் உன் இலக்கு என்றால், நீ அதை இழந்து போவாய் என்று சொல்லுகிறார். அதைப்போல அவருக்காக நீ உன்னுடைய ஜீவனை இழந்துபோனால்,நீ அதைக் கண்டடைவாய் என்று சொல்கிறார்.

இந்தக் கட்டுரையிலும் சத்தியத்தின் குரல் பத்திரிகையின் அடுத்த பாகத்தில் வெளிவரும் கட்டுரையிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் போதிக்கப்பட்ட மூன்று காரியங்களைக் குறித்து நாம் ஆழ்ந்து சிந்திப்போம். முதல் காரியம் அல்லது முதல் கருத்து, விவாகம் மற்றும் விவாகரத்து சம்மந்தமான கேள்விகளை உள்ளடக்கியதாகும்.

கருத்து: விவாகத்தை குறித்து உலகத்தின் பார்வைக்கு நீங்கள் உங்களை ஒப்புக் கொடுத்தால் இரட்சிக்கப்படுவதன் மூலமாக நீங்கள் உங்களை இழந்துபோகிறீர்கள்.

✝

A. விவாகம் என்பது பரிணாம வளர்ச்சியின் ஏதோ ஒரு காலக் கட்டத்தில், அதாவது சில லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக மனித இனத்தால் உண்டாக்கப்பட்ட ஒரு சங்கமம்தான் என்பது உலகத்தின் கருத்தாய் இருக்கிறது.

B. விவாகம் என்பது உலகச் சந்தையில் ஒரு மலிவான பொருளாக இருப்பதால் அதை ஒழுங்கற்ற முறையில், தாறுமாறாக உடையக்கூடிய ஒரு பெட்டியைப் போல தூக்கி எறிந்து விளையாடலாம் என்பதுதான் விவாகத்தைப் பற்றி உலகத்தின்



பார்வையாய் இருக்கிறது.

C. விவாகம் சம்மந்தமாக வேதத்திற்கு புறம்பான முறையிலும், தாறுமாறாகவும் வாழ்ந்து கொண்டு சபையில் தொடர்ந்து நிலைத்திருக்க சில வாய்ப்புகளும் உண்டு. 1 கொரிந்தியர் ஏழாம் அதிகாரத்தின்படி மனைவியானவள் தன் புருஷனை விட்டு பிரிந்து போகக்கூடாது. அப்படி பிரிந்து போனால் அவள் விவாகம் இல்லாதிருக்கக்கடவள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. கட்டளையை மீறி சிலர் விவாகம் செய்து கொள்கின்றனர். அதைப்போல மத்தேயு 19:9-ஐ சிலர் துணிகரமாக மீறி வேறு விவாகம் செய்து கொள்கின்றனர். மத்தேயு 19:9 கிறிஸ்தவர்களுக்கிடையே நடக்கும் விவாகங்களுக்கு மாத்திரமே பொருந்தும். மேலும் 1 கொரிந்தியர், ஏழாம் அதிகாரத்தில் அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலேயே நிலைத்திருக்கக்கடவன். விவாகத்தைப்

பொறுத்தவரை கிறிஸ்தவர் அல்லாத ஒருவர் கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு அவர் கீழ்ப்படிய வேண்டிய அவசியமும் இல்லை. அதற்கு ஒத்துழைக்க வேண்டிய அவசியமும் இல்லை.

ஆனால், விவாகத்தைக் குறித்து தேவனுடைய பார்வைக்கு ஒப்புக்கொடுக்கும்போது இழந்து போவதன் மூலமாக நீங்கள் உண்மையில் ஜீவனைக் கண்டடைகிறீர்கள். விவாகத்தைக் குறித்து தேவனுடைய பார்வையானது சிருஷ்டிப்பின் ஆரம்பத்திலேயே அதாவது, சில ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பாக அவராலே ஏற்படுத்தப்பட்ட ஓர் உடன்படிக்கையாகும் (மத்தேயு 19:4-6). விவாகம் என்பது மிகுந்த கவனத்துடனும், அக்கறையுடனும் நீண்ட நாள் கையாளப்பட வேண்டிய ஓர் பொறுப்பாகும். மேலும், விவாகமானது, தேவனுடைய சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும் (மத்தேயு 19:1-12). இயேசு கிறிஸ்து விவாகத்தைப் பற்றியும், மறுமணத்தைப் பற்றியும் சொல்லும்போது "எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபச்சாரம் செய்கிறவனாயிருப்பான்" என்று தெளிவுபடுத்தி இருக்கிறார். மேலும், விவாகமானது கிறிஸ்து மற்றும் சபையை பற்றிய ரகசியத்தை வெளிப்படுத்த தேவனால் உண்டாக்கப்பட்ட ஒன்றாய் இருக்கிறது (எபேசியர் 5:22-33).

ஒரு கணவன், கிறிஸ்துவின் நிமித்தம் தன்னைத் தானே இழந்து, தன் மனைவிக்காக தன் ஜீவனை தியாகம் செய்ய விருப்பமுள்ளவனாக இருக்க வேண்டும். அதைப்போல மனைவியும், கிறிஸ்துவின் நிமித்தம் தன்னைத்தானே இழந்து, வீட்டின் தலைவனாகிய தன் கணவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக அவனுக்கு மரியாதையைக் கொடுக்க வேண்டும்.

## இழப்புகள்

**வாழ்க்கை முழுவதிலும் நாம் ஏதோ ஒன்றை இழந்து கொண்டு தான் இருக்கிறோம். அது உறவுகள் நமக்குப் பிரியமானவைகள், வேலை வாய்ப்புகள், ஆரோக்கியம் உடைமைகள், கனவுகள் அல்லது பாதுகாப்பு என்று எதுவாக இருந்தாலும் இழப்பு என்னும் அனுபவத்திற்குள்ளாக நாம் கடந்து வருகிறோம்.**

# பெண்கள் ஏன் சபையில் ஊழியம் செய்ய முடியாது?

*Why Can't woman serve in church?*

## Jack Wilkie

**ச**பை வாழ்க்கையில், பிரதானமாக ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனைக்குதான் அதிக கவனம் கொடுக்கப்படுகிறது. அப்போது வேத வகுப்பின் மூலமாகவும், பிரசங்கத்தின் மூலமாகவும், அதிகமான வேதாகம கல்வி அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாம் சிறு கூடுகையாக கூடி, நம்முடைய ஐக்கியத்தை வெளிப்படுத்தும் நேரத்தைத் தவிர பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆராதனை வேளையில் தான் நாம் ஒருவருக்கொருவர் ஐக்கியப்படுகிறோம். அதன் காரணமாக, நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லும் வாய்ப்பும், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும் வாய்ப்பும் ஞாயிற்றுக்கிழமைகளில்தான் கிடைக்கிறது (எபிரேயர் 3:13; கலாத்தியர் 6:2).

அதைப்போல், நாம் புதிய ஆத்துமாக்களுக்கு அழைப்பு விடுத்து, அவர்கள் ஆராதனையையும், ஐக்கியத்தையும் சபையில் அனுபவித்தார்களா என்று விசாரிப்பது போன்ற காரியங்களும், பெரும்பாலான ஊழிய முயற்சிகளும் ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில், ஆராதனை வேளையில்தான் அதிலும் குறிப்பாக நடக்கின்றன என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்.

சபையின் செயல்பாடுகள் என்று வரும்போது சபை கட்டடத்துக்குள் நடைபெறும் ஊழியங்கள் தான், அதிலும் குறிப்பாக ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் நடைபெறும் ஊழியங்கள் தான் அதிக முக்கியத்துவத்தை பெறுகின்றன. ஆனால், ஞாயிற்றுக்கிழமை ஆராதனையின்போது பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே உள்ளது என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். ஆனால், பெரும்பாலானோர் சபையில் பெண்கள் ஊழியம் செய்யும்படியாக தேவனால் அனுமதிக்கப்படவில்லை என்று சொல்வார்கள். நான் நேர்மை உள்ளவனாக இருந்தால் ஓரளவிற்கு அவர்கள் சொல்வதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். பெண்களின் சமத்துவத்தைக் குறித்து அதிகமாக பேசப்படும் இந்த நாட்களில் சபையில் அவர்களுடைய பங்களிப்பு அதிகமாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மேலும், சபை கட்டிடத்தை தாண்டியும் அவருடைய பங்களிப்பு தொடர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

சபையின் 90 சதவீத பணிகள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதால் அந்த நாளில் பெண்கள் ஆண்கள் மீது ஆதிக்கம் செலுத்தத்தான் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லையே தவிர, அவர்கள் சபையில் எந்த வேலையையும் செய்யக்கூடாது என்றோ, சபையில் பெண்களுக்கு எந்தப் பங்களிப்பும் இல்லை என்றோ வேதாகமம் எங்குமே சொல்லவில்லை. நிச்சயமாக பெண்கள் சபையில் இரண்டாம் தர அங்கத்தினர்கள் அல்ல. சபையில் பெண்கள் ஆண்களுக்கு பிரசங்கிப்பதையும், ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவதையும் தவிர மற்ற எல்லா வேலைகளையும் செய்ய அவர்கள் தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வேதாகமம் மிரியாம், அன்னாள் மற்றும் மரியாள் போன்ற மிகச்சிறந்த உதாரணங்கள் மூலமாக ஜெபிக்கின்ற பெண்களை குறித்தும், ஜெபத்தின் வல்லமையை குறித்தும் பதிவு செய்திருக்கிறது. நற்செய்தி நூல்கள் முழுவதும் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி அவருக்கு ஊழியம் செய்த பெண்கள் அவருடைய ஊழியத்தில் முக்கியப் பங்கு வகித்திருக்கிறார்கள். அவர்கள் 12 அப்போஸ்தலர்களில் ஒருவராக தெரிந்து கொள்ளப்படாவிட்டாலும்கூட மிகச் சிறந்த ஊழியத்தை செய்திருக்கிறார்கள்.

ஆவிக்குரிய மனதை உடைய முதிர் வயது உள்ள பெண்கள் தங்கள் ஞானத்தை வாலிப கிறிஸ்தவ பெண்களுக்கு பகிர்ந்து கொடுக்கும்படியாக கட்டளையிடப்பட்டு இருக்கிறார்கள் (தீத்து 2:4). சபையில் இளம் பெண்கள் வயதான பெண்களிடமிருந்து ஞானத்தை பெற்றுக் கொள்ள நாட்டம் செலுத்த வேண்டும். முதிர் வயதுள்ள பெண்களின் போதனை சபையில் இன்று மிகவும் அவசியப்படுகிறது.

நம்முடைய சபையின் ஆவிக்குரிய பெண்கள் துடிப்புடன் இருந்து சபை அங்கத்தினர்களின் ஜீவியங்களில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த, நாம் இந்த ஆவிக்குரிய பெண்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் அவசியமானதாகும். இணைய காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் பலவிதமான காரியங்களை கூகுளில் தேடுகிறோம். புதிய நண்பர்களை பேஸ்புக் மூலமாக இணைத்துக் கொள்கிறோம். அதேபோல ஆவிக்குரிய பிரகாரமாக உற்சாகமடைவதற்கு இணையத்தில் ஆலோசகர்களை தேடுகிறோம். எனவே, சபையில் உள்ள முதிர் வயது உள்ள ஆவிக்குரிய பெண்கள் வாலிபப் பெண்களுக்கு தேவனுடைய காரியங்களை போதிக்கத்தக்க நாம் அவர்களுக்கு வாய்ப்புகளை

வழங்க வேண்டும். வேதாகமத்தின் அடிப்படையில் பெண்களால் மூப்பர்களாக முடியாது. இருந்தபோதிலும், அவர்களால் ஆத்துமாக்களை வழிநடத்தி அவர்களுக்காக அக்கறைப்பட முடியும்.

நீங்கள் தேவனுக்கு பல வருடங்கள் சேவை புரிந்த ஸ்திரீயாக இருந்தால், சபையில் ஒன்று அல்லது இரண்டு இளம் பெண்களை நீங்கள் கண்டுபிடித்து, அவர்களுக்காக ஜெபித்து, அவர்களோடு வேத வாக்கியங்களைப் படித்து, அவர்களை உற்சாகப்படுத்துங்கள். நீங்கள் ஓர் இளம் பெண்ணாக இருந்தால், உங்கள் பிராந்திய சபையில் உள்ள, முதிர் வயதுள்ள ஆவிக்குரிய ஒரு பெண்ணை கண்டுபிடித்து, அவரோடு ஆவிக்குரிய உறவை வைத்துக் கொண்டு நல்ல ஆவிக்குரிய ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு, தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையை வாழுங்கள். ஆரம்பத்தில் இது இரண்டு பேருக்கும் அசௌகரியமாக இருந்தாலும்கூட, நாம் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்து ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தும்போது அந்த உறவு தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்ற ஒன்றாக இருக்கும்.

மேற்சொல்லப்பட்ட காரியங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வாக இருக்கும் என்று சொல்லி நம்பும் அளவுக்கு நான் ஒரு பேதையும் அல்ல. பெண்களை சபைக்கடுத்த காரியங்களில் ஈடுபடுத்த நான் சொன்ன ஆலோசனைகளை நிறைவேற்ற பல ஆண்டுகள் எடுக்கும். ஆனால், சபையாக நாம் பெண்களின் ஞானத்தையும், திறமைகளையும் தேவனுக்காக உபயோகப்படுத்த தவறினால் நாம் தேவனுக்கு சரியாக ஊழியம் செய்யவில்லை என்றுதான் அர்த்தம். தேவனுடைய ராஜ்யத்தில் தேவ பயமுள்ள, உண்மையுள்ள, ஜெபிக்கும் பெண்கள் மிகப்பெரிய சொத்துக்களாக இருக்கிறார்கள். ✝

## கிறிஸ்துவமும் பாடலும்

*கிறிஸ்தவம் ஒரு பாடும் மார்க்கமாகும்! தேவனுடைய ஜனங்கள் பாடுபவர்கள். உண்மையில் பாடல் என்பது கட்டளையிடப்பட்ட ஆராதனையின் ஒரு பங்காகும். (எபேசியர் **5:19**; கொலோ **3:16**). இருந்தபோதிலும் ஓர் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளைக்கு பாடல் என்பது கட்டளையைத் தாண்டிய ஒன்றாக இருக்கிறது. நாம் தனிப்பட்ட முறையில் தேவனை ஆராதிப்பதாக இருந்தாலும் சரி, பொது இடத்தில் தேவனை ஆராதிப்பதாக இருந்தாலும் சரி, துதி பாடல்களை ஏறெடுப்பதன் மூலமாக சிறந்த முறையில் ஆராதிக்க முடியும்.*

# முக்கிய வசனங்கள் மீதான துரித வர்ணனை

QUICK COMMENTARY ON CRUCIAL VERSES

(பிரசங்கி 12:1; 6-8).

நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை. தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும்

வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி, ஊற்றின் அருகே சால் உடைந்து, துரவண்டையில் உருளை நொறுங்கி,

இவ்விதமாய்மண்ணானதுதான்முன்னிருந்தபூமிக்குத்திரும்பி தேவனிடத்திற்குமறுபடியும் போகாததற்கு முன்னும்,அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை.

மாயை மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்.

## மாயையிலும் மாயை என்று நீங்கள் சொல்கிறீர்களா?

நம்முடைய வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் பல்வேறு காரியங்கள் நமக்கு முக்கியமானவைகளாக இருக்கும். புகழ், கல்வி, தனிப்பட்ட வெற்றி, செல்வம், பாதுகாப்பு உணர்வு, அங்கீகாரம் போன்றவைகள் எல்லாவற்றையும் மங்கச் செய்து இவைகள் ஓங்கி நிற்கின்றன. இவைகள் எல்லாம் நம் பிடியில் தான் இருக்கின்றன என்று உணரும் நேரத்திலேயே அவைகள் நம் கைகளில் இருந்து நழுவிச் சென்று விடுகின்றன.

நமக்கு வயதாகும் போது, நாம் இவ்வுலகில் கல்வியின் மூலமாகவும், அனுபவத்தின் மூலமாகவும் சம்பாதித்த ஞானம் மற்றும் நாம் பொக்கிஷமாக சேர்த்து வைத்த செல்வங்கள் நமக்கு முக்கியமற்றவைகளாக காணப்பட்டு அவைகள் அதன் பொலிவை இழந்து விடுகின்றன. இவைகளையெல்லாம் நாம் இவ்வுலகத்தை விட்டு, கடந்து செல்லும்போது நாம் எடுத்துக்கொண்டும் போக முடியாது. மேலும், இவ்வுலகில் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கால அளவு மிகவும் குறுகியது என்பதை நம்முடைய அன்றாட வாழ்வில் உணர்ந்து கொண்டு வருகிறோம்.

இவ்வுலகில் எல்லாமே மாயை என்று நாம் அறிந்து கொள்ளும்போது எது முக்கியமானது? எனும் கேள்வி நமக்குள் எழுகிறது. தேவனுடனான நம்முடைய உறவு ஒரு போதும் ஒழிந்து போகாததாக இருக்கிறபடியால் இவ்வுலகில் எல்லாவற்றையும் விட முக்கியமானதாக இருக்கிற தேவனுடனான உறவில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இது உண்மையாயிருக்கும் பட்சத்தில், இந்த ஜீவியத்தின் மாயைகள் எல்லாம் ஒரு நாள் மறைந்து விடும். நம் வாழ்க்கையில் இந்தப் பிரதான கவனத்தை நாம் நம்முடைய நண்பர்களோடும், பிள்ளைகளோடும், பிரியமானவர்களோடும், அயலகத்தாரோடும் பகிர்ந்து கொண்டால் நம் தேவனோடு முடிவே இல்லாத நித்தியத்தை கழிப்போம் என்று நிச்சயித்துக் கொள்ளலாம். அல்லேலுயா! ✝

# சிறப்பான ஊழியத்திற்கான ஆறு ஆலோசனைகள்

*6 Tips for Better Evangelism*

## Dale Jenkins

**ஊ**ழியம் என்னும் இவ்வார்த்தையைக் கேட்ட உடனே சிலருடைய இருதயத்திற்குள் குற்ற உணர்வு ஏற்படுகிறது. இவ்வார்த்தை சிலரை பயத்துடன் நடுங்கச் செய்கிறது. அப்படி இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

நாம் ஊழிய வாஞ்சை உள்ளவர்களாக இருக்கிறோம் என்பதன் பொருள் என்ன? இவ்வார்த்தையைக் கேட்ட உடனே சிலர் தங்கள் புருவங்களை உயர்த்துகிறார்கள். ஆனால், உண்மை நிலவரம் என்னவென்றால், நாம் பலவிதமான திட்டங்களை வகுத்து, ஊழியம் சம்மந்தமாக மிகச் சிறந்த பாடங்களை எடுத்துக் கொண்டு சென்றாலும், உண்மையில் ஊழியம் என்பது ஒரே காரியத்தில் அடங்கி விடுகிறது. அது என்னவென்றால், தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்த காரியங்களை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதாகும்.

சிலர், I பேதுரு 3:15யை போட்டு குழப்பி, நாம் அதன் உண்மையான பொருளைத் தொலைத்து விடும் அளவுக்கு செய்து விட்டார்கள். அவ்வசனம் மற்றவர்கள் கேட்கும் எல்லா கேள்விகளுக்கும் நாம் பதிலளிக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அதற்கு இணையான வசனம் என்ற சொன்னால் அது 11 தீமோத்தேயு 2:15 வசனமாய் இருக்கும். மேலும், 1 பேதுரு 3:15 மிகவும் கற்று அறிந்த நாத்திகர்களுக்கு எதிராக விவாதங்களை நடத்தும் அளவுக்கு நாம் கிறிஸ்தவ சாட்சியங்களை எல்லாம் கற்று அறிந்திருக்க வேண்டும் என்று போதிக்கவில்லை. அப்படிச் சில வேதாகம மாணவர்கள் செய்கிறார்கள். அதைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், எல்லோரும் அப்படி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அது போல் வசனம் வேத வாக்கியங்களின் நுணுக்கங்களை அறிந்து கொண்டு எடுத்துரைக்க சொல்வன்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று போதிக்கவில்லை.

1 பேதுரு 3:15 இவ்விதமாகத்தான் சொல்கிறது "உங்களில் இருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்". அதாவது நம்மிடத்தில் இருக்கும் நம்பிக்கையை குறித்து யாராவது நம்மிடம் விசாரித்து

கேட்டால், அவர்களுக்கு நம் நம்பிக்கையை வெளிப்படுத்தி விளக்க வேண்டும் என்று தான் சொல்கிறது. நமக்கு போதிக்கும் உபகரணங்களை பல ஆண்டுகளாக அளித்து வருபவர்களுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கும் அதே நேரத்தில் ஒரு கிறிஸ்தவர் அடிப்படையில் மிக எளிமையாக தேவனுடைய மீட்கும் கிருபை அவருடைய வாழ்க்கையில் எப்படி வந்தது என்பதை மற்றவர்களிடம் பகிர்ந்து கொடுக்கிறவராக இருக்க வேண்டும்.

ஊழியத்தைப் பொறுத்தவரை அதில் முக்கியமான காரியம் என்னவென்றால், ஒருவர் தேவன் தனக்கு கொடுத்த தாலந்தை சுவிசேஷத்தின் மூலமாக கிறிஸ்துவிடத்தில் மற்றொருவரை கொண்டு வருவதற்குப் பயன்படுத்துவதாய் இருக்கிறது (லூக்கா 8:39) ஊழியம் என்னும் வேதாகமக் கருத்தை குடிசைப் பகுதி வேத பாடம், நட்பு ஊழியம் என்று பல பதங்களோடு போட்டு சிலர் குழப்பிக் கொள்கிறார்கள். மேற்சொல்லப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் தவறு என்று நான் சொல்லவில்லை, ஊழிய சம்மந்தமாக நாம் எடுக்கும் முயற்சிகள் கிறிஸ்துவினிடத்தில் ஆத்துமாக்களைக் கொண்டு வர வேண்டும். இதற்கு D.T. Niles என்னும் வேத வல்லுனர் கிறிஸ்தவம் என்பது ஒரு பிச்சைக்காரர் மற்றொரு பிச்சைக்காரரிடம் தனக்கு உணவு எங்கே கிடைத்தது என்பதை அறிவிப்பது போன்றதாகும் என்று கூறுகிறார்.

இன்றைய நாட்களில், உலகில் வியாபார நிறுவனங்களில் நாம் பார்க்கும்பொழுது, ஒரு பொருளின் நற்தன்மையை பற்றி அல்லது ஒரு பொருளின் நற்காரியங்களை குறித்து மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும் பொருள் பரப்புரையாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அப்பொருளை பயன்படுத்திய பிறகு அதன் பயன் அதன் நற்தன்மைகளை தங்கள் வாயின் வார்த்தைகள் மூலமாக மற்றவர்களுக்கு சந்தைப்படுத்துகிறார்கள். சுவிசேஷத்தின் மூலமாக இரட்சிப்பை பெற்றுக் கொண்ட நாமும் சுவிசேஷத்தின் நற்தன்மைகளை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கிறவர்களாக இருக்க வேண்டும். அதாவது, சுவிசேஷத்தின் மூலமாக நாம் பெற்றுக் கொண்ட நன்மைகளை நம் வாயினாலே மற்றவர்களுக்குப் பரப்புகிறவர்களாக இருக்க வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஊழிய வாஞ்சை உள்ள சில சுவிசேஷகர்கள் சாப்பிடுவதற்கு ஓர் உணவகத்திற்கு போனால் கூட அங்கே வேலை பார்ப்பவர்களிடம் உங்களுக்கு இயேசுவை தெரியுமா என்று கேட்பது உண்டு. இன்னும் எனக்குத் தெரிந்த சில சுவிசேஷகர்கள் அவர்கள் தங்களோடு இணைந்து ஜெபிப்பதற்காக பலருக்கு அழைப்பு விடுப்பார்கள். ஊழிய வாஞ்சை உள்ள சில மருத்துவர்கள் தங்களிடம் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளிடம் சேர்ந்து வேதாகமத்தை

படிப்பார்கள். இயேசு கிறிஸ்துவைக் குறித்தும், அவருடைய சபையைக் குறித்தும் நாம் எவ்வளவு விருப்பம் உள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பது நம் ஊழிய வாஞ்சையை வெளிப்படுத்தும்.

தேவன் நமக்குச் செய்த நன்மைகளை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும் காரியத்தில் ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, விதையை விதைப்பது தான் நம்முடைய பணி, விளையச் செய்வது தேவனே (மத்தேயு 28:18-20; 1 கொரிந்தியர் 3:6). தேவனுடைய வார்த்தை வெறுமையாய் திரும்பாது என்பது அவருடைய வாக்குத்தத்தமாயிருக்கிறது (ஏசாயா 55:11). இப்போதெல்லாம் யாரும் சுவிசேஷத்தில் விருப்பம் காட்டுவதில்லை அல்லது சுவிசேஷத்திற்கு யாரும் நேர்மறையாக பதிலளிக்க மாட்டார்கள் என்றெல்லாம் சாக்குப் போக்கு சொல்வது இன்றும் ஜனங்களை இரட்சிப்பதற்கு சுவிசேஷத்திற்கு வல்லமை உண்டு என்பதை நாம் விசுவாசிக்கவில்லை என்றுதான் காட்டுகிறது(ரோமர் 1:16).

நான் என் வாழ்க்கையில் ஊழிய வாஞ்சை உள்ள மிகச் சிறந்த மனிதர்களை பார்த்திருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் என் வாழ்வின் 18 வருடங்களை அப்படிப்பட்டவர்களோடு செலவழித்துமிருக்கிறேன். என் தகப்பனாகிய ஜெர்ரி ஜென்கின்ஸ் ஒரு மிகச்சிறந்த சுவிசேஷகராக இருந்து தன்னுடைய தாழ்மையினாலும், சுவிசேஷத்தின் வல்லமையின் மேல் அவருக்கு இருந்த அளவில்லா நம்பிக்கையினாலும், ஆயிரக்கணக்கானோரை ஞானஸ்நானப்படுத்தினார். ஊழியம் செய்வது குறித்து மிகச் சிறந்த மனிதரிடமிருந்து நான் கற்றுக் கொண்ட சில காரியங்களை கீழ்கண்டவாறு நான் பதிவு செய்கிறேன்.

1) யாருக்கெல்லாம் போதிக்க வாய்ப்பு கிடைக்கும் என்று இன்று நீங்கள் நினைக்கிறீர்களோ அந்த நபர்களைப் பற்றிய பட்டியலை தயாரித்துக் கொள்ளுங்கள். அவர்களுக்காக அனுதினமும் ஜெபித்து, அவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துரைக்கும் வாய்ப்புகளை எதிர்பாருங்கள். உங்களிடம் அப்படிப்பட்ட பட்டியல் இருக்கிறதா?

2) வேத பாட வகுப்புகளுக்கு வழி வகுக்கும் வகையில் ஜனங்களோடு உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உதாரணமாக, என் அப்பா ஒரே உணவகத்திற்கு திரும்பத் திரும்பப்போய் அங்கே பணிபுரிபவர்களிடம் வேத பாட வகுப்பு நடத்துவார். அதைப்போல் என் அப்பா பல வங்கிகளில் கணக்கு வைத்துக் கொண்டு, அங்கே பணிபுரிபவர்களிடம் மறுபடியும், மறுபடியும் போய் அவர்களோடு வேத பாட வகுப்பை நடத்த

முயற்சித்து அதில் வெற்றிகளையும் பெற்றிருக்கிறார்.

3) ஊழியத்திற்கு செல்லும்போது, இன்னொருவரையும் உங்களோடு அழைத்துச் செல்லுங்கள். அதில் இரண்டு நன்மைகள் இருப்பதாக என் அப்பா நம்பினார். ஒன்று அவர் சோர்வடையும்போது இன்னொருவர் அவரோடு இருப்பது அவருக்கு பெலத்தைக் கொடுத்து, அவரை நன்றாக இயங்கச் செய்தது. இரண்டாவது, என் அப்பா தன்னோடு இருந்தவரை வைத்து மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க அவரை ஆயத்தமாக்கினார். இது இரண்டாவது நன்மையாக இருக்கிறது.

4) ஒருவருடன் நாம் வேத வாக்கியங்களை சேர்ந்து படிக்கும்போது, நாம் ஒருமித்து படிக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாமும் அவர்களோடு சேர்ந்து கற்றுக் கொள்கிறோம் என்பதையும் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். நாம் அவர்களிடம் எல்லாம் தெரிந்தவர்கள் போலவும் நடந்து கொள்ளக் கூடாது, அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று நினைத்துப் பேசவும் கூடாது.

5) நாம் ஒருவரிடம் சுவிசேஷத்தை அறிவிக்கும் நோக்கம் அவரை ஆதாயப்படுத்துவதாகத்தான் இருக்க வேண்டும். அவர்களிடம் நடத்தும் ஒவ்வொரு விவாதத்திலும் வெற்றி பெற வேண்டும் என்பது அவசியமல்ல. பல சமயங்களில் நாம் விவாதத்தில் வெற்றி பெற்றாலும் அந்த ஆத்துமாவை இழந்து விடுகிறோம்.

6) நாம் அவர்களிடம் தயவாய் நடந்து கொள்ள வேண்டும். எப்போதும் அவர்களுக்காக கதவுகளை திறந்து வைத்திருக்க வேண்டும். கர்வம், அதீத நம்பிக்கை, அகந்தை போன்றவைகள் அந்தக் கதவுகளை அடைத்து விடும். தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்கிற நாம் இது போன்ற செயல்களில் ஒரு போதும் ஈடுபடக்கூடாது.

நாம் இக்கட்டுரையிலிருந்து கற்றுக்கொண்ட பாடம் **நாம் ஜனங்களை நேசித்து, நாம் நேசிக்கும் கர்த்தரைப் பற்றி அவர்களிடம் பேச வாய்ப்புகளுக்காக எதிர்நோக்க வேண்டும்.**

✝

*He who lacks these things....*

# இவைகள் இல்லாதவன் எவனோ....

Therman Hodge

இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாய் இருக்கவொட்டாது.

இவைகள் இல்லாதவன் எவனோ அவன் முன் செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாய் இருக்கிறான் (2 பேதுரு 1:8, 9). இங்கே நாம் இரண்டு வேறுபட்ட கிறிஸ்தவர்களைப் பார்க்கிறோம். ஒரு சாரார், இந்தக் கிறிஸ்தவ பண்புகளைப் பெற்றிராதவர்கள். ஏன் சில கிறிஸ்தவர்கள் இத்தகைய கிறிஸ்தவ பண்புகளில் பெருகாமல் அல்லது வளராமல்இருக்கிறார்கள்?



இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் தங்களுடைய பழைய பாவங்கள் கழுவப்பட்டதை மறந்தவர்களாய் இருக்கிறார்கள். சில கிறிஸ்தவர்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் விழுந்து போவதற்கான முக்கிய காரணம், அவர்கள் தங்கள் பழைய பாவங்களிலிருந்து கழுவப்பட்டதை மறந்துபோவதுதான்.

அவர்கள் கீழ்க்கண்டவைகளை மறந்துவிட்டார்கள்:

தேவன் அவர்களிடத்தில் இவ்வளவாய் அன்பு கூர்ந்தார் என்பதை (யோவான் 3:16).

இரட்சிப்பதற்கு சுவிசேஷம் தேவபெலனாய் இருக்கிறது என்பதை (ரோமர் 1:16).

வேத வாக்கியங்களின்படி கிறிஸ்து அவர்களுடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதை (1கொரிந்தியர் 15:3-4).

அவர்களிடத்தில் அன்புகூர்ந்து, அவர்களுக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்பதை (1யோவான் 1:7).

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்பதை (எபேசியர் 2:8).

தேவனுடைய இரக்கத்தினாலே அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்பதை (தீத்து 3:5).

## மறப்பது என்பது ஆவிக்குரிய பிரகாரமாக மரிப்பதாகும்

சில கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக குருடர்களாய் இருக்கிறபடியால் அவர்களால் பார்க்க முடியாது. இரண்டு பேதுரு ஒன்றாம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கிற கிறிஸ்தவப் பண்புகள் நமக்கு உண்டாயிருந்து, அவைகளில் நாம் பெருகாவிட்டால் நாம் பார்வையில்லாத குருடர்களாகத்தான் இருப்போம். நாம் ஆவிக்குரிய பிரகாரமாக குருடர்களாய் இருந்தால் கீழ்க்காணும் காரியங்களைகாண முடியாது.

- சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை (எபேசியர் 1:3).
- சோதனைகள் வரும்போது தப்பித்துக் கொள்ளும் போக்கை (1கொரிந்தியர் 10:13).
- மோசமான மக்கள் நல்வாழ்க்கையை கெடுத்து விடக்கூடும் என்பதை (1கொரிந்தியர் 15:33).
- சிற்றின்பம் கொஞ்சகாலத்துக்குத்தான் என்பதை (எபிரேயர் 11:25).
- பரலோகத்தில் உண்மையாகவே அநேக மாளிகைகள் உண்டு என்பதை (யோவான் 14:1-3).
- ஆவிக்குரிய குருட்டுத் தன்மைக்கான மிகச் சிறந்த உதாரணம் லவோதிக்கேயா சபையாகும் (வெளிப்படுத்தின விசேஷம் 3:14-17).

நம்முடைய பழைய பாவங்களில் இருந்து நாம் கழுவி சுத்திகரிக்கப்பட்டதை ஒரு போதும் மறந்து போகாதபடி தேவன் நமக்கு உதவி செய்வாராக. இவ்வுலகத்தையும், அதன் பாடுகளையும் தாண்டி பரலோக மாளிகைகளை நாம் பார்க்க வேண்டும் என்றால் (2 பேதுரு 1:5-7) வசனங்களில் இடம் பெற்றுள்ள கிறிஸ்தவப் பண்புகளை நாம் பெற்றிருக்க வேண்டும்". இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். ✝

செயலில் கிறிஸ்தவம்

# மோசமான கலாச்சாரத்தின் மத்தியில் தாக்குப்பிடித்தல்

*Surviving in the midst of a deteriorating Culture*

Fenter D. Northern

**அ**மெரிக்க ஐக்கிய தேசத்தில், கடந்த நூற்றாண்டில் சற்று வேகமாகவீசியகலாச்சாரமாற்றம்என்னும்காற்றுஇப்பொழுதுபெரும் புயலாக உருவெடுத்து இருக்கிறது. உங்கள் கிறிஸ்தவ விசுவாசம் புதிய ஏற்பாட்டு சத்தியம் எனும் உறுதியான பாறையில் நங்கூரம் பாய்ச்சப் படாவிட்டால் குழப்பம் என்னும் நீர்ச்சுழலில் அடித்துச் செல்லப்படும் ஆபத்து உங்களுக்கு உண்டு. இப்படிப்பட்ட குழப்பத்தை ஏற்படுத்துகிறவர்கள் வாழ்க்கைக்கு புதிய அர்த்தத்தை கொடுத்து வேதாகமத்தின் எல்லா அறநெறிகளையும் நிந்தித்து கொஞ்சம்கூட சமுதாய அக்கறை இல்லாமல் வாய்க்கு வந்தபடி உளறுகிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கை சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டதும், மாம்ச இச்சைகளினால் திருப்தி அடையும் தற்காலிகமான வாழ்க்கையாய் இருக்கிறது. இத்தகைய மோசமான சமுதாயத்தில் வேதாகமம் பரிகாசப்படுத்தப்படுகிறது. இயேசு கிறிஸ்து ஒரு கற்பனை கடவுளாக எண்ணப்பட்டு, இயேசுவை விசுவாசிப்பவர்கள் எல்லா இடங்களிலும் வெறுக்கப்படுகிறார்கள். அதிகாரத்தை பிடிப்பதற்கான அவருடைய வழியில் எவைகள் எல்லாம் எதிராகத் தோன்றுகிறதோ அவைகளை எல்லாம் அடியோடு வெறுக்கிறார்கள். சோம்பேறிகளுக்கு அவர்கள் இலவசங்களையும், பல பரிசுகளையும் கொடுத்துப் பல குளறுபடிகளை செய்து தேர்தலில் வெற்றி பெற்று மக்கள் மீது தங்கள் விருப்பங்களை திணிக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் தங்களை கடவுள்களாக எண்ணி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். ஆட்சியில் அமருவதற்காக பதவிப் பசியில் அவர்கள் தேர்தலில் மோசடி செய்வதற்கும் நல்லவர்களின் புகழைக் கெடுப்பதற்கும் சற்றும் தயக்கம்காட்டுவதில்லை.

மேற்சொல்லப்பட்ட அசிங்கமான காரியங்கள் அரங்கேறும்போது, மனித பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற மனிதவியல் என்னும் விக்கிரக ஆராதனை சமுதாயத்தில் பிரசித்தமாகி விட்டது. இது பல சபைகளில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி, சபைகள் தங்கள் பலவீனமான விசுவாசிகள் சபையை விட்டு வெளியேறி, தாராளமய சபைகளில் சேராமல் இருக்க அவர்களும் சில தளர்வுகளை அறிவிக்க வழிவகுத்தன. சிலர் உலகத்தை பிரியப்படுத்த கிறிஸ்துவின் உபதேசத்தை கைவிட்டார்கள். முதல் நூற்றாண்டின் இறுதியில்

ஆசியாவில் இருந்த ஏழு சபைகளில் ஐந்து சபைகள் உண்மையான விசுவாசத்திலிருந்து விலகிச் சென்றதற்காக கடுமையாக தேவனால் கடிந்து கொள்ளப்பட்டன. புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டு இருக்கிற இந்தக் கடிந்து கொள்ளுதல்கள் கிறிஸ்துவின் சபைகளுக்கு எல்லா காலத்திலும் எச்சரிப்பாய் இருக்கின்றன.

கிறிஸ்துவின் மீதான அன்பும், சத்திய சுவிசேஷத்தின் மீதான அன்பும், உலகத் தன்மையை உதறிவிட்டு, உண்மை தேவனோடு இருக்க ஆசையைத் துாண்டும். அப்போது உலகத்தை பிரியப்படுத்துவதை விட தேவனை பிரியப்படுத்த ஒரு சபையானது முயன்று, அதை விரும்பி தேவனுக்குப் பிரியமாக காரியங்களை ஆற்றும்போது மோசமான கலாச்சாரத்தின் மத்தியிலும் சபையானது உயிரோட்டம் உள்ளதாய் இருக்கும். தம்மோடு இருக்க சிலர் எப்போதுமே வழிகளை கண்டுபிடிப்பார்கள் என்று இயேசு கிறிஸ்து சொல்லி இருக்கிறார். நாம் அவரோடு நிற்போம். இந்த மோசமான கலாச்சாரம் ஏற்படுத்தியிருக்கிற இருளின் மத்தியில், ஒளி வீசி கொண்டிருக்கிற சர்வதேச சத்தியத்தின் குரல் புத்தகத்திற்கு நன்றிகள் பல.

✝

## நம் ஜெபத்திற்கு தடைகளாக இருக்கும் ஆறு காரியங்கள்



1. **சந்தேகம்** ------▶ **(யாக்கோபு 1:6-7; மத்தேயு 11:22-24)**
2. **சாத்தான்** ------▶ **(எபேசியர் 6:12; 1 பேதுரு 5:8)**
3. **தகாத விண்ணப்பம்** ------▶ **(யாக்கோபு 4:3)**
4. **மாய்மாலம்** ------▶ **(மத்தேயு 6:5-8)**
5. **பெருமை** ------▶ **(லூக்கா 18:9-14)**
6. **பாவம்** ------▶ **(1 பேதுரு 3:7; யோபு 42:8)**

# ஆராதனை

*Worship*

**II நாளாகமம் 29:25**

**அ**வன் தாவீதும், ராஜாவின் ஞான திருஷ்டிக்காரனாகிய காத்தும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும் கற்பித்தப்படியே, கைத்தாளங்களையும் தம்புருக்களையும், சுரமண்டலங்களையும் வாசிக்கிற லேவியரை கர்த்தருடைய ஆலயத்திலே நிறுத்தினான்; இப்படிச் செய்ய வேண்டும் என்கிற கற்பனை **கர்த்தரால் அவருடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு உண்டாயிருந்தது** (11 நாளாகமம் 29:25). பழைய ஏற்பாட்டு ஆராதனை முறையில் இசைக்கருவிகள் மாத்திரம் வாசிக்கப்படவில்லை (சங்கீதம் 33:2; 43:4;71:22). பழைய ஏற்பாட்டு ஆராதனை முறைமையில் காளை, வெள்ளாட்டுக்கடா போன்றவைகள் சர்வாங்க தகன பலிகளாக செலுத்தப்பட்டிருக்கின்றன (லேவியராகமம் 16:1-9), அக்கினியின் மேல் துாப வர்க்கம் போடப்பட்டது (லேவியராகமம் 16:12,13; யாத்திராகமம் 30:7), நடனம் ஆடப்பட்டது. சாமுவேல் 6:14; சங்கீதம் 150:4) கைதட்டல் மற்றும் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரித்தல் போன்றவைகள் இடம் பெற்றிருந்தன. சங்கீதம் 47:1). இந்த ஒட்டு மொத்த பழைய ஏற்பாட்டு ஆராதனை முறைமையும் ரத்து செய்யப்பட்டு **சிலுவையின் மேல் ஆணியடிக்கப்பட்டது** என்பது நமக்கு தெளிவாகிறது (எபேசியர் 2:15-16; கொலோசெயர் 2:14-16).

மேலும், புதிய ஏற்பாட்டு ஆராதனை முறை உதடுகளின் கனியினால் பாடல் பாடுவது. (எபிரேயர் 13:15; ரோமர் 15:19;1 கொரிந்தியர் 14:15), தேவ செய்தி பிரசங்கித்தல், உண்மையான சுரமண்டலத்தை அல்ல (சங்கீதம் 71:22) மாறாக, மனித இதயம் எனும் சுர மண்டலத்தின் தந்திகளை மீட்டு கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணுவது (எபேசியர் 5:19), ஜெபிப்பது 1 தெசலோனிக்கேயர் 5:17), வாரத்தின் முதல் நாளிலே கர்த்தருடைய பந்தி (அப் 20:7) மற்றும் மனதில் நியமித்தபடி, கொடுத்தல் (1 கொரி. 16:1,2) போன்றவைகள் இணைக்கப் பட்டிருக்கின்றன. †

# நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?

*How do you measure up?*

**Betty Burton Choate**

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னை சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்: என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவம் செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன். நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும் போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்.

நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்: என்னைக் கழுவியருளும். அப்பொழுது, நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன். நான் சந்தோஷமும், மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும். அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும். என் பாவங்களை பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்; நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும் உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தை திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன். பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.

சங்கீதம் 51:1-4, 7-13.

# இன்று தீர்மானம் என்னுடையது

*The decision is mine Today*

**Paul mowrer**

இவ்வருடத்தின் பாதி நாட்களை நாம் கழித்து விட்டோம் என்னும் உண்மையை நம்பினால் நம்புங்கள். வேறு விதமாகச் சொன்னால், நாம் இவ்வருடத்தின் இரண்டாம் பாகத்தில் நின்று கொண்டிருக்கிறோம். இவ்வருடத்தின் ஆரம்பத்தில் நாம் எடுத்த புத்தாண்டு தீர்மானங்களை எந்த அளவுக்கு நிறைவேற்றி இருக்கிறோம்? அன்றாட வேத வாசிப்பு சவாலில் நீங்கள் எந்த அளவுக்கு சாதித்திருக்கிறீர்கள்? வேத வாக்கியங்களை வாசிக்கிற அந்தப் போட்டியில் நான் உங்களை விட முன்னிலையில் இருக்கிறேன் என்று நம்புகிறேன். ஆனால், இந்த வருடத்தின் தொடக்கத்தில் நான் எடுத்த சில புத்தாண்டு தீர்மானங்களை இன்னும் நிறைவேற்றாமல் இருக்கிறேன். நான் எடுத்த சில புத்தாண்டு தீர்மானங்களை நிறைவேற்றாமல் இருப்பதற்கு என்னிடத்தில் பல சாக்குப்போக்குகள் உண்டு. ஆனால், என்னிடத்தில் காரணங்கள் எதுவும் இல்லை. ஆம், சாக்கு போக்குகளுக்கும், காரணங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு. இங்கே முக்கியமான காரியம் என்னவென்றால், அந்தப் புத்தாண்டு தீர்மானங்களை நிறைவேற்ற நான் தீமானம் எடுக்கவில்லை.

நான் ஒரு கூட்டத்தில் பங்கு பெற்றேன். அதில் பேசிய பேச்சாளர்களில் ஒருவர் நம்முடைய தீர்மானங்களை நிறைவேற்றுவதில் நாம் ஏன் எப்போதுமே வெற்றி பெறுவதில்லை என்னும் கேள்விக்கான பதிலை என் மூளையில் பதிய வைத்தார். அதற்கான பதில் இதோ: இன்று கர்த்தரை பின்பற்றுவதற்கான தீர்மானம் என்னுடையது, இது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஏனென்றால், கர்த்தர் இதைக் குறித்து திரும்பத் திரும்ப பலமுறை சொல்லி இருக்கிறார். இதைக்குறித்து ஒரு நிமிடம் சற்று சிந்தித்துப் பாருங்கள். நாம் நிறைவேற்ற



வேண்டிய காரியங்களை நிறைவேற்றாமல் இருப்பதற்கு பல சாக்கு போக்குகள் உண்டு. ஆனால், நாம் நிறைவேற்ற வேண்டிய

காரியங்களை நிறைவேற்றாமல் இருப்பதற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. அந்த ஒரே ஒரு காரணம், நாம் எடுத்த **தீர்மானத்தை நிறைவேற்ற தீர்மானம் எடுக்காமல் இருப்பதுதான்.** உணவு கட்டுப்பாடு காரியத்திலும் நாம் தோற்றுப் போவதற்கான காரணம், வெற்றிக்கான முதல் படியை எடுத்து வைக்கும்படி நாம் தீர்மானிக்காமல் இருப்பதுதான். வீட்டிலும் கூட பொருள்கள் தாறுமாறாக சிதறி கிடக்கும்போது அதை நாம் ஒழுங்கு படுத்தாமல் இருப்பதற்கான காரணம், அப்படிச் செய்யும்படி நாம் தீர்மானம், எடுக்காமல் இருப்பதுதான். சிலர் அனுதினமும் வேத வாக்கியங்களை வாசிக்காமல் இருப்பதற்கும், வாரத்தின் முதல் நாள் தோறும் ஆராதனையில் பங்கெடுக்காமல் இருப்பதற்கும், காரணம் அவைகளைச் செய்யத் தீர்மானம் எடுக்காமல் இருப்பதுதான். நாம் எடுத்த தீர்மானங்களை நிறைவேற்றாமலிருக்க அல்லது அந்தக் குறிக்கோள்களை அடையாமல் இருக்க நம்முடைய வழியில் நாம் சில சாக்குப்போக்குகளை அனுமதித்திருக்கிறோம்.

"இன்று கர்த்தரைப் பின்பற்றுவதற்கான தீர்மானம் என்னுடையது" என்னும் வாக்கியத்தின் வெற்றி அவசியமான மூன்று முக்கியமான காரணிகளை உள்ளடக்கியிருக்கிறது. இங்கே முதலில் வரும் வார்த்தை "என்னுடையது" என்பதாகும். நான் செய்ய விரும்பாத ஒன்றை செய்யும்படி உதவி செய்யவோ அல்லது என்னைச் செய்ய வைக்கவோ யாராலும் முடியாது. உங்களுக்கு உதவி செய்ய மற்றவர்களை நீங்கள் அனுமதிக்கலாம். ஆனால், வெற்றி பெறுவதற்கு ஒரே வழி முதல் படியை நீங்கள் எடுத்து வைப்பதுதான். மேற்சொல்லப்பட்ட இலக்குகளில் அல்லது தீர்மானங்களில் நாம் என்ன செய்ய விரும்புகிறோம் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால், தனிப்பட்ட நபர்களாக நாம் தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கைகளைஎடுக்க வேண்டும்.

இரண்டாவது, நாம் கவனம் செலுத்த வேண்டிய வார்த்தை **இன்று** என்பதாகும். நம்மில் பலர் ஒத்திவைத்தல் என்னும் மோசமான பழக்கத்தில் இருப்போம் என்று நான் நம்புகிறேன். எனவே, இன்று என்பது உண்மையாகவே ஒரு முக்கியமான வார்த்தையாய் இருக்கிறது. இன்று செய்யப்பட வேண்டிய காரியங்களை நாம் சில நேரத்திற்கு ஒத்தி வைக்கலாம். ஆனால், பிற்பாடு செய்ய வேண்டிய காரியங்களைசெய்வதற்கு வாய்ப்புகள் கிடைக்காமலே போகலாம்.

மூன்றாவது, நாம் கவனம் செலுத்த வேண்டிய வார்த்தை **கர்த்தரை பின்பற்றுதல்** ஆகும். கர்த்தரை பின்பற்றுவதற்கு நமக்கு தடையாய் ஒன்று இருக்குமானால் அது நாம் தான். நீங்கள் கர்த்தரை பின்பற்றாமல் இருப்பதற்கு பல்வேறு சாக்குப் போக்குகளை சொல்லலாம். ஆனால், நீங்கள் கர்த்தரைப் பின்பற்றத் தீர்மானம் எடுப்பதற்கு மனதில்லாமல் இருக்கிறீர்கள் என்பதுதான் உண்மை. இன்றேகர்த்தரைப்பின்பற்றுவதற்குஒருதீர்மானம்எடுப்பீர்களா? ✝

# நிறம் மாறாத ரோஜாக்கள்

*Where the Roses Never Fade*

**Raymond Elliott**

இந்த வருட வசந்த காலத்தில் எங்கள் வேலிக்கம்பத்தில் பூத்துக் குலுங்கும் ரோஜா பூக்கள் மிக அழகாக இருக்கின்றன. ஆனால், கடந்த சில நாட்களாக அவைகள் மரிக்கும் தருவாயில் இருப்பதை குறிக்கும் விதத்தில் அந்த ரோஜாக்களின் நிறம் மங்கிப் போய் விட்டது. நான் பலமுறை அந்த ரோஜா செடிகளின் அருகில் சென்று ரோஜாக்களின் பிரகாசமான நிறத்தைக் கண்டு ரசித்திருக்கிறேன். ஆனால், சில நாட்களாக செடியிலிருந்து ரோஜாக்கள் கீழே விழுவது எனக்கு மிகுந்த துக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

நாம் சில வருடங்களுக்கு முன்பு நிறம் மாறாத ரோஜாக்கள் என்னும் ஒரு பாடலைப் பாடுவதுண்டு. அப்பாடலின் சரணத்தில் பொன் வீதிகள் நிறைந்த நகரத்திற்கு நான் செல்கிறேன், அங்கே ஜீவ விருட்சம் பூத்துக் குலுங்கும், அங்கே ரோஜாக்களின் நிறம் மங்குவதில்லை என்று பார்க்கிறோம். உண்மையாகவே, இப்பாடல் பொருள் பொதிந்த ஒரு பாடல் ஆகும்.

நிச்சயமாகவே, பரலோகில் உண்மையான ரோஜாக்கள் இருக்காது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இருந்த போதிலும், இந்த பாடலில் இருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள முடியும். இந்த ரோஜா பூக்களைப் போல ஒரு குறிப்பிட்ட காலத்தில் நம்மால் பூத்துக் குலுங்க முடியும். ஆனால், இறுதியில் நாம் உலர்ந்து உதிர்ந்துப் போவோம். I பேதுரு 1:24-25 வசனங்களில் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவும் இருக்கிறது; புல் உலர்ந்து, அதின் பூவும் உதிர்ந்தது.



கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே.

சங்கீதம் 90ல் அதன் ஆசிரியர், இப்பூமியில் மனிதனுடைய வாழ்வின் குறுகிய கால அளவைப் பற்றி எழுதியிருக்கிறார். “அவர்களை வெள்ளம் போல வாரிக்கொண்டு போகிறீர்; நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள் காலையிலே முளைக்கிற புல்லுக்கு

ஒப்பாயிருக்கிறார்கள். அது காலையில் முளைத்துப் பூத்து மாலையிலே அறுப்புண்டு உலர்ந்து போகும். நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து உமது உக்கிரத்தினால் கலங்கிப் போகிறோம் (வசனம் 5-6) 9,10 வசனங்களில் இந்த சங்கீதத்தின் ஆசிரியர் மரணத்தின் நிச்சயத்தைப் பற்றி வலியுறுத்துகிறார்.

"எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது; ஒரு கதையைப் போல் எங்கள் வருஷங்களைக் கழித்து போட்டோம். எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும் அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்து போகிறோம். ரோஜாக்கள் நிறம் மாறுவதில்லை என்னும் பாடல் வரிகளின் நேர்மறையான பக்கம் என்று பார்த்தால், அந்தப் பாடலில் தேவன் அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை. இப்படி எதிர்மறையான காரியங்கள் எதுவும் இல்லாத ஓர் இடத்துக்கு நான் போகிறேன் என்பதாய் இருக்கிறது (வெளி.21:4).

வயதான அப்போஸ்தலனாகிய யோவான் இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தில் உருவக நடையில் கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய ராஜ்யத்தின் அழகை விவரித்திருக்கிறார் (II பேதுரு 1:11). தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய ரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்களுக்கு ஓர் இடத்தை ஆயத்தம் பண்ணுவதற்காக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரலோகம் போய் இருக்கிறார் (யோவான் 14:1-3; வெளி. 7:14). ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டிருக்கிறவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டு இருக்கிற இடத்தில் ரோஜாக்கள் இருப்பதாக நாம் வாசிக்க முடியாது (வெளி.21:7). ஆனால், நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்கு போல சுத்தப் பொன்னாக இருந்தது என்று நாம் வாசிக்கிறோம் (21:21). மேலும், பளிங்கைப் போல் தெளிவான ஜீவத்தண்ணீர் உள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை பற்றி நாம் (22:1)ல் வாசிக்கிறோம். மேலும், யோவான் வெளிப்படுத்தின விசேஷம் 22:2ல் ஜீவ விருட்சத்தைப் பற்றி குறிப்பிட்டு இருக்கிறார். மேலும், நம் குறுகிய மனது நமக்கு பிரியமானவர்கள் இந்த உலகத்தை விட்டுக் கடந்து செல்லும் போது நம் இருதயங்களுக்கு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தும் மரணம் பரலோகத்திலேயே இராது என்னும் பேருண்மையைப் புரிந்து கொள்வதற்கு சிரமப்படும். இருந்தபோதிலும், நித்தியத்திற்கு தகுந்தாற்போல நம் அற்பமான சரீரம் மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபமாக்கப்படும் (1 கொரிந்தியர் 15:50-57).

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலேதான் நம் பாவங்களும் கழுவப்படுகிறது, நாமும் மீட்கப்படுகிறோம் (வெளி. 1:5; எபேசியர் 1:7). நீங்கள் பாவத்தைக் குறித்து குற்ற உணர்வு உள்ளவர்களாக இருந்தால், “இன்னும் நீங்கள் தாமதிக்கிறது என்ன? எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று உங்கள் பாவங்கள் போக கழுவப்படுங்கள்” (அப்போஸ்தலர் 22:16). இந்த பூமியில் நம் ஜீவன் போன பிறகு விலையேறப் பெற்ற கற்களால் நிறைந்த அந்த நகரத்துக்கு போவது நம் ஒவ்வொருவருடைய ஆசையாயிருக்க வேண்டும். இப்போது கேள்வி என்னவென்றால், உங்கள் பெயர்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றனவா? (வெளி.20:15). ✝

---

# தேவன் கிரியை செய்கிறார்



**நீங்கள் செய்ய முயற்சிக்கும் வேலையில் உங்களால் செய்ய முடிந்த எல்லாவற்றையும் செய்து முடித்த பிறகு அமைதியாயிருங்கள். தேவன் கிரியை செய்கிறார். அதை இப்போது உங்களால் கேட்க முடியாமலும், பார்க்க முடியாமலும், உணர முடியாமலும் இருக்கலாம். தேவன் சோம்பலாக இல்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.**

# தகப்பன்மார் தினத்தில் என்ன கொடுப்பது?

*What to Give on Father's Day?*

**John Gipson**

இச்சம்பவம் தகப்பன்மார் தினத்தன்று பிற்பகல் வேளையில் நடந்த ஒன்றாகும். நான்கு பிள்ளைகளுக்கு தகப்பனான பதிப்பாசிரியர் Normal Cousins அவர்கள் சிந்தனை செய்து கொண்டே ஒரு கப் காபியை மெதுவாகக் குடித்துக் கொண்டிருந்தார். தகப்பன்மார் தினத்துக்காக உங்கள் குழந்தைகள் ஏதாவது தந்தார்களா? இது பதிப்பாசிரியரிடம் பணிபுரிபவர்கள் எழுப்பிய கேள்வியாய் இருந்தது. ஆம், தந்தார்கள் என்று பதில் அளித்தார் பதிப்பாசிரியர். அவர்கள் தாய்மார்கள் தினத்தன்று செய்த செலவுகளுக்கான ரசீதை தந்தார்கள் என்றுசொன்னார்.

பொதுவாகவே, தகப்பனிடம் செலவுக்கு பணம் கேட்பதைவிட தாயிடம் கேட்டு வாங்குவது சற்று எளிதானது. ஏனென்றால், தகப்பன்மார்களைவிட தாய்மார்கள் உணர்வுகளுக்கு அதிகமாக இணங்கி விடுவார்கள். பெரும்பாலான தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளிடமிருந்து வாழ்த்து அட்டைகளோ, பரிசுப் பொருட்களோ வருமென்று எதிர்பார்த்து காத்திருப்பதில்லை. பிள்ளைகள் தங்கள் சொந்த செலவுகளை சந்திப்பதற்கு அவர்களுடைய பணத்தை பயன்படுத்த வேண்டும் என்றுதான் பெரும்பாலான தகப்பன்மார்கள் விரும்புவார்கள்.

இருந்தபோதிலும், தகப்பன்மார் தினத்தன்று என்ன கொடுக்க வேண்டுமென்று நீங்கள் குழப்பத்தில் இருந்தால், மாகாணத்தில் உள்ள பாபி டாக்கிரி என்னும் தேவதாசர் கொடுத்த விடையை விட சிறந்தவிடைஎனக்குதெரியாது. அவர் கீழ்கண்டவாறு எழுதுகிறார்.

தகப்பன்மார்கள் கீழ்ப்படிதலினால் கனப்படுத்தப்படுகிறார்கள். வேதாகமத்தில் உண்மையான கனம் என்பது எப்போதுமே கீழ்ப்படிதலோடு தொடர்பு படுத்தப்பட்டிருக்கிறது. பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாய் இருக்கிறது (எபேசியர் 6:1-3). இங்கே கீழ்படிதலுக்கும், கனத்துக்கும் இடையே உள்ள தொடர்பை கவனியுங்கள். ஒரு மகனோ அல்லது ஒரு மகளோ தன் தகப்பனுக்கு முன்பாக எதிர்த்து நிற்கும்போது அல்லது தகப்பனுடைய போதகத்துக்குத் துணிகரமாகக்

கீழ்ப்படியாமல் இருக்கும்போது அல்லது தகப்பனுடைய விருப்பத்தை நிறைவேற்றாதபோது, பிள்ளைகள் "நாங்கள் எங்கள் தகப்பனை கனப்படுத்துவதில்லை அல்லது அவருக்கு மரியாதை கொடுப்பதில்லை" என்று உரக்க உலகிற்கு சொல்லுகிறார்கள். பிள்ளைகள் மரியாதையற்ற மனப்பான்மையில் இருந்து கொண்டு தகப்பன்மார் தினத்தன்று எத்தனை பரிசுகளை அவருக்கு அள்ளி வழங்கினாலும் அது அந்த மரியாதைக்கு ஈடாகாது. பரிசுப் பொருளுக்கு பின்னால் மரியாதை இல்லை என்றால் அதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை.

அதே நேரத்தில், ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு தாவீது ராஜா தன் குமாரனுக்கு கொடுத்த ஆலோசனையை விட சிறந்த ஆலோசனையை கொடுக்கவே முடியாது.: "நான் பூலோகத்தார் யாவரும்போகிறவழியேபோகிறேன்;நீ திடன்கொண்டுபுருஷனாயிரு. நீ என்ன செய்தாலும், நீ எங்கே போனாலும், எல்லாவற்றிலும் புத்திமானாயிருக்கிறதற்கும், கர்த்தர் என்னை குறித்து: உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்கு தங்கள் தங்கள் வழியை காத்துக்கொண்டால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்ன தம்முடைய வார்த்தையை திடப்படுத்துகிறதற்கும், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி, நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும், நியாயங்களையும், சாட்சிகளையும் கைக்கொள்ள, அவர் வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக் காப்பாயாக" (1 ராஜாக்கள் 2:2-4).

✝

## வேண்டாமே ரெவரெண்ட்

மத உலகில் "ரெவரெண்ட்" என்னும் பட்டத்தை கனம் மற்றும் கௌரவத்தின் அடையாளமாகவும், ஒரு பிரசங்கியார் "ரெவரெண்ட்" எனும் பதவியை உடையவராக இருந்தால்தான் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும் என்று எண்ணுகிறார்கள். இன்னும் சிலர் பெயர்ப் பலகையில் தங்கள் பெயரை அலங்கரிக்கும்படியாக "ரெவரெண்ட்" போன்ற பட்டங்களை போட்டுக் கொள்கிறார்கள்.

# மகிழ்ச்சியாய் இருப்பதற்கான தெரிந்து கொள்ளுதல்

(பிரசங்கி 9:7-10)

*The Choice to be Happy*

**Denny Petrillo**

**நா**ம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் நமக்கு விருப்பமானவைகளைத் தெரிந்து கொள்கிறோம். நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமா அல்லது இருக்க வேண்டாமா என்பது நாம் எடுக்கும் தீர்மானங்களை பொறுத்தே அமையும். மற்றவர்கள் தான் நம் மகிழ்ச்சிக்கும், நம் துக்கத்திற்கும் காரணம் என்று ஓர் எண்ணம் இருந்தாலும் உண்மையாகவே மகிழ்ச்சி என்பது நம்மைச் சார்ந்தே இருக்கிறது. சாலமோன் ஞானி, ஒருவர் களிப்புள்ள இருதயத்தையும், மகிழ்ச்சியையும கண்டடைவதற்கு ஐந்து காரியங்களை ஆலோசனைகளாகச் சொல்கிறார்.

முதலாவது, ஒருவர் தனக்கு ஆகாரமும், தண்ணீரும் கிடைக்கிறது என்பதற்காக மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்.

இவ்வுலகில் பலர் பசியினாலும், பட்டினியினாலும் அனுதினமும் இறந்து கொண்டிருக்கிறார்கள். நமக்கு அனுதினமும் ஆகாரம் கிடைக்கிறது என்றால், நாம் அதைக் குறித்து நன்றி உணர்வு உள்ளவர்களாயிருக்க வேண்டும்.



இரண்டாவது, ஒருவர் தனக்கு உடுக்க உடை கிடைக்கிறது என்பதற்காக மகிழ்ச்சியாய் இருக்கவேண்டும் (வசனம்8).

ஒருவர் தனக்கு உடுத்திக் கொள்ளத்தக்க வசதியான உடைகள் இருந்தால் அதைக் குறித்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இந்த உலகத்தில் எத்தனையோ பேர் தட்பவெப்பநிலைக்கு தகுந்த வஸ்திரங்கள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஒருவருக்கு போதுமான அளவு வஸ்திரங்கள் இருந்தால், அவரிடத்தில் மகிழ்ச்சியான உணர்வு இருக்கவேண்டும்.

மூன்றாவது, ஒருவர் தனக்கு மருந்து கிடைக்கிறது என்பதற்காக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்(வசனம்8).

சாலாமோன் ஞானி எட்டாம் வசனத்தில் எண்ணெயின் நன்மைகளை குறிப்பிடுகிறார். பழங்காலத்தில் பெரும்பாலும் எண்ணெய் அதன் மருத்துவ குணத்திற்காக பயன்படுத்தப்பட்டது. அது மாத்திரமல்ல, வறண்ட சருமத்தை சரி செய்வதற்கான ஒரு களிம்பாகவும் பயன்படுத்தப்பட்டது. இவ்வுலகில் பலருக்கு மருந்து கிடைப்பதில்லை. மருந்தை வாங்குவதற்கான வாய்ப்பும் கிடைப்பதில்லை.

நான்காவது, ஒருவர் தனக்கு துணை கிடைத்திருக்கிறது என்பதற்காக மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் (வசனம் 9). மனைவியை கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான் (நீதிமொழிகள் 18:22). பல விவாகங்கள் மகிழ்ச்சியாய் முடிவதில்லை. திருமணமானவர்கள் ஏன் மகிழ்ச்சியாய் இருக்க முடியவில்லை? விவாக பந்தத்தில் இணைந்த அவர்களில் யாரோ ஒருவர் விவாகத்தில் முதலீடு செய்யத் தவறிவிட்டார் அல்லது இருவருமே தவறிவிட்டார்கள். இவர்களால் திருமணத்தை சிறந்த ஒன்றாக மாற்ற முடியவில்லை. அதைப்போல திருமணத்தின் மூலமாக தனக்கு கிடைத்த துணையில் திருப்தியில்லாத தம்பதிகளும் அநேகர் இருக்கிறார்கள். ஒரு கணவன் தன் மனைவி அல்லாமல் மற்ற பெண்களை குறித்து எப்போதும் சிந்திக்கிறவனாக இருந்தாலோ அல்லது ஒரு மனைவி தன் கணவன் அல்லாமல் வேறு ஆண்களை குறித்து எப்போதும் சிந்தித்துக் கொண்டிருந்தாலோ அங்கே திருப்தி இல்லாமை ஏற்பட்டு அது திருமண பந்தம் முழுவதும் புற்றுநோயைப் போல் பரவி விடுகிறது.

ஐந்தவாது, ஒருவர் தனக்கு வேலை கிடைத்திருக்கிறது என்பதற்காக மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் (வசனம் 10). தங்களுடைய வேலைகளை குறித்து சதா குறை கூறுகிற பலரை இவ்வுலகில் நாம் பார்க்கிறோம். அதே வேலையை செய்கிற வேறு சிலர் தங்களுடைய வேலைகளில் திருப்தியாய் இருக்கிறார்கள். எனவே, இங்கே வித்தியாசம் என்ன? ஒரு சந்தோஷமான வேலையாள் தன்னுடைய வேலையைப் பற்றி தனக்கு இருக்கும் நேர்மறையான மனநிலையை நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்று ஒரு தீர்மானம் உடையவராய் இருக்கிறார். தங்கள் வேலைகளில் திருப்தி இல்லாதவர்கள் ஒரு வேலையில் இருந்து மற்றொரு வேலைக்கு அடிக்கடி தாவி தர்மசங்கடமான நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். அக்கரைக்கு இக்கரை பச்சை என்னும் பழமொழியை பலர் மெதுவாக அல்லது தங்கள் வாழ்நாளில் தாமதமாகவே புரிந்து கொள்கிறார்கள்.

மகிழ்ச்சி கைக்கெட்டின தூரத்தில்தான் இருக்கிறது, அதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். ✝

# சிற்பி

*The Sculptor*

**Nat Evans**



ஒவ்வொரு பிரசங்கியும், பெற்றோரும், ஆசிரியரும் ஒரு சலவைக் கல்லை அங்கேயும், இங்கேயும் செதுக்கி கடைசியில் ஓர் அருமையான சிற்பமாக உருவாக்கும் ஒரு சிற்பியோடு ஒப்பிடப்படுகிறார்கள். இருந்தபோதிலும், நாம் பிரசங்கியார்களாக, பெற்றோர்களாக, ஆசிரியர்களாக தேவனுடைய வார்த்தைகளையும், வேதாகமக் கோட்பாடுகளையும் கொண்டு மிக நுணுக்கமாக ஜாக்கிரதையாக ஒரு கல்லை உளியால் செதுக்குவது போல ஒருவருடைய இருதயத்தை செதுக்கி அழகிய சிற்பமாக உருவாக்குகிறோம். நாம் ஆத்துமாக்களை நேசிக்கிறபடியால், அவர்கள் சிறந்தவர்களாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். நிச்சயமாகவே, ஒரு குழந்தையை சிறப்பாக நாம் உருவாக்க வேண்டும் என்று வரும்போது அக்குழந்தையையும் அதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று விரும்புகிறோம். இதை நாம் கீழ்க்காணும் வசனப்பகுதிகளில் காண முடியும்.

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா: இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம். கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். (சங்கீதம் 127:1,4,5). பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து: அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதிமொழிகள் 22:6) பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இதுவே நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே

வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக"(எபேசியர் 6:1-4).

தேவனுடைய வார்த்தைகளை பெற்றோர்களாக, ஆசிரியர்களாக இளம்பிள்ளைகள் உலகக் கடலில் பயணிப்பதற்கு முன்பாக நாம் அவர்களுக்கு போதிக்கத்தக்க சில காலம் மாத்திரமே இருக்கிறது. அதன் பின்பு சிறுவயதில் அவர்கள் கற்றுக்கொண்ட கல்வி மற்றும் எடுத்துக் கொண்ட பயிற்சி ஆகியவைகளின் அடிப்படையில் அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கான தீர்மானத்தை எடுக்க வேண்டியதாயிருக்கும். பெற்றோர்களாக, போதகர்களாக, சிற்பிகள் என்னும் நிலையில் அவர்களைச் செதுக்கும் வேலை எவ்வளவு சீக்கிரமாய் முடிந்து போகிறது. இந்த ஆரம்ப பயிற்சி காலங்களில் குழந்தைகளுக்கு அன்பும், வழிநடத்துதலும், அறிவுரைகளும் நீதி மற்றும் நட்பின் வழிகளில் அவசியமாகிறது. அதே நேரத்தில் அவர்களை ஒழுங்குபடுத்துவதும் நமக்கு அவசியமாகிறது. பயிற்சி காலத்தின்போது அவர்கள் **இல்லை** என்னும் வார்த்தையின் பொருளை கட்டாயமாக கற்றுக் கொள்ள வேண்டும்.

நம் இளம் பிள்ளைகளுக்கு சாத்தான், பாவம் மற்றும் பாடுகளைப் பற்றிச் சொல்லாமல் இருந்தால், நாம் எவ்வகையான பெற்றோர்களும், பிரசங்கியார்களுமாய் இருப்போம்? 1 பேதுரு 5:8; ரோமர் 3:23;6:23; மத்தேயு 25:46; (வெளி. 21:8). நம் வாழ்க்கை எப்போதுமே நேர்மறையாக இருக்காது. நாம் நம்முடைய மாதிரியின் மூலமாக இளம்பிள்ளைகளுக்கு நம் இரட்சகரின் அன்பைப் பற்றியும், கர்த்தருடைய சபையைப் பற்றியும், கிறிஸ்துவைப் பற்றியும் சொல்லும் அளவுக்கு அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நாம் அவர்களை சீர்திருத்தும் அளவுக்கு அவர்களிடத்தில் அக்கறை உள்ளவர்களாயிருக்க வேண்டும். நம் கர்த்தர் இவ்விதமாகச் சொன்னார்.

"நான் நேசிக்கிறவர்கள் எவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்: ஆகையால், நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு (வெளி. 3:19). எபிரெய எழுத்தாளர் கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று வலியுறுத்துகிறார் (எபிரெயர் 12:6)


இப்போது இளம்பிள்ளைகள் அவர்கள் தவறு செய்யும்போது சத்தியத்தைச் சொல்லிக்கொண்டு, அவர்கள் மீது அக்கறை கொண்டு, அவர்களைத்திருத்தும்பெற்றோர்களும்,பிரசங்கியார்களும்தான்

உண்மையாகவே தங்களை நேசிப்பவர்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் (கலாத்தியர் 4:16). இவ் வசனப் பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல், நான் உங்களுக்கு சத்தியத்தை சொன்னதினாலே உங்களுக்கு சத்துருவானேனோ? என்று கேட்கிறார்.

ஜனங்களுக்கு சத்தியத்தைச் சொல்லி, அவர்கள் வாழ்வில் உள்ள பாவங்களை வெளிப்படுத்தும் பிரசங்கியாரிடத்தில் எரிச்சல் அடைவதினால் அந்த ஜனங்களுக்கு என்ன நன்மை கிடைக்கும்? உண்மையாகவே, அந்த ஜனங்கள் செய்ய வேண்டியது எல்லாம் அவர்கள் தங்களுக்கு நேர்மையாய் இருந்து, தங்கள் பாவ பிரச்சினைகளைக் குறித்து உணர்வடைந்து காலதாமதம் ஆவதற்கு முன்பாக எதையாவது ஒன்றைச் செய்யத் தீர்மானிக்கத் வேண்டும். மனம் திரும்புவதற்கு பதிலாக பிரசங்கியாரிடத்திலே கோபப்படுவது எந்த விதத்திலும் நியாயம் அல்ல (லூாக்கா 13:3,5; அப்போஸ்தலர் 17: 30,31). ஒரு சலவைக் கல் பிடிவாதமாக சிற்பிக்கும், சுத்தியலுக்கும், உளிக்கும் ஒத்துழைப்பு கொடுக்க **மறுத்தால்** கல்லில் கலை வண்ணத்தைக் காண முடியாது.

✝

# கோபமும், பகை உணர்வும்



நம் அன்றாட வாழ்வில் நாம் பெரும்பாலும் பகை உணர்வை வெளிப்படுத்தாமல் அதை மனதுக்குள்ளேயே போட்டு புழுங்கிக் கொள்வோம். அது ஆழ்மனதில் சுடுந் தீயைப் போல கொழுந்து விட்டு எரிகிறது. மருத்துவர்களும், விஞ்ஞானிகளும் நம் உடல் உறுப்புகளில் உண்டாகும் பெரும்பாலான உயிர்க்கொல்லி நோய்கள் கோபத்தின் விளைவுகள்தான் என்று சொல்கிறார்கள்.

# எனவே, உங்கள் பிள்ளைகள் செழிப்பாயிருக்க நீங்கள் விரும்புகிறீர்கள்

*So, you want your children to prosper*

Bob Howton

கால காலமாக பார்த்தால் கூட நீதிமான்கள் தங்கள் பிள்ளைகளுக்காக ஒரு பொதுவான விருப்பத்தை கொண்டிருப்பதை நம்மால் காண முடியும். அவர்கள் தங்கள் பிள்ளைகள் கர்த்தரிலும் செழித்தோங்க வேண்டும், அதே நேரத்தில் பூமிக்குரிய வாழ்க்கையிலும் வளமாக வாழ வேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த விருப்பத்தை நிறைவேற்ற பல காரியங்கள் பங்காற்றினாலும் கூட விரும்பிய பலனை அடைய உத்திரவாதமான எந்த வழிமுறையும் இல்லை. பிள்ளைகள் கர்த்தரிலும் செழித்தோங்கி, பூமிக்குரிய வாழ்விலும் வளம் பெற ஒருவர் செய்யும் மிகச்சிறந்த செயல் பிள்ளைகள் சரியான பாதையில் நடக்க வேண்டும் என்று ஜெபித்து, அவர்கள் பூமியில் வாழும் வரை ஒளியில் நடக்க வேண்டும் என்று அவர்களை ஒழுங்குபடுத்துவதுதான். தேவனுடைய திட்டம் சரியானதும், உண்மையானதுமாய் இருக்கிறபடியால் நிச்சயமாக அது தவறாக இருக்க முடியாது. இருந்தபோதிலும், பலன் அல்லது விளைவு ஒவ்வொரு தனிப்பட்ட நபரைச் சார்ந்ததாகும். பழங்காலத்தில் ஒரு குடும்பத்தில் ஆறு பேர், எட்டு பேர் பிறந்தால் கூட அவர்கள் எல்லோரும் தனித்தனியாக நீதிமான்களாக இருந்ததை நாம் அறிந்திருக்கிறோம். அதே நேரத்தில் இன்றைய நாட்களில் ஒரு குடும்பத்தில் இரண்டு பேர் பிறந்தால் அதில் ஒருவர் மிகச்சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறார். மற்றொருவர் கீழ்ப்படியாமல் கலகக்காரராக மாறிவிடுகிறார். இங்கே வித்தியாசத்தை உங்களால் காண முடிகிறதா? தேவனுடைய வார்த்தை மீதான அவர்களுடைய மனநிலையும் தேவபக்தியுள்ள பெற்றோர்களின் அறிவுரைகளும்தான் இங்கே வித்தியாசத்தையும் ஏற்படுத்துகிறது.

தாவீது ராஜா தன்னுடைய கடைசி நாட்களில் தன் குமாரனாகிய சாலமோனுக்கு கீழ்கண்டவாறு அறிவுரை வழங்கினார்.

**நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன். நீ திடன் கொண்டு புருஷனாயிரு. நீ என்ன செய்தாலும், நீ எங்கே போனாலும், எல்லாவற்றிலும் புத்திமானாயிருக்கிறதற்கும் கர்த்தர் என்னைக் குறித்து: உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும், தங்கள் முழு ஆத்துமாவோடும் எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்கு தங்கள் வழியைக் காத்துக் கொண்டால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்ன தம்முடைய வார்த்தையை திடப்படுத்துகிறதற்கும், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும், நியாயங்களையும், சாட்சிகளையும் கைக்கொள்ள, அவர் வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக்காப்பாயாக.** (1இராஜாக்கள் 2:2-4).

நீங்கள் உங்கள் குழந்தைகள் கர்த்தரில் செழித்தோங்க வேண்டும் என்று விரும்பினால், அவர்களை நீதியில் போதித்து அவர்களுக்கு முன்பாக மிகச் சிறந்த உதாரணத்தை முன் வைக்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்யும் மிகச் சிறந்த காரியம் இதுவாகத்தான் இருக்க முடியும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இளம் ஊழியரான தீமோத்தேயுவைப் பற்றி மனதில் மகிழ்ச்சியை உண்டாக்குகிற செய்தியை அறிவிக்கிறார். "உன்னில் உள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூருகிறதினால் என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்தமான சாட்சியோடு ஆராதித்துவரும் தேவனை நான் ஸ்தோத்தரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறது என்று நிச்சயத்திருக்கிறேன். (11 தீமோத்தேயு 1:4,5). இந்த ஞானமான ஆலோசனையை தகப்பன்மார்களுக்கான பவுலின் ஆலோசனைகளோடு இணைத்துப் பார்த்தால், நாம் நம்முடைய பிள்ளைகளுக்காக விரும்பும் நீதியைப் பற்றிய சத்தியத்தை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். "பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிகிச்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" (எபேசியர் 6:4) பல ஆண்டுகளுக்கு முன்பாக ஞானி சாலமோன் இவ்விதமாக புத்திமதி வழங்கினார். "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து: அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதிமொழிகள் 22:6). முதிர் வயதிலும் அதை விடாமல் இருப்பான் என்னும் வார்த்தைகளை நீங்கள் கருத்தில் கொள்ளும்போது ஒருவர் ஒருமுறை இரட்சிக்கப்பட்டு விட்டால் அவர் எப்போதுமே இரட்சிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறார் என்னும் கால்வின் கொள்கைக்குள் விழுந்து விடக்கூடாது. நீதிமொழிகள் 22:6 யை எழுதின சாலேமோனைப் பற்றி வேத வசனம் விதமாகவும் சொல்கிறது. ராஜாவாகிய சாலமோன் பார்வோனின் குமாரத்தியை நேசித்ததும் அல்லாமல் மோவாபியரும், அம்மோனியரும் ஏதோமியரும் சீதோனிரும் ஏத்திருமாகிய அந்நிய ஜாதியான அநேகம் ஸ்திரீகள் மேலும் ஆசை வைத்தான் என்று தெளிவாகச் சொல்கிறது(1ராஜாக்கள் 11:1).

நித்திய தேவனுடைய வார்த்தைகள் வெறுமனே பக்கங்களை நிரப்பும்படியாக வெளிப்படுத்தப்படவில்லை. மாறாக, அவைகள் தேவ ஆவியினால் ஏவப்பட்டதாயும், பிழை இல்லாததாயும், அதிகாரம் உள்ளவைகளாகவும் இருக்கின்றன. இந்த வேத வாக்கியங்களைக் கொண்டுதான் கணக்கொப்புவிக்க வேண்டிய ஒவ்வொரு ஆத்மாவும் நியாயத்தீர்ப்பு நாளிலே நியாயந்தீர்க்கப்படும். வேத வாக்கியங்களின் அறிவுரைகள் யூகங்களினாலோ அல்லது திடீர் விருப்பங்களினாலோ விளைந்தவைகள் அல்ல. தேவனுடைய கிரியைகளினால் விளைந்த ஒவ்வொரு ஆலோசனையும் உண்மையாகப் பின்பற்றப்படும்போது அவைகள் நமக்கு நன்மை பயக்கின்றன. தேவனுடைய வாக்கியத்தில் பிழை ஒன்றும் இல்லை. எனவே, பிரியமானவர்களே ஒருவர் தனக்கும், தன்னுடைய பிள்ளைகளுக்கும் செய்யும் மிகச்சிறந்த காரியம் மரண பரியந்தம் தேவனுடைய வார்த்தையை உண்மையாக பின்பற்றுவதாய் இருக்கிறது. அப்படி ஒருவர் செய்யும்போது வாடாத கிரீடத்தை பெற்றுக்கொள்வது அதிக நிச்சயமாய் இருக்கிறது(வெளி.2:10).

*Textual Studies*

# மலைப்பிரசங்கத்திற்கு ஓர் அறிமுகம்

*An Introduction to the Sermon on the Mount*

*Matthew 5:1-3*

**Ronold D. Reevas**

மலைப் பிரசங்கத்தை (மத்தேயு 5:1-7:29) நாம் காலக்கிரம வரிசை அடிப்படையில் பார்க்கும்போது, இயேசு கிறிஸ்துவால் அவருடைய கலிலேயா ஊழியத்தின் போது செய்யப்பட்ட இந்தப் பிரசங்கமானது சுமார் ஒரு வருட காலம் நீடித்ததை நம்மால் காண முடியும் (4:17-14:12). இந்த கலிலேயா ஊழியம் இயேசு கிறிஸ்துவின் மூன்று கலிலேயா பயணங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. முதல் கலிலேயா பயணம் (4:23-9:34) அவருடைய போதனை, பிரசங்கம் மற்றும் சுகமளித்தலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. (5:1-9:34) வசனங்களில் மத்தேயுவால் பதிவு செய்யப்பட்டு இருக்கிற சம்பவங்கள் பிரதானமாக இயேசு கிறிஸ்துவால் முதல் பயணத்தில் செய்யப்பட்ட கிரியைகளுக்கு மிகச் சிறந்த உதாரணங்களாகத் திகழ்கின்றன. இந்தக் குறிப்பிட்ட வசனப் பகுதி காலக்கிரம அடிப்படையில் சம்பவங்களைப் பதிவு செய்யாமல் தலைப்பு ரீதியாக சம்பவங்களை பதிவு செய்திருக்கிறது. ஆனால், மத்தேயு 14:1ல், மறுபடியும் காலக்கிரம வரிசை அடிப்படையில் சம்பவங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

மத்தேயு (4:23-25) வசனங்களில் இயேசு கிறிஸ்துவின் முதல் கலிலேயா பயணத்தை சுருக்கமாக பதிவு செய்த பிறகு மத்தேயு ஆசிரியர் (5:1-7:29) வசனங்களில் மலைப்பிரசங்கத்தைப் பதிவு செய்தது மாத்திரமல்லாமல் அந்த மலைபிரசங்கத்திற்கு ஐந்தாம் அதிகாரம் 1, 2 வசனங்களில் ஓர் அறிமுகம் அல்லது முன்னுரையையும் கொடுத்திருக்கிறார். இந்த முன்னுரை பகுதி இப்பிரசங்கத்தின் இடத்தையும், சந்தர்ப்பத்தையும் அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் கூடி வருவதையும், அவருடைய போதனையின் ஆரம்பத்தையும் உள்ளடக்கியிருக்கிறது.

இந்த மலைப்பிரசங்கமானது இயேசு கிறிஸ்துவின் கலிலேயா ஊழியம் உச்சகட்டத்தில் இருந்தபோது செய்யப்பட்டதாய் இருக்கிறது. இதை நாம் அந்தப் பிரசங்கத்தைக் கேட்கக் கூடி வந்த திரளான கூட்டத்தை வைத்துப் புரிந்து கொள்ள முடியும் (4:25;5-1). இந்த மலைப்பிரசங்கம் பழைய பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த சீஷர்களின்

நிகழ்கால வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. அத்தோடு, இறுதி நியாயத்தீர்ப்பை குறித்தும் இது பேசுகிறது (5;21-28; 7:22-27). சுவிசேஷமும், நியாயப்பிரமாணமும் மலைப்பிரசங்கத்தின் முக்கிய அம்சங்களாக இருக்கின்றன. சுவிசேஷம் சம்பந்தமாக இயேசு கிறிஸ்து அதை பரலோக ராஜ்ஜியத்தோடு சம்மந்தப்படுத்தி இந்த மலைப் பிரசங்கம் முழுவதும் பேசுவார் (5;3,10; 6:10). நியாயப்பிரமாணம் சம்மந்தமாக இயேசு பேசும்போது நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றுவதற்காகவே வந்ததாக உறுதிப்படுத்துகிறார் (5:71,18). மேலும், இயேசுகிறிஸ்து கற்பனைகளை கைக்கொண்டு போதிக்கிற அவர்களே பரலோக ராஜ்யத்தில் பெயரிவர்களாயிருப்பார்கள் என்று தெளிவுபடுத்தினார் (5:19).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நியாயப்பிரமாணம் சம்மந்தமான போதனையை அதன் முழு அளவில் (5:21-48) வசனங்களில் முழுமூச்சாக வழங்குகிறார். மேலும், (7:21-27) வசனங்களில் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கான ஒரே வழி தேவனுடையசித்தத்தை செய்வதுதான் என்றுதெளிவுப்படுத்தினார்.

பிரசங்கத்தின் சந்தர்ப்பத்தையும் இடத்தையும் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள் (5:12) இப்பிரசங்கத்தின் சந்தர்ப்பம் அந்த மலையில் கூடியிருந்த திரளான கூட்டம் மற்றும் இயற்கையாகவே அவர்களுக்குள் அமைந்திருந்த ஆவிக்குரிய தேவைகள் மூலமாக அறியப்படுகிறது. இப்பிரசங்கத்தின் காலத்தைப் பற்றி மத்தேயு ஆசிரியர் எதையும் குறிப்பிடவில்லை. பிற்பாடு பாரம்பரியம், இந்த மலைப்பிரசங்கம் செய்யப்பட்ட இடம் கலிலேயே கடற்கரையின் அருகிலுள்ள திபேரியு பட்டணத்திற்கு மிகவும் அருகில் இருந்த ஓரிடம் என்று தெரிவிக்கிறது. லூக்கா ஆசிரியர் இந்த மலைப் பிரசங்க நிகழ்வுகளை ஒன்றன்பின் ஒன்றாக வழங்குகிறார். 1. அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறினார் (லூக்கா 6:12; மத்தேயு 5:1). 2. இரா முழுவதும் அவர் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார் (லூக்கா 6:12). 3. காலையில் இயேசு திரளான சீஷர் கூட்டத்திலிருந்து பன்னிரண்டு அப்போஸ்தலர்களை தெரிந்து கொண்டார் (லூக்கா 6:13-16). 4. இந்தப் பிரசித்திப் பெற்ற மலை பிரசங்கத்திற்கு பிறகு இயேசு சற்று உயரமான சமவெளிக்கு இறங்கி அனைவருக்கும் சுகம் கொடுத்து திரளான கூட்டத்தின் மத்தியில் அவருடைய சீஷர்கள் மத்தியிலும் பிரசங்கித்தார் (லூக்கா 6:17-20; மத்தேயு5:1).

மத்தேயு 5:1ல் இயேசுவின் இடத்தில் அவருடைய சீஷர்கள் வந்ததை கவனியுங்கள். இயேசு கிறிஸ்து சரியான வகையில் அமர்ந்த போது அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அந்நாட்களுடைய வழக்கத்தின்படி பிரசங்கியார்களும், போதகர்களும் கால் மேல்

காலை குறுக்கே போட்டு உட்காருவார்கள். அவர்கள் அந்த தோரணையில் பிரசங்கிக்கும்போது அல்லது போதிக்கும்போது அதைக் கேட்கிறவர்களும் அதே உடல் நிலையிலேயே உட்காருவார்கள். இங்கே இயேசுவினிடத்தில் சீஷர்கள் வந்தார்கள் என்று பார்க்கும் போது அது வெறுமனே 12 அப்போஸ்தலர்களை மாத்திரம் குறிக்காமல் ஒட்டுமொத்த சீஷர்களின் கூட்டத்தையும் குறிக்கிறது (லூக்கா 6:13-17). இந்த சீஷர்கள் கூட்டம் ஒட்டு மொத்தமாக இயேசுவினிடத்தில் வந்த கூட்டத்திலிருந்து வேறுபடுகிறது.

(மத்தேயு 5:2)ல் இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தின் ஆரம்பத்தைக் குறித்து ஆழமாக சிந்தித்துப் பாருங்கள். உபதேசிக்கும்படி இயேசு தமது வாயை திறந்து என்னும் சொற்றொடர் அந்த சந்தர்ப்பத்தின் மேன்மையை குறிக்கிறது. மேலும், இந்த வசனம் இயேசு கிறிஸ்து அவருடைய சீஷர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் தொடர்ச்சியாக போதித்து வந்தார் என்பதை உறுதி செய்கிறது.

†

## புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து எப்படியெல்லாம் அழைக்கப்பட்டார்?

1. **பிந்தின ஆதாம்** (1 கொரி 15:45)
2. **அல்பாவும், ஒமேகாவும்** (வெளிப்படுத்தின விசேஷம் 22:13)
3. **அப்போஸ்தலர்** (எபிரேயர் 3:1)
4. **மத்தியஸ்தர்** (1 தீமோத்தேயு 2:5, 6)
5. **வார்த்தை** (யோவான் 1:1)

# யோபு புத்தகத்தின் மூலமாக தேடுதல் வேட்டை

*Scavenger Hunt Through Job*

**Rebecca Rushmore**

1. யோபு முதன்முதலாக அறிமுகப்படுத்தப்படும்போது அவருக்கு எத்தனை குமாரரும், குமாரத்திகளும் இருந்தார்கள்?
2. யோபுவுக்கு ஆறுதல் சொல்ல அவரை சந்தித்த மூன்று நண்பர்களின் பெயர்களை எழுதுக?
3. யோபுவின் மூன்று நண்பர்களும் அவரோடு பேசுவதை ஏன் நிறுத்தினார்கள்?
4. யோபுவின் மூன்று நண்பர்களும் அவரோடு பேசுவதை நிறுத்திய பின்பு யோபுவோடு பேசிய இளம் வாலிபனுடைய பெயரை எழுதுக?
5. எங்கேயிருந்து தேவன் யோபுவுக்கு பதிலளித்தார்?
6. தேவன் யோபுவிடம் கேள்விகள் கேட்டபோது அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் இரு நட்சத்திரக் கூட்டங்களின் பெயர்களை எழுதுக?
7. எந்த மிருகத்தின் வால் கேதுரு மரத்தைப் போல் விவரிக்கப்பட்டிருக்கிறது?
8. எந்த மிருகத்தின் வாயிலாக அக்கினிப் பொறிகள் பறப்பதாக விவரிக்கப்பட்டிருக்கிறது?
9. எப்படி யோபு தன் மனந்திரும்புதலை விவரிக்கிறார்?
10. தேவன் எப்போது யோபுவின் சிறையிருப்பை மாற்றினார்?

*Bible Characters*

# சத்திரக்காரன்

*The Innkeeper*

**Dayton Keesee**



**ந**ம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்ன நல்ல சமாரியன் சம்பவம் அடிக்கடி பலரால் பகிரப்படுகிறது (லூக்கா 10:25-37). எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போன மனிதனை அடித்து, அவன் வஸ்திரங்களைஉறிந்துகொண்டு,அவனைக்காயப்படுத்தி,அவனைக் குற்றுயிராக விட்டுப்போன கள்ளர்களுக்கு அதிக கவனம் கொடுக்கப்பட்டு ஆவிக்குரிய பிரகாரமாக பலவிதங்களில் இது பொருத்திப் பார்க்கப்படுகிறது. இது சக்தி வாய்ந்தவர்கள் செய்வதெல்லாம் சரிதான் என்னும் **இரும்பு விதியை** நிரூபிக்கிறது. இது வெட்கத்திற்குரிய, சுயநலமாக, மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி அவர்களை அச்சுறுத்தும் மோசமான வாழ்க்கை முறையாகும். கள்வர்களால் காயப்படுத்தப்பட்ட மனிதன் விழுந்து கிடந்த இடத்தின் வழியே கடந்து சென்ற ஆசாரியனும், லேவியனும் பாதிக்கப்பட்ட மனிதனைக் கண்டு பக்கமாய் விலகிப் போனார்கள். இது **வெள்ளி விதியை** அடையாளப்படுத்துகிறது. அதாவது, மற்றவர்கள் நமக்கு

எதைச் செய்கிறார்களோ அதையே அவர்களுக்கு திரும்பச் செய்வதாகும். இச்செயல் எவ்விதமாக நியாயப்படுத்தப்படுகிறது என்றால் நான் யாரையும் பிரச்சனைக்குள் பிடித்துத் தள்ளவில்லை. எனவே, யாரையும் அவர்களுடைய வேதனையிலிருந்தோ, ஆபத்திலிருந்தோ, பிரச்சனையிலிருந்தோ தூக்கிவிட வேண்டிய அவசியமில்லை. இது மிகவும் மோசமான மனப்பான்மையாகும். இவ்வுலகில் பெரும்பாலான மக்கள் இவ்விதமான மனப்பன்மையைதான் கொண்டிருக்கிறார்கள். அடுத்ததாக, நல்ல சமாரியனுடைய செயல் **தங்கவிதியை** அடையாளப்படுத்துகிறது. அதாவது, மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் என்பதாகும் (மத்தேயு 7:12). இங்கே இந்த நல்ல சமாரியன் தயாராகி, பாடுபடும் ஆத்துமா மீது அக்கறை கொண்டு, அவனிடத்தில் போய், அவனைத் தூக்கி சிகிச்சை அளித்து, இன்னும் காயப்படுத்தப்பட்டவன் நன்றாகப் பராமரிக்கப்படும்படி சத்திரத்தில் கொண்டு போய் விட்டான். இந்த நல்ல சமாரியன் கள்ளர்களால் காயப்படுத்தப்பட்ட அந்த மனிதன் இன்னும் கூடுதலான கவனிப்பையும், நன்மைகளையும் அனுபவிக்கும்படி முன்பை விட சிறந்த இடத்தில் கொண்டு போய் விட்டான்.

ஆனால், இந்த நல்ல சமாரியன் சம்பவத்தில் நாம் பெரும்பாலும் கண்டு கொள்ளாமல் இருக்கும் ஒரு கதாபாத்திரம் இந்த **சத்திரக்காரன்** ஆகும். நாம் இந்த நல்ல சமாரியன் சம்பவத்திலிருந்து ஆவிக்குரிய பாடங்களை முழுமையாக கற்றுக்கொள்ள வேண்டுமென்றால் இந்தச் சத்திரக்காரன் கதாபாத்திரம் மிகவும் மதிப்புள்ளதும்,முக்கியமானதுமாகும்.

நல்ல சமாரியனுடைய கிரியைகள் ஒருவருக்கு சுவிசேஷத்தை அறிவித்து, அவருக்குள் விசுவாசத்தை உண்டாக்கி அதன் பின்பு வேதனையையும், கவலையையும் உண்டாக்குகிற பாவத்திலிருந்து கழுவப்பட ஒருவரை கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தும் ஒரு பிரசங்கியாருடைய அல்லது ஒரு போதகருடைய கிரியைக்கு ஒப்பாயிருக்கிறது (மாற்கு 16:15,16; அப்போஸ்தலர் 2:38; கலாத்தியர் 3:26-27). அதன்பின்பு, ஒருவர் பூரண சுகம் அடைவதற்காகவும், அதிகப்படியான பராமரிப்புக்காகவும் சத்திரமாகிய சபையில் இருப்பார்(1கொரிந்தியர் 12:13).

அந்த சத்திரக் காப்பாளர் வியாதியிலிருந்து சுகமான ஒருவர் பரிபூரண சுகம் அடைய அந்த நபருக்குத் தனிக் கவனமும், அக்கறையும் கொடுக்கும் ஒரு செவிலியரை போல் இருக்கிறார். கடந்த கால பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பட்டு சத்திரமாகிய சபையில் சேர்க்கப்படும் ஒருவருக்கு அவர் திவ்ய சுபாவத்தை அடையும் வரை தனிக்கவனமும், அக்றையும் கொடுக்கப்பட

வேண்டும் (1 பேதுரு 1:22-2:2 11 பேதுரு 1;3-4). சபையில் பலவீனமான ஆத்துமாக்களுக்கு சவால்களை கையாளத் தெரியாதபடியால் எப்படி இஸ்ரவேல் ஜனங்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து கலகம் செய்து எகிப்துக்கு திரும்புவதுபற்றி சதா பேசி தேவனை கோபப்படுத்தினார்களோ, அதேபோல் சபையில் விசுவாச குறைச்சலுடன் கலகம் செய்பவர்களுக்கும் அவர்களை ஒழுங்குபடுத்த புத்திமதியும், எச்சரிப்பும் அவசியமாய் இருக்கிறது (1 தெச.5:14-16).

ஒரு சத்திரக் காப்பாளருக்கு சத்திரத்தில் சேர்க்கப்படுகிறவர்களை சரீரப் பிரகாரமாக பலப்படுத்துவது சவாலான ஒன்றாகத்தான் இருக்கும். அதேபோல், சபையிலும் பல்வேறுபட்ட துன்மார்க்கமான வழிகளில் இருந்து மீண்டு வரும் ஆத்துமாக்களை ஆவிக்குரிய பிரகாரமாகவும், ஒழுக்க ரீதியாகவும் பெலப்படுத்துவது சவாலான ஒரு காரியம்தான். ஒவ்வொரு சபையும் திவ்ய சுபாவத்தை பெற்றுக்கொள்ள போராடிக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களை உள்ளடக்கிய ஒரு சத்திரம்தான். தெய்வ பக்தி உள்ள வளர்ச்சிக்கு அவர்களுக்கு உதவி அவசியமாய் இருக்கிறது. நீங்கள் ஒரு நல்ல சத்திரக்காரனாக இருக்கிறீர்களா?

†

---

## நிச்சயமற்ற வாழ்க்கை



இவ்வாழ்க்கை நிச்சயமற்றமதாக இருக்கிறபடியால் நாம் ஒவ்வொருவரும் ஆயத்தமாகி நித்தியத்திற்காக பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டும். இருந்தபோதிலும், இங்கே முரண் என்னவென்றால், மனிதனால் எதை சேமிக்க முடியாதோ அதை சேமிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறான். அந்த செயல்முறையின்போது அவன் சேமிக்க வேண்டிய நித்தியமானதை, ஆவிக்குரியதை இழந்து போகிறான். வரவிருக்கும் உலகத்துக்கு தன்னை ஆயத்தப்படுத்துவதற்கான அவசியம் மண்ணான மனிதனுக்கு சிறிதும் இருப்பது போல தெரியவில்லை.

# பர்னபா: ஊக்கப்படுத்துகிறவன்

*Barnabas: One who encourages*

## Jerry Kendali

**மெ**ன்மையான மக்களும், அன்பான வார்த்தைகளும் நம்மை உற்சாகப்படுத்தும் ஆறுதலான வார்த்தைகளுக்குச் சமமாகும். பல சந்தர்ப்பங்களில் ஒருவருக்கு மிகவும் அவசியம் அவரை உற்சாகப்படுத்த அல்லது அவருக்கு ஆறுதல் அளிக்க யாரோ ஒருவர் தேவை. நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களை நாம் ஒன்றிலே உற்சாகப்படுத்துகிறோம் அல்லது உற்சாகமிழக்கச் செய்கிறோம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் சோர்வாய் இருந்தபோது உங்களைத் தட்டிக் கொடுத்து தூக்கிவிட்டது யார்? ஆதிக்கிறிஸ்தவர்கள் தங்கள் ஆவிக்குரிய குடும்பத்தின் தேவைகளை ஆழமாக அறிந்து அதைக் குறித்து உணர்வுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் (அப்.2:44-47; 1 யோவான் 3:17-18). இந்த பர்னபாவைப் போல் நாமும் மற்றவர்களை உற்சாகப்படுத்துகிற அல்லது மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கிற மக்களாக இருக்க முடியும்.

மற்றவர்கள் முன்னேற உந்தும் சக்தியாய் இருங்கள் (அப்.18:27-28). பலவிதமான பிரச்சனைகளில் சிக்கித் தவிப்பவர்களை தூக்கிவிட்டு, அவர்களுக்கு வழிகாட்டி, அவர்களுக்கு ஆதரவாய் இருங்கள்; துயரமான வேளைகளில் துயரப்படுபவர்களுக்கு தோள் கொடுத்து இதமான வார்த்தைகளைப் பேசி, அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களுடைய இருதயங்களுக்கு மருந்தாய் இருங்கள் (அப்.27:37). மேற்சொல்லப்பட்ட காரியங்கள் எல்லாம் வார்த்தையினாலும், கிரியையினாலும், ஆராதனையினாலும் செய்யப்படுகின்றன (1தெச.2:9-112).

ஆறுதலை வெளிப்படுத்துங்கள் (யோவான் 1:19-31). ஆறுதலின் முகவராக இருக்க அல்லது ஆறுதலை பரப்புவராக இருக்க பிரயாசப்படுங்கள். துக்கத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதலைவிட நாம் பெரிதாக ஒன்றையும் கொடுத்து விட முடியாது (எபிரேயர் 6:18). உங்கள் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த நீங்கள் விரும்பும்போதும், மனதளவில் தளர்ந்து போயிருக்கும் போதும் நீங்கள் தொடர்பு கொள்ளும்படி உங்கள் தொடர்பு பட்டியலில் யார் இருக்கிறார்? துயரத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதல் உண்டாகத்தக்கதாக இதமான வார்த்தைகளை பேசுகிறவர்களாக நாம் இருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 14:3). ஒருவர் கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கு தீர்மானம்

எடுக்கும்போது, அவர் சந்தோஷத்தோடு உற்சாகப்படுத்தப்பட்ட நிலையிலே அதிலும் குறிப்பாக ஆறுதல் அடைந்தவராக திரும்பிப் போக வேண்டும்(அப்.8:39).

## கரங்களை பலப்படுத்த வேண்டும்

11 நாளாகமம் 32:6-8. எசேக்கியா ராஜா எருசலேம் நகரை அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் முற்றுகையிடப் போகிறதை அறிந்து தன் பிரபுக்களோடும், பராக்கிரமசாலிகளோடும் ஆலோசனை பண்ணினான். தேசத் தலைவர்கள் உற்சாகப்படுத்தப்பட வேண்டியது அவசியமாய் இருக்கிறது. அதேபோல், அவர்களும் மற்றவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். தலைவர்கள் அவர்களை பின்பற்றுபவர்களால் உற்சாகப்படுத்தப்பட்டுதிடப்படுத்தப்படுகிறார்கள்(உபாகமம்1:38;3:28;11 சாமுவேல்11:25) நீங்கள் உங்கள் மூப்பர்களை உற்சாகப்படுத்துகிறீர்களா, அவர்களுக்கு ஆறுதலாய் இருக்கிறீர்களா (எபிரெயர் 13:17)? மற்றவர்களை உற்சாகப்படுத்துவது அல்லது அவர்களுக்கு ஆறுதல் அளிப்பது என்பது தேவனுடைய அன்பைக் கொண்டு அவர்களுடைய தேவைகளை சந்திப்பதாகும்.

ஜாக்கிரதையாக உங்கள் வார்த்தைகளை தெரிந்து கொள்ளுங்கள் (நீதிமொழிகள் 15:4; யோவான் 16:5). உங்கள் வார்த்தைகள் பிறருடைய வாழ்க்கையைக் கட்டுகிறதா அல்லது இடித்துப்போடுகிறதா அல்லது நீங்கள் மற்றவர்களை குறித்து அக்கறைதான் படுகிறீர்களா? நம் வாழ்க்கை கட்டுதலையும், போராட்டங்களையும் உள்ளடக்கியதாய் இருக்கிறது (1 சாமுவேல் 30:3-25). ஒவ்வொருவருக்கும் தங்கள் மீது நம்பிக்கை வைக்கவும் தங்கள் பெலன்களை பாராட்டவும், தங்கள் பலவீனங்களை மேற்கொள்ள யாரோ ஒருவர் உதவி செய்யவும், தவறு இழைக்கும் போது தங்களை ஏற்றுக் கொள்ளவும் (வேதாகம போதனையோடு சமரசம் செய்யாமல்) ஒருவர் அவசியப்படுகிறார்(1தெலோனிக்கேயர்5:12-14).

தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து பாருங்கள் (ரோமர் 15;4). ஒருவர் தேவனுடைய வார்த்தையில் நிச்சயமாகவே நம்பிக்கையைக் கண்டடைய முடியும். மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் அநேக பர்னபாக்கள் சபைக்கு இன்றைய நாட்களில் அதிகமாக அவசியப்படுகிறார்கள். நாம் நம்முடைய போதகர்களை, சுவிசேஷ பணியாளர்களை, இளம் வாலிபர்களை, பெற்றோர்களை உற்சாகப்படுத்த வேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஆறுதலுக்கான அவசியத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதலை அளிக்க வேண்டியது நம் பொறுப்பாய் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பவர்கள் நம்மால் உற்சாகப்படுத்தப்பட வேண்டியது அவசியமாய் இருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், எல்லோருக்கும் ஆறுதல் அவசியமாய் இருக்கிறது. நீங்கள் மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் பர்னபாவாக இருக்கிறீர்களா?

# ரோமர் 5:8

“நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்”

தேவனுக்கான உங்களுடைய அன்பை நீங்கள் விளங்கப் பண்ணுகிறீர்களா?

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவான் 14;15-ல், இவ்விதமாகச் சொல்கிறார். “நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்” என்று

தேவனுடைய வார்த்தையை கேள்விப்பட வேண்டும் - ரோமர் 10:17

அதை விசுவாசிக்க வேண்டும் - மாற்கு 16:16

பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் - அப்போஸ்தலர் 17:30

இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டும் - ரோமர் 10:10

**“அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்கிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்” [மாற்கு 16:15,16]. எபிரேய பதமான “மேசியாவுக்கு “இணையான கிரேக்க பதம்” “கிறிஸ்து” என்பதாகும். கிறிஸ்து என்றால் “அபிஷேகம் பண்ணப்பட்டவர்” என்று பொருள். கிறிஸ்து என்பது அவருடைய கடைசி பெயரல்ல. மாறாக, அவர் யார் குறிக்கிறது. அந்த மாபெரும் அறிக்கையை நாம் அனுதினமும் செய்ய வேண்டும்.**

பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும் - (அப்போஸ்தலர் 2:38.)

உண்மையாக வாழ வேண்டும் - வெளி. 2:10

நாமெல்லாரும் தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது இக்கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்க வேண்டும்.


## சத்திய வழி

- ❖ பேச்சாளர்: **சகோ. P.R. சுவாமி**
- ❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்




- ❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**
- ❖ தமிழன் TV : செவ்வாய் மாலை 6:00 – 6:30 மணி
- ❖ நம்பிக்கை TV: வெள்ளி 8:00 – 8:30 மணி
- ❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



- ❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**
- ❖ தமிழன் : ஞாயிறு காலை 6:45 காலை 7.00 மணி
  அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ நம்பிக்கை TV : ஞாயிறு மாலை 3:30 காலை 4.00 மணி
- ❖ **Good News TV** செவ்வாய் இரவு 7:30 – 8.00 மணி
- ❖ பைபிள் பாடங்கள்: அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- ❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
- ❖ **English Quaterly Magazine** THE VOICE OF TRUTH INTERNATIONAL
- ❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

- ❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

- ❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய .............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ........................ காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

- ❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி


**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**


பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________

# 5 நிமிட வேத பாடம்

## வீணான வார்த்தைகள்

**Paula Bates**

1) மனுஷர் பேசும் _______ _______ யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே _______ என்று உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று ___________ அல்லது உன் வார்த்தைகளினாலே _______ என்று தீர்க்கப்படுவாய்என்றார் (மத்தேயு12:36,37).

2) _________________________ போல் பேசுகிறவர்களும் உண்டு; ஞானமுள்ளவர்களுடைய_____________ ஔஷதம் (நீதி.12:18).

3) அப்படியே வம்பும், _____________ பேச்சும், பரியாசமும் தகாதவைகள். ஸ்தோத்திரஞ்செய்தலே ____________ (எபேசியர்5:4).

4) உன் தேவனாகிய கர்த்தருடைய _____________ வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை ___________ வழங்குகிறவனை ___________ விடார் (யாத்.20:7).

5) ஆகையால் என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் _____________ பேசுகிறதற்குப் பொறுமையாயும்,கோபிக்கிறதற்கு_______________ இருக்கக் கடவர்கள். மனுஷருடைய கோபம் தேவனுடைய__________ நடப்பிக்கமாட்டாதே (யாக்கோபு1:19,20).

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்




## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
செவ்வாய் காலை 6.30 - 7.00 மணி

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

' திருமறை ஆசான் '
' கிருபையுள்ள வார்த்தை '
' வோர்டு ஆப் கிரைஸ்ட் '

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385